Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 456 பிலவ வருடம், மாசி மாதம் 04ஆம் திகதி புதன்கிழமை (16.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 14, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரும் மகஜரில் கையொப்பங்களை பெறும் நிகழ்வு நேற்று கோட்டை ரயில் நிலையம் முன்பாக நடந்தபோது, பிக்கு ஒருவர் அதில் கையொப்பமிடுகிறார். தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.

(படப்பிடிப்பு :- சமன் அபேசிறிவர்தன)

## ஒருவார காலமாக உயிருக்குப் போராடும் யானை



02 பக்கம்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கொழும்பில் திரண்ட தமிழ் அரசியல்வாதிகள்

02 பக்கம்

# 3 மாதங்களுக்கு மின்வெட்டில்லை!

## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு



யோ.தர்மராஜ்

மின்சாரத்தை அதிகம் பயன்படுத்தும் தனியார் நிறுவனங்கள் நான்கு மணிநேரம் ஜெனரேட்டர்களை பாவிப்பதோடு, உள்ளூராட்சி நிறுவனங்கள் 80 வீத நுகர்வை குறைக்கும்போது, நாட்டில் எதிர்வரும் 03 மாதங்களுக்கு மின்துண்டிப்பை முன்னெடுப்பதற்கான எவ்வித அவசியமுமில்லை - என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் நேற்று (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மின்சார சபையினால் இம்மாதம் முதல் ஏப்ரல் மாதம்வரை மின்சாரம் துண்டிக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட யோசனை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் விரிவாக ஆராயப்பட்டது. அதன்படி, இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தயாராக இல்லை. இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் இலங்கை மின்சார சபை அமுல்படுத்த... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



இப்ப இருக்கிற நிலைமையில கரண்ட் வெட்டினாலும் பரவாயில்ல பாருங்கோ...கரண்ட் பில்லாவது குறையும்...



வரலாற்று பிரசித்திபெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று மிகவும் விமரிசையாக இடம்பெற்றது.

# மிகைக் கட்டண வரி விதிக்கப்படவுள்ளவற்றில் ஊழியர் நிதியங்கள் உள்ளடங்கவில்லை



## நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தல்

ரூபா 02 ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமான வருமானம் ஈட்டும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடம் அறவிடப்படும் 25 வீத மேலதிக வரி ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்களிடம் அறவிடப்படமாட்டாது என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் நிதி அமைச்சர் விரிவாக விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# மக்களின் பணத்தில் கைவைக்க கனவிலும் அரசு நினைக்கவில்லை



02 பக்கம்

## வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன

# சதொசவில் அரிசி, தேங்காய் மற்றும் மஞ்சளை தொகையாக கொள்வனவுசெய்ய முடியாது

## வர்த்தக அமைச்சர் பந்துல அறிவிப்பு

யோ.தர்மராஜ்

சதொச விற்பனை நிலையங்களில் அரிசி, தேங்காய் மற்றும் மஞ்சள் ஆகியவற்றை மாத்திரம் கொள்வனவுசெய்ய முடியாது என்பதோடு, இவற்றை தொகையாகவும் கொள்வனவுசெய்ய முடியாது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 02 பக்கம்

# சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக நிறைவுற்றது

யோ.தர்மராஜ்

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து 09 நாட்களாக சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துவந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் இன்றுமுதல் (16) தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி அமைச்சர் தொடர்ந்து பேச்சு

## வர்த்தக அமைச்சர் பந்துல தகவல்

யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிகளுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி அமைச்சர் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றார். இது தொடர்பாக முழுமையான விளக்கத்தை அடுத்த அமைச்சரவையில் நிதி அமைச்சர் அறிவிப்பார் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 02 பக்கம்

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதானவர் 12 வருடங்களின் பின்னர் விடுதலை



02 பக்கம்

# ஹக்கீமின் பின்னால் ஒளிந்து அரசியல் செய்யவேண்டாம்

## ஐக்கிய மக்கள் சக்தி தலைமைகளின் முன்னிலையில் ஆதரவாளர்கள் தெரிவிப்பு

02 பக்கம்

### உஷ்



இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா பதவியை துறப்பது குறித்து ஆலோசித்து வருகிறாராம்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பில் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துவரும் கருத்துகள், தனது தொகுதி மக்களின் நிலைப்பாடுகள் என்பனவே அவரின் இந்த ஆலோசனைக்கான காரணம் என்கின்றன உள்ளகத் தகவல்கள்.

# தமிழ்க் கைதிகள் அச்சுறுத்தப்பட்ட விவகாரம்: விசாரணை முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பிக்குக!

## உயர் நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு

02 பக்கம்



# மனித உரிமையும் பொறுப்புக்கூறலும் எனது முன்னுரிமைக்குரிய விடயங்கள்

## இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி

02 பக்கம்

# அமைச்சரவைத் தீர்மானங்கள்!

## 2022.02.14 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏ மற்றும் எம் பல்கலைக்கழகத்திற்கும் (Texas A & M University) இடையிலான ஆய்வு ஒத்துழைப்பு**

மன அழுத்த நோயின் சிகிச்சைநிலை அறிகுறிகள் மற்றும் உயிரியல் இரசாயனப் போக்குகளுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி கற்றறிந்துகொள்வதற்கான ஆய்வுக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஏ மற்றும் எம் பல்கலைக்கழகத்திற்கும் (Texas A & M University) இடையில் பரிமாற்று ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மன இறுக்க (Autism) நோயின் சிகிச்சைநிலை அறிகுறிகள், குருதி மற்றும் சிறுநீரில் காணப்படும் வளர்சிதைவுக் கூறுகளின் சதவீதத்திற்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்திக்கொள்ளல், ஒவ்வொரு தரப்பினரதும் திட்டவட்டமான தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நோக்கமாகக்கொண்டு ஆய்வு ஒத்துழைப்புகளை நிறுவிக்கொள்வதே இவ்வொப்பந்தத்தின் நோக்கமாகும். அதற்கமைய முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. வீட்டுமட்ட பொருளாதாரப் பாதுகாப்பு (நிவாரணப் பொதி) வேலைத்திட்டம்**

2022ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட விரிவான பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் ஒரு வேலைத்திட்டமாக வீட்டுமட்ட பொருளாதாரப் பாதுகாப்பு (நிவாரணப் பொதி) வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வேலைத்திட்டத்தின்கீழ் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் குறைப்பதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குறைந்த வருமானங்கொண்ட 40 குடும்பங்களை விசேடமான அளவுகோல்களைப் பயன்படுத்தி குறித்த பிரதேச செயலாளரின் பரிந்துரைக்கமைய தெரிவு செய்து, அக்குடும்பங்களுக்கு 2,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் பயனாளிக் குடும்பங்களுக்கு டிஜிட்டல் அட்டையை வழங்குவதுடன், அவ்வட்டையைப் பயன்படுத்தி வீட்டுமட்ட பொருளாதார அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களை அடிப்படையாகக்கொண்ட சிறியளவிலான பல்பொருள் விற்பனை நிலையங்கள் மூலமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதற்கமைய, குறித்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04 பக்கம்

## ஹக்கீமின் பின்னால்...

**(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)**

சமகால அரசியல் நடவடிக்கைகள், கட்சி தொண்டர்கள், ஆதரவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அம்பாறையில் ஐக்கிய மக்கள் சக்தியை வலுப்படுத்த முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடும் மக்கள் சந்திப்பு கல்முனை தனியார் மண்டபம் ஒன்றில் ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி எம். எஸ். அப்துல் றஸாக் தலைமையில் நேற்று (15) நடைபெற்றது.




இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டார, ஐ.ம.சக்தியின் தேசிய பிரதித்தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான புத்திக்க பத்திரன, ஐ.ம.சக்தியின் தொழிற்சங்க தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முஜிபுர் ரஹ்மான், ஐ.ம.சக்தியின் கிழக்கு மாகாண அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இம்ரான் மஹ்ரூப், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், திகாமடுல்ல மாவட்ட அமைப்பாளருமான கலப்பதி உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கட்சி முக்கிய பிரமுகர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த கல்முனை பிரதேச ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள், சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டிணைந்து தேர்தல் கேட்பதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதித்துவம் தொடர்ந்தும் இழந்து வருவதாகவும், ஐ.தே. கட்சியும் கடந்த காலங்களில் இந்த பிழைகளையே விட்டதாகவும் வலியுறுத்தினர்.

மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், ஐ.தே. கட்சியை அழித்தது போன்று இப்போது ஐ.ம. சக்தியையும் அழித்து கொண்டிருக்கிறார். அவர்களை தலையில் தூக்கி வைத்து கொண்டு எமது சுயகௌரவத்தை இழந்து அவர்களின் பின்னால் ஒளிந்து கொண்டு வந்தால் நாங்கள் ஜே.வி.பியை ஆதரிக்க தயாராக உள்ளோம் - என்றனர்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள்,

எமது வாக்குகள் வீணாக மாற்று பங்காளிக் கட்சிகளுக்கு செல்வதை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். எம். மன்சூர், கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர், எம்.சி. அஹமட் காலத்திலிருந்து உத்வேகம் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். எமது விருப்பு வாக்குகளை கொண்டு ஏனைய கட்சி உறுப்பினர்கள் எம்.பியாகும் நிலை நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதனால் எமது ஆதரவாளர்கள் எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டார்கள். தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால் ஐக்கிய மக்கள் சக்தியும் அழிந்துவிடும். மக்கள் மயிலையும், மரத்தையும் நிராகரிக்கும் நிலைக்கு வந்து விட்டார்கள். கடந்த காலத்தில் விட்ட பிழைகளினாலேயே இன்று ஐக்கிய மக்கள் சக்தி பல வீழ்ச்சிகளை சந்தித்துள்ளது. தொடர்ந்து அரசியல் செய்வதாக இருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளி முஸ்லிம் கட்சிகள் விடயத்தில் அவதானம் தேவை என்றனர்.

## சுகாதார...

சம்பள முரண்பாடு உள்ளிட்ட 07 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 07 ஆம் திகதி தொடக்கம் சுகாதாரத்துறையின் தொழிற்சங்கங்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தன. அதன்படி, இலங்கை தாதியர் சங்கம், சுகாதார தொழில் வல்லுனர்கள் சங்கம், நிறைவுகாண் வைத்திய சேவை சங்கம் மற்றும் இடைநிலை வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடளாவிய ரீதியில் நேற்று (15) வரை ஒன்பது நாட்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தன.

இந்நிலையில், இந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று (15) எட்டாவது நாளாகவும் தொடர்ந்தமையினால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்நிலையில், சுகாதார அமைச்சர் கெஹே லிய ரம்புக்வெல்லவுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது, எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, இன்று (16) முதல் தங்களுடைய தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்தன.

எனினும், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது, தொழிற்சங்கங்களின் கோரிக்கை குறித்து அடுத்தவார அமைச்சரவையில் யோசனை ஒன்றை முன்வைப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால் தங்களுடைய போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக தொழிற்சங்கங்கள் அறிவித்திருந்தன.

எனினும், நேற்று (15) ஒன்றுகூடிய தொழிற்சங்கங்கள் அமைச்சருடன் எட்டப்பட்ட சில சில இணக்கப்பாடுகளுக்கு அமைய, தங்களுடைய போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் ஜனாதிபதி தலையிட்டு தங்களுடைய கோரிக்கைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## சர்வதேச நாணய...

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிகளுக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி அமைச்சர் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றார்.

மேலும், நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் அங்கத்துவ நாடு என்பதால் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றோம். இலங்கையின் நிலைமை தொடர்பாக அறிக்கையொன்றையும் தயாரித்துள்ளதாக நிதி அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்தார்.

எனவே, சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக அடுத்த அமைச்சரவையில் விரிவானதொரு விளக்கத்தைத் தருவதாகவும் நிதி அமைச்சர் அமைச்சரவையில் அறிவித்தார் - என்றார்.

## ஒருவார காலமாக...

திருகோணமலை - பன்குளம் பகுதியில் யானை ஒன்று குழிக்குள் விழுந்து சுமார் ஒருவார காலமாக மீட்கப்படாத நிலையில் உயிருக்குப் போராடி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். பன்குளம் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் உள்ள வாய்க்கால் ஒன்றினுள் இவ்வாறு குறித்த யானை விழுந்து உயிருக்குப் போராடி வருவதாக தெரியவருகிறது.

இந்நிலையில், குறித்த யானையைக் காப்பாற்ற முன்வருமாறு பொதுமக்கள் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

யானைக்கு என்ன நடந்தது பற்றி தெரியாது எனவும் இன்று 16ஆம் திகதி வைத்தியக்குழுவொன்று பன்குளம் பிரதேசத்துக்கு வருகை தர உள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மிகைக் கட்டண வரி...

இதன்படி, வருடாந்தம் 02ஆயிரம் மில்லியன் வருமானம் பெறுவோருக்கு மட்டுமே 25 வீத ஒரு நேர வரி அறவிடப்படும் என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

"2022 வரவு - செலவுத் திட்ட யோசனையை சமர்ப்பித்து என்னால் மேற்கொள்ளப்பட்ட வரவு-செலவுத் திட்ட உரையின் 68ஆவது பக்க 7.9 இல் ஒரு முறை மாத்திரம் அறவிடப்படும் வரி யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது.

அதில் 2000 மில்லியனை விட அதிக வரி வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நபர்களின் மீது சுமத்தப்படும் 25 சதவீத மிகை வரி குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரி ஊடாக சுமார் 100 பில்லியன் ரூபாவினை ஈட்ட எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறுதான் 68ஆம் பக்கத்தில் உள்ளது. அதன்படி, 69 பேரை இனங்கண்டிருந்தோம். இவர்களிடம் இருந்து 105 பில்லியன் வரி வருமானம் கிடைக்கும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்களை இதில் உள்ளடக்க நாம் எப்போதும் எதிர்ப்பார்க்கவில்லை. அதை நாங்கள் திட்டமிடவே இல்லை. எனினும், கடந்த அரசாங்கத்தின் 2017 இலக்கம் 24 உள்நாட்டு வருமான சட்டத்தில் இந்த 11 நிதியங்களும் வரி அறிவிட வேண்டிய நிறுவனங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இந்த மிகை வரிக்கு குறித்த நிதியங்களும் உள்ளடங்கும் என பொது மக்கள் மத்தியில் கருத்து பரவியுள்ளது. இதனை நாம் அமைச்சரவையில் விளக்கப்படுத்தி குறித்த 11 நிதியங்களையும் இந்த வரியில் இருந்து விடுவிக்க வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

06 - 03 - 1947



இறப்பு

14 - 02 - 2022

ஹோல்புறுக்கடை ஹணி அச்சக உரிமையாளர் பி.என். கிருஸ்ணகோபால் நேற்று முன்தினம் (14-02-2022) காலமானார். இவரது புதவுடல் நேற்று (15-02-2022) காலை 10.30 மணிக்கு தலவாக்கலை மின்மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவர் தோழர் கே. திலகதாதனின் தந்தை ஆவார். அத்துடன், எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தேசிய மக்கள் சக்தியின் சார்பாக அனைத்து தோழர்களுக்கும் தெரிவுபடுத்துகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி.
மட்டக்களப்பு மாவட்டக் கிளை
32/1 தாமரைக்கேணி வீதி
மட்டக்களப்பு

## 3 மாதங்களுக்கு...

வேண்டிய பல படிமுறைகளை நாம் வெளியிட்டுள்ளோம்.

இன்று (16) முதல் நீர்மின் உற்பத்தியை 50 சதவீதம் குறைத்து தினசரி அதிகபட்ச மின் உற்பத்தியை 05 ஜிகாவோட் மணி நேரமாக குறைக்க வேண்டும். அதன்படி, நீர் மின் நிலையங்களில் தினமும் 05 ஜிகாவோட் மணி நேரம் மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்போது அடுத்த மூன்று மாதங்களில் கிடைக்கும் நீரின் அளவை சமாளித்து, மழை பெய்யும் வரை நீர்மின் நிலையங்களில் மின் உற்பத்தியை முன்னெடுக்க முடியும்.

மின் உற்பத்தி நிலையங்களில் எரிபொருள் முடிவடையும் அல்லது இயந்திரம் செயலிழக்கும் போது மின் தடை ஏற்படுகிறது. அவசர தேவைக்கு தவிர வேறு எக்காரணம் கொண்டும் பராமரிப்புக்காக மின்இயக்க கட்டமைப்பை அகற்ற வேண்டாம் என இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளோம்.

இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருள் கப்பலுக்கு எவ்வித மேலதிக கட்டணமும் அறவிடப்படாது என அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார். அதேபோன்று, எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான டொலர்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் இணக்கம் தெரிவித்துள்ளார். இதன்படி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை நம்பியிருக்காது மின் உற்பத்திக்கு தேவையான டீசல் உள்ளிட்ட எரிபொருளை நேரடியாக இறக்குமதி செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதன் ஊடாக மின் துண்டிப்பில்லாது முன்னோக்கிச் செல்ல முடியும்.

அத்தோடு, அடுத்த மூன்று மாதங்களுக்குள் தடையில்லா மின்சாரத்தை வழங்க முடியும் என்பதோடு, அவசர மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டிய அவசியமுமில்லை. அவசர மின்சாரத்தை கொள்வனவு செய்யாமலேயே மின்சாரத்தை சேமிப்பதன் மூலம் மின்சார நெருக்கடியை பொதுமக்கள் மீது சுமத்தாமல் தீர்க்க முடியும். மின்வெட்டு இன்றி தற்போதைய மின் நெருக்கடிக்கு தீர்வு காண பொதுமக்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

மின்சாரத்தை அதிகம் பயன்படுத்தும் நிறுவனங்கள் தங்களிடமுள்ள ஜெனரேட்டரை பாவித்து 4 மணித்தியாலங்களுக்கு மின் உற்பத்தியை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு தேவையான நிபந்தனைகள் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொடர்மாடி குடியிருப்புகளிலுள்ளவர்கள் மாலை 06 மணிமுதல் 10 மணி வரை தங்களுக்கு குளிரூட்டிகளுக்கு தேவையிருப்பின் ஜெனரேட்டர்களை கட்டாயம் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், அனைத்து அரசு நிறுவனங்களும் மதியம் 2.30 மணி முதல் 4.30 மணி வரை குளிரூட்டிகளை பயன்படுத்தாது, தடையில்லா மின்சாரத்தை வழங்க உதவ வேண்டும். அத்தோடு, உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதி விளக்குகளை 80 வீதம் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் உற்பத்தி நிலையங்கள் தொடர்ந்து தேவையான அளவு எரிபொருளைப் பெறும் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள் பழுதடையாது என்ற அனுமானங்களின் அடிப்படையில், எதிர்கால மின் தேவை குறித்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

100 மெகா வோட் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்குமாக இருந்தால் மின்வெட்டு இடம்பெறாது. மாறாக, 200 மெகா வோட் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்கும்போது, ஒரு மணிநேர மின்வெட்டுக்கும் 300 மெகா வோட் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்கும் போது, ஒன்றரை மணிநேர மின்வெட்டுக்கும் மற்றும் 400 மெகா வோட் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்கும்போது, இரண்டு மணிநேர மின்வெட்டுக்கும் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்.

எனினும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய நிபந்தனைகளை கண்டிப்பாக கடைப்பிடிப்பதன் மூலமும் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் இவ்வாறான மின்வெட்டுகளை தடுக்க முடியும்- என்றார்.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை...

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி கொழும்பில் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்ததுடன், பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டு கையெழுத்துகளை பதிவு செய்திருந்தனர். இந்த கையெழுத்து வேட்டையானது நேற்று காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இடம்பெற்றது.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தில்...

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் – கரவெட்டியை சேர்ந்த ஒருவர் 12 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் (14) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில், நீதவான் சந்திம லியனகேவினால் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

இறுதி யுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கொழும்பில் நிதி சேகரித்து வழங்கிய குற்றச்சாட்டில் கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி கந்தப்பு ராஜசேகர் என்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கரவெட்டியை சேர்ந்த 56 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டு 12 வருடங்களின் பின்னர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமையால், அவரை விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

## தமிழ்க் கைதிகள்...

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை அச்சுறுத்தியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கை தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் சிலர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்த போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. எஸ்.துரைராஜா, அச்சல வெங்கப்புலி, அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுப்பது சம்பந்தமாக ஏற்கனவே நீதிமன்றம் அறிவிப்பாணை வெளியிட்டுள்ளதுடன் வழக்கிற்கு ஏதுவான சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு உயர் நீதிமன்றம், பொலிஸ் மா அதிபருக்கு இதற்கு முன்னர் உத்தரவிட்டிருந்தது.

மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதார் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், அந்த விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் கோருமாறு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இதனை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதியரசர்கள் அமர்வு, அந்த விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் பற்றிய அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் ஓகஸ்ட் 09 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

## மனித உரிமையும்...

மனித உரிமையும் பொறுப்புக்கூறலும் தனது முன்னுரிமைக்குரிய விடயங்களாக காணப்படும் என இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழும் இலங்கையர்களுடனான மெய்நிகர் சந்திப்பொன்றின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள புதிய தூதுவர் தனது பதவிக்காலத்தில் கொழும்பில் இலங்கை அரசாங்கத்துடன் பணியாற்றும் போது மனித உரிமைகள் சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம், மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறுதல் ஆகிய விடயங்களே தனது முன்னுரிமைக்குரிய விடயங்களாக காணப்படும் என தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டுறவை உருவாக்கும் விவகாரங்கள் இவை என புதிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜெனீவாவில் மனித உரிமை பேரவையில் மீண்டும் இணைந்துகொண்டுள்ளது என்பதை நினைவுபடுத்தியுள்ள அவர் எதிர்வரும் அமர்வில் இலங்கை நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை விவகாரங்களில் உறுதியான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும் என வலியுறுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

11ஆம் திகதி இடம்பெற்ற இந்த மெய்நிகர் சந்திப்பினை அமெரிக்க இராஜாங்க திணைக்களமும் இலங்கைக்கான புதிய தூதுவரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

கலிபோர்னியாவை தளமாக கொண்ட ஸ்ரீலங்கா பவுன்டேசனின் உதவியுடன் அமெரிக்காவில் வாழும் இலங்கையர்கள் இந்த மெய்நிகர் சந்திப்பிற்கு அழைக்கப்பட்டனர்.

## சதொசவில் அரிசி,...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சதொச விற்பனை நிலையத்தில் மானிய விலைக்கு விற்பனை செய்வதால் அரிசியை மாத்திரம் கொள்வனவு செய்ய முடியாது. சந்தை விலையை விட மிக குறைவான விலைக்கே நாங்கள் விற்பனை செய்கின்றோம்.

தற்போது சதொச விற்பனை நிலையங்களில் நாட்டரிசி ஒரு கிலோ 108 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 128 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், 10 கிலோ அடிப்படையில் ஐந்து பேர் கொள்வனவு செய்தால், ஏனைய நுகர்வோருக்கான வாய்ப்பு இல்லாதுபோகும்.

எனவே, அரிசி மாத்திரம் பெற்றுக்கொள்வதால் அதனை வியாபாரத்துக்கு உட்படுத்துவதால், அரிசியை மாத்திரம் கொள்வனவு செய்ய முடியாது. மஞ்சள், பருப்பு மற்றும் தேங்காய் ஆகியவை குறைந்த விலையில் விற்கப்படுவதாகவும் ஆனால் குறிப்பிட்ட நபர்கள் ஒரே நேரத்தில் அதிகளவில் கொள்முதல் செய்வதால், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக தனிநபர் ஒருவர் ஒரே நேரத்தில் மூன்று தேங்காய்களை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும். தொகையளவில் கொள்வனவு செய்ய முடியாது. அத்தோடு, இந்த நடவடிக்கையானது சராசரி இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையை போலி வர்த்தகர்கள் தவறாக பயன்படுத்துவதை தடுக்கும்.

எனவே, ஏனைய அனைத்துப் பொருட்களும் சந்தை விலைகளை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதால், தனி நபர்கள் சதொச விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார்.

## மக்களின் பணத்தில் கைவைக்க...

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வரி சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் (ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எவ்) என்பவற்றிலிருந்து 25 வீத மிகை வரியை அறவிடுவதற்கு நிதி அமைச்சர் கனவிலும் நினைக்கவில்லை. இது குறித்து யாரும் துளியளவும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (15) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போது, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிநபர், கூட்டு வியாபாரம் மற்றும் நிறுவனத்தினால் குறித்த வருடத்தில் பெற்றுக் கொள்ளப்படும் வருமானம் 02 பில்லியனுக்கு அதிகம் என்றால், அதிகரிக்கும் வருமானத்துக்கு ஏற்ப செலுத்த வேண்டிய வரிக்கு மேலதிகமாக 25 வீத மிகை வரி அறிவிடப்படும் என்றே வரவு – செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த மிகை வரியை அறவிடுவதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த நாட்டில் 02 பில்லியனுக்கு அதிகமான வருமானம் பெறும் தனி நபர், கூட்டு வியாபாரம் மற்றும் நிறுவனங்களிடமிருந்தே இந்த மிகை வரி அறவிடப்படும். மாறாக, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் (ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எவ்) என்பன உள்ளடங்காது. எனவே, ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எவ் என்பவற்றில் வரி அறவிடுவதற்கு நிதி அமைச்சர் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

ஆனால், கடந்த நல்லாட்சி காலத்திலும் டொலர் பிரச்சினை ஏற்பட்டபோது, நிதி உதவிக்காக சர்வதேச நாணயத்திடம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. அதற்கமைய, அவர்களின் நிபந்தனைகளுக்கு அமைய தங்களுடைய வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக அதிக வரிகளை அறவிட்டது. இதன்போது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் வழங்கப் பட்ட வரி மானியங்களையும் நீக்கம் செய்தனர். இதற்கமைய, 2017ஆம் ஆண்டு வரி வருமான சட்டத்தில் நிறுவனங்கள் என்ற வரைவிலக் கணத்துக்குள் ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எவ். உள்ளிட்டு ஓய்வூதியங்களையும் உள்ளடங்கியிருந்தது.

இதனாலேயே, இன்று ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எவ். போன்றவற்றிலும் கொள்ளையடிப்பதற்கு முயற்சிப்பதாக தவறான கருத்துகளை பரப்புவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே, ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எவ். போன்றவற்றில் 25வீத மிகை வரி அறவிடப்படாது என்பதோடு, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூல திருத்தத்தின் போது, நிறுவனம் என்ற வரைவிலக்கணத்துக்குள் உள்ளடப்பட்டுள்ள ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எவ் போன்றன திருத்தம் செய்யப்படும் எனவும் நிதி அமைச்சர் உறுதியளித்துள்ளார். எனவே, இவ்விடயத்தில் யாரும் துளியளவும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை – என்றார்.

# இன்றைய ராசி பலன்

**16.02.2022 புதன்கிழமை மாசி 4**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: ஆயிலியம்** மாலை 3.14 வரை
**மகம்** மாலை 3.14 - 17.02.2022 மாலை 4.11 வரை
**யோகம்: சோபனம்** இரவு 8.44 வரை
**அதிகண்டம்** இரவு 8.44 - 17.02.2022 இரவு 7.47 வரை
**திதி: பௌர்ணமி** இரவு 10.25 வரை
**அமர பட்ச பிரதமை** இரவு 10.25 - 17.02.2022 இரவு 10.40 வரை
**முற்கரணம்: பத்திரை** காலை 10.08 வரை
**பிற்கரணம்: பவம்** காலை 10.08 -இரவு10.25

**சுப நேரங்கள்**
காலை 6.27 - 7.56
மாலை 3.23 - 4.52

அசுப நேரங்கள்
**ராகு காலம்** காலை 12.25 - 1.54
**குளிகை காலம்** காலை 10.55 - பி.ப 12.25
**எமகண்ட காலம்** காலை 7.57 - 9.26
**துர் முகூர்த்தம்** பிற்பகல் 12.01 - 12.49

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வேலைத்தளத்தில் சில பிரச்சினைகள் உண்டாகலாம். பணிகளில் கவனக் குறைவை தவிர்த்து, பதவிக்கு பிரச்சினை ஏற்படாமல் இருப்பது நல்லது. மிக நெருக்கமானவர்களிடம் பிரச்சினை ஏற்படலாம். இறைவணக்கம் தேவை.

**ரிஷபம்:** பிறரை விமர்சனம் செய்வதை தவிர்ப்பது நல்லது. காதலில் வரம்பு நிலையும் நன்மை. செலவுகள் அதிகரிக்கலாம். பிரச்சினைக்குரிய விடயங்கள் வெளிவரலாம்.

**மிதுனம்:** தொழில்நுட்ப வேலைகளில் ஆர்வம் மேம்படும். இல்லத்தில் ஆன்மீக வழிபாடு நடைபெறலாம். பணியிடங்களில் பொறுப்பதிகரிப்புடன், மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம்.

**கடகம்:** பணிகளில் புதிய மாற்றங்கள் ஏற்படலாம். திருமணத்துக்கு காத்திருப்போருக்கு சிறிய கவலை உண்டாகலாம். பங்குச்சந்தை இலாபங்கள் கிடைக்கலாம். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**சிம்மம்:** வணிகக் கடன் பெறும் விடயங்களுக்கான ஆவணங்களில் கவனம் தேவைப்படலாம். மன அழுத்தம் தரும் சில சுயநலவாதிகளிடமிருந்து ஒதுங்கி இருப்பது நன்மை. அலட்சியத்தால் பணியில் பிரச்சினைகள் உண்டாகலாம்.

**கன்னி:** நிதி சம்பந்தப்பட்ட பணிகளில் இருப்பவர்களுக்கு சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். பயணங்களால் நன்மை உண்டாகலாம். நெடுநாட்களாக நினைத்த நல்ல செயலுக்கு இறையருளால் நன்மை கிடைக்கலாம்.

**துலாம்:** புகழ்பெற்ற நிறுவனத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கலாம். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படலாம். பணிகளில் உங்கள் ஆதிக்கம் வலுப்படலாம்.

**விருச்சிகம்:** வணிக விற்பனை ஒப்பந்தங்களில் முன்பணம் பெற்று செய்வது, எதிர்கால நன்மைக்கு உறுதுணையாக இருக்கும். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு பாராட்டு கிடைக்கப் பெறலாம். ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் உள்ளோருக்கு நன்மை உண்டாகலாம். செல்வாக்கு மிக்கவர்களிடம் உங்கள் ஆளுமை மேம்படும்.

**தனுசு:** பயணங்களில் கவனம் தேவைப்படலாம். புதிய கற்கைகளும் ஏற்படலாம். ஆடம்பர செலவுகளை தவிர்ப்பது நல்லது. உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம்.
சந்திராஷ்டமம்: உத்தராடம் நட்சத்திரம் பாதம் 1க்கு காலை 8.55 -மாலை 3.14.

**மகரம்:** வணிகத்தில் மேலதிக வருவாய் உண்டாகலாம். தனிப்பட்ட விடயங்களை அனைவரிடமும் பகிராமல் இருப்பது நன்மை. ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபாட்டுடன் இருப்பது நன்மை தரும்.
சந்திராஷ்டமம்: உத்தராடம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு மாலை 3.14 - 17.02.2022 காலை 9.59 வரை.

**கும்பம்:** பணிகளில் கடின உழைப்பு தேவைப்படலாம். உங்கள் செயல்களுக்கு பணியிட சக ஊழியர்களின் பாராட்டும் கிடைக்கலாம். பிள்ளைகளுக்கு உங்களால் பரிசு வழங்கப்படலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். பணி நிலை உறுதி தன்மையால் மன மகிழ்ச்சி மேலோங்கலாம்.

**மீனம்:** பேசும் சொற்களில் இனிமை நன்மையை தரலாம். உங்கள் நம்பிக்கையான சில எதிர்பார்ப்புகளுக்கு இறையருளால் நன்மை கிடைக்கலாம். வீட்டின் வயது மூத்தவர்களின் ஆசி மேன்மை தரும். பணிகளில் உங்கள் கௌரவம் மேம்படுவதுடன், உங்கள் இலக்குகளையும் அடையும் நாளாக அமையலாம்.

# அரசாங்கத்திடமுள்ள அரசியல் பயமே அவசர பொதுக்கூட்டங்களுக்கு காரணம்

## ஏழு மூளை நிதி அமைச்சரின் பழைய பொம்மை விளையாட்டென எதிர்க்கட்சி விசனம்

இப்போது இந்த அரசாங்கத்துக்கு அரசியல் பயம் வர ஆரம்பித்துவிட்டதால், அவசர வேலைத்திட்டங்களை முன்வைத்து முன்வைத்து, அவசர பொதுக்கூட்டம் நடத்த வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

2015 இற்கு முன் நடந்த இருண்ட சம்பவங்கள் இரண்டின் மீள் நிகழ்வுகளை நேற்று (நேற்றுமுன்தினம்) பார்த்தோம். ஒன்று அதிகாலை சமுதித்த சமரவிக்ரம ஊடகவியலாளரின் வீடு குண்டர்களால் தாக்கப்பட்டதைக் கண்டோம். மலத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதை நாம் மிகவும் வெறுப்புடன் கண்டிக்கிறோம். மற்றைய நிகழ்வு சமூக ஆர்வலர் ஷெஹான் மாலக கமக கைது செய்யப்பட்டதை பார்த்தோம். இந்த சம்பவங்கள் எதையும் நாங்கள் அனுமதிக்கவில்லை.

கருத்துகளை வெளிப்படுத்தியவர்களை கேவலமான முறையில் கொலை செய்த, உடல் உறுப்புகள் துண்டிக்கப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட, ஊடக சுதந்திரத்தின் மீது எப்படி கடுமையான கரும்புள்ளி இருந்தது என்பதும் நமக்கு நினைவிருக்கிறது.

முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்வாறான கரும்புள்ளியை அகற்றி ஊடக சுதந்திரத்தை நிலைப்படுத்திய மகிழ்ச்சி, நல்லாட்சி காலத்தில் ஊடகத்துறை அமைச்சராக செயற்பட்ட நபராக எனக்கு உண்டு. நல்லாட்சிக்கு முன்னைய ஆட்சியில் ஏராளமான ஊடகவியலாளர்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். நல்லாட்சி காலத்தில் மனசாட்சியுடன் பணியாற்றியிருந்தனர். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் போன்றோரை அரசாங்கத்தை வரையறையின்றி அச்சமின்றி விமர்சித்தனர். சொந்தக் குழந்தைகளுடனும் குடும்பத்துடனும் சுதந்திரமாக வாழ முடிந்த நிலை எமது காலத்தில் ஊடகவியலாளர்களுக்கு காணப்பட்டது என அச்சமில்லாமல் கூறலாம்.

எனவே, இந்தச் சம்பவங்கள் மூலம்



அடக்குமுறைக்கு ஆயத்தமாகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிகிறது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அந்த விசாரணைகளை நீர்த்துப்போக அனுமதிக்க வேண்டாம் என்று பொறுப்பான அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம்.

எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது, நிதியமைச்சர் மங்கள சமரவீர விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்திய போது, அதனை கடுமையாக விமர்சித்ததை நாம் பார்த்தோம். ஆனால் கடந்த வாரம் அவருக்கு எதிரான இரங்கல் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது, மங்களவின் விலை சூத்திரத்தை பலர் பாராட்டி பேசியதைக் கேட்டோம்.

உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போது அதிகரிக்கவும் அல்லது குறையும் போது குறைக்கவும் ஒரு அரசாங்கத்துக்கு ஏன் விலை சூத்திரம் தேவை என்று அவர் கேட்டார். இன்றைய நிலை என்ன?.

மேலும், கடந்த வாரம் அநுராதபுரம் சல்காது மைதானத்தில் ஏழு மூளை நிதி அமைச்சரின் பழைய பொம்மை விளையாட்டை பஸ்கள் மூலம் மக்களை ஒன்று திரட்டி ஒரு ஆட்டம் காட்டியதைப் பார்த்தோம். தனியார்துறைக்கு ஓய்வூதியம் பற்றி சொல்லி ஊழியர் வருங்கால வைப்பு நிதியில் கைவைத்துள்ளனர். தொழிலாளர்களும் ஊழியர்களும் வீதியில் இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக கட்டுநாயக்கவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அதை நிறைவேற்ற மக்கள் முன் அரசாங்கம் மண்டியிட வேண்டியதாயிற்று. நமது எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாக நாடாளுமன்றத்தில் இது குறித்து குரல் எழுப்பியதோடு தான் மற்ற அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், உழைக்கும் மக்கள் இதற்கு எதிராகக் குரல் எழுப்பத் தொடங்கினர். இது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் பற்றிய கதைகளாகும் எனத் தெரிவித்தார்.



திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் ஹுலனுகே பகுதியில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்வு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவின் தலைமையில் இடம்பெற்றது.

# இரத்தினபுரி வழியாக சிவனொளிபாதமலைக்கு செல்வோருக்கு தடுப்பூசி அட்டை அவசியமில்லை

## மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

இரத்தினபுரி, பலாங்கொடை, குருவிட்ட பிரதேசங்கள் வழியாக சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செல்லும் யாத்திரிகர்கள் கொரோனா தடுப்பூசி அட்டை வைத்திருக்க வேண்டியது அவசியமில்லை என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதாகம தெரிவித்தார்.


இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், சிவனொளிபாதமலை யாத்திரை மேற்கொள்வோர் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல் உள்ளிட்ட முறையான சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், கொரோனா தடுப்பூசி அட்டைகளை உடன் வைத்திருக்க வேண்டியது கட்டாயமில்லை என தெரிவித்த மாலினி லொகுபோதாகம, தடுப்பூசி அட்டை உடன் இருப்பது பாதுகாப்பானது எனவும் தெரிவித்தார்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்காக உள்நாட்டில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் பெருமளவில் வருகை தருகின்றனர். புதிய வைரஸ் தொற்று நோய்கள் குறித்து தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. எனவே, பொதுமக்கள் அனைவரும் சுகாதார பிரிவு வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாக சுகாதார வழிமுறைகளை முறையாக கடைபிடிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# போதைப்பொருள் வியாபாரி 'பரிப்புவா' புத்தளத்தில் கைது



திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் ஆகியவற்றில் ஈடுபட்டுவந்த 'பரிப்புவா' என்றழைக்கப்படும் மானவடுகே அசங்க மதுரங்க என்பவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (14) இரவு புத்தளம், கொங்கடவல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரை கைதுசெய்வதற்கு இதற்கு முன்னர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபரிடமிருந்து கைக்குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் அம்பன்பொல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ரூபவாஹினி கூட்டுத்தாபன பணிப்பாளர் இராஜினாமா

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி ஹீன்கெந்த பதவி விலகியுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நிர்வாக சேவையில் உயர் அதிகாரி ஒருவரை நியமிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊடகங்கள் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட வழங்கிய அறிவுறுத்தலுக்கமைவாக, ஜயம்பதி ஹீன்கெந்த குறித்த பதவியிலிருந்து விலகியுள்ளதாக தெரியவருகிறது.

# திம்புள்ள, பத்தனையில் போதை மாத்திரை விநியோகம்; நால்வர் கைது

திம்புள்ள, பத்தனை ஆகிய பகுதிகளில் போதை மாத்திரைகளை விநியோகித்துவந்த நால்வரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சாமதானபுர பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள்



கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து 334 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், 40, 27, 26, 22 ஆகிய வயதுடைய தலவாக்கலை, பத்தனை, திம்புள்ள ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேக நபர்கள் நீண்டகாலமாக இப்பகுதியில் போதைமாத்திரைகளை விற்பனைசெய்து வந்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அதிபரை முழந்தாளிடச் செய்த விவகாரம் சாமர எம்.பி. குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை

பதுளையில் அதிபர் ஒருவரை முழந்தாளிடச் செய்ய வைத்ததாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளிலிருந்து ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க முழுவதுமாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு நேற்று (15) பதுளை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஆர். புவானியினால் பதுளை பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இந்த வழக்கு மத்தியஸ்த சபையிடம் ஒப்படைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய, இரு தரப்பினரும் பதுளை மத்தியஸ்த சபைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதன்போது இரு தரப்பினரும் சமாதானத்துக்கு வந்துள்ளனர். இந்நிலையில், மத்தியஸ்த சபையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைக்கமைய குற்றவாளியாக கருதப்படும் சாமர சம்பத் தசநாயக்கவை முழுமையாக விடுதலை செய்வதாக நீதவான் சமிந்த கருணாதாச அறிவித்துள்ளார்.

# மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபு கல்லூரியின் பட்டமளிப்பு விழா இன்று

**(பேருவளை செய்தியாளர்)**

மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரியின் 07ஆவது மௌலவி, அல்-ஆலிம், அல்-ஹாபிழ், அல் - ஆலிமா பட்டமளிப்பு விழாவும் தலைப்பாகை சூட்டும் நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 08 மணிக்கு மாத்தறை மீரா ஜும்ஆ பள்ளிவாசலில் கலாபீட அதிபர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம். இஸ்திகார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் ரிபாய் தரீக் சங்கத்தின் ஆயுட்காலத் தலைவர் சங்கைக்குரிய ரிபாய் மௌலானா, யு.பி. முஹம்மத் ஆஷிக் தங்கள் மௌலானா, இந்தியா கேரளாவைச் சேர்ந்த சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் முஹம்மத் அஸ்லம் ஜிப்ரி மௌலானா, அரூஸியதுல் காதிரிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அல்லாமா கலாநிதி தைக்கா அஹமத் நாஸிர் ஆலிம் (அல்-அரூஸி, பாஸில், ஜலாளி, ஜமாலி) ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்வர். கொழும்பு உம்மு ஸாவியாவில் இயங்கும் அஜ்வாதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி அஹமத் ஸூபி (மஹ்ழரி) பிரதம பேச்சாளராக பங்குபற்றுவார்.

மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் மதனி லாபிர் ஹாஜியார், ஜனாதிபதி சட்டத்தரணி ராஸிக் ஸரூக், கொழும்பு உம்மு ஸாவியா நிர்வாக சபைத் தலைவர் தேசபந்து மக்கீ ஹாஷிம், பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் பௌஸான் அன்வர், கொழும்பு உம்மு ஸாவியாவில் இயங்கும் அஜ்வாதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி நிர்வாக சபைத் தலைவர் நுஸ்கி முஹம்மத் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்வர்.

மௌலவி அப்துல் வாஹித் (பஹ்ஜி) கலீபதுஷ் ஷாதுலி, மௌலவி ஸுல்தான் ஏ. முஹியத்தீன் (பஹ்ஜி), கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.இஸட். முஹம்மத் பாரி, கலீபதுஷ் ஷாதுலி மௌலவி பிஷிர் அஜ்வாத் (பஹ்ஜி), மௌலவி அப்துல் ஹகீம் (பாரி), அஷ்ஷெய்க் அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா, கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி மௌலானா (முர்ஸி) உட்பட உலமாக்கள், பல பிரமுகர்கள் விழாவில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தாநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 16ஆம் திகதி, புதன்கிழமை

# அரசு கவனிக்கவேண்டிய முக்கிய விடயம்!

இலங்கையில் கண், மண் தெரியாமல் உயர்ந்துவரும் விலைவாசி அதிகரிப்பால் சாதாரண பாமர மக்களின் உணவுப் பாதுகாப்பு நிலைமை, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து மட்டம் என்பன மோசமாகப் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக ஐ.நா. முகவர் அமைப்பு எச்சரித்திருக்கின்றது.

ஐ.நாவின் உணவு, விவசாய நிறுவனம் தனது உலகளாவிய தகவல் மற்றும் முன்னெச்சரிக்கை முறைமை பற்றிய பிந்திய அறிவிப்பில் இந்த விடயத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது.

விலைவாசி உயர்வு காரணமாக இலங்கைப் பிரஜைகள் உணவு உட்கொள்வதைக் குறைத்துக்கொண்டுள்ளனர். விலை மலிவான உணவுகளை நாடுகின்றனர். அதனால் போஷாக்குக் குறைந்த உணவுகளை உட்கொள்கின்றனர். இவையெல்லாம் அவர்களின் உணவுப் பாதுகாப்பு நிலைமை, ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து மட்டம் ஆகியவற்றில் பெரும் பின்னடைவு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது என்று அந்த அமைப்பின் முன்னெச்சரிக்கை முறைமையில் கூறப்பட்டுள்ளது.

அரிசி, கோதுமை, சீனி ஆகியவை பொதுவாக இலங்கைப் பிரஜைகளின் கலோரித் தேவைகளில் முறையே 40, 12, 10 வீதங்களை நிறைவுசெய்து வந்தன.

ஆனால், விலைவாசி உயர்வினால் பல குடும்பங்கள் இவற்றை உணவாக உள்ளெடுக்கும் போக்கைப் பெருமளவில் குறைத்துள்ளன. இது அவர்களின் உணவுப் பாதுகாப்பு நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது என்று அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

அரிசிதான் இலங்கை மக்களின் பிரதான உணவுப்பொருளாகும். கடந்த வருடம் செப்டெம்பர், நவம்பர் ஆகிய மாதங்களில் அரிசி விலை அதிகரித்த போதிலும் டிசம்பர் மாதத்தில் அதில் தளம்பலற்ற நிலைமை காணப்பட்டது. ஆனால், ஜனவரி மாதத்தில் அரிசி விலை திடீரென மீள அதிகரிக்கத் தொடங்கி அது உச்சத்தைத் தொட்டுள்ளது. இப்போது அது முந்தைய ஆண்டு இதே காலப்பகுதியில் நிலவிய விலையை விட ஐம்பது வீதம் வரை அதிகரித்திருக்கின்றது என அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

உரம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும்போகச் செய்கை முற்றாகத் தோற்றுவிட்டது. போதாக்குறைக்கு ரூபாவின் மதிப்பு வேகமாக வீழ்ந்து வருகின்றது.

இவை காரணமாக, மேற்படி அடிப்படை உணவுப்பொருட்களை சந்தையில் தாராளமாகக் கிடைக்கச் செய்வதற்கு அரசு எடுத்த முயற்சிகளும் பின்னடைவு கண்டுள்ளன என்ற உண்மையை ஐ.நா. முகவர் அமைப்பு விளக்கமாக தெளிவுபடுத்தியுள்ளது.

போகும் வேகத்தில் அத்தியாவசிய அடிப்படை உணவுப்பொருட்களின் விலைகள் இன்னும் அதிகரிக்கப்படவும், அவற்றுக்கு பற்றாக்குறை ஏற்படவும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்தகைய நிலைமை ஏற்படுமானால், ஒரு நேர உணவைக் குறைத்துக் கொண்டிருக்கும் இலங்கைக் குடும்பங்களின் எண்ணிக்கை விரைந்து அதிகரிக்கும்.

அது ஊட்டச்சத்து மற்றும் போஷாக்கற்ற ஒரு நலிவுற்ற சமுதாயத்தை நமது நாட்டில் நிலைநிறுத்திவிடும்.

மக்களை அரைப் பட்டினியில் போட்டு, சமூகம் நலிந்துகொண்டிருக்கையில், உணவுப் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், வேறு ஏதோ பற்றி எல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றது அரசு.

இலங்கையில் தேசிய மட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் போஷாக்குக் குறைவான சிறார்களின் எண்ணிக்கையில் மலையக தோட்டப்புற சிறார்களின் பங்கே அதிகளவில் காணப்படுவதாக குழந்தைகள் மருத்துவம் தொடர்பான நிபுணரும் சிறார் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் ஸ்தாபகத் தலைவருமான பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா கூறியிருப்பதையும் நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

மலையக சிறார்களிடத்தில் காணப்படும் அளவுக்கதிகமான போஷாக்கின்மை பிரச்சினைக்கு அங்கு எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகளவில் இருப்பதுதான் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கொரோனா சூழ்நிலையில் இந்த விடயத்தையும் அரசு கவனிப்பது நல்லது. அதுவே எதிர்கால சந்ததிகளைப் பாதுகாப்பதாக அமையும்.

# தமிழருக்கு அரசியல் தீர்வை வழங்க வலியுறுத்திய விஜய குமாரதுங்க

**(விஜய குமாரதுங்கவின் நினைவுதினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)**







விஜய குமாரதுங்க ( ஒக்டோபர் 9, 1945 - பெப்ரவரி 16, 1988) இலங்கையின் பிரபல சிங்கள திரைப்பட நடிகரும், அரசியல்வாதியும் ஆவார். அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கணவராவார். அவர் 1988ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார்.

விஜய குமாரதுங்கவின் முதல் திரைப்படம் 'ஹந்தானே கத்தாவ' (Hanthane Kathawa) என்பதாகும். அன்றிலிருந்த அவர் இறக்கும் வரையில் மொத்தம் 114 திரைப்படங்களில் நடித்திருக்கிறார். 1983 முதல் 1988 வரையில் அவர் இலங்கையின் மிகப் பிரபலமான நடிகர் என்ற விருதைப் பெற்றவர். 'The God King' என்ற ஆங்கிலத் திரைப்படத்திலும் 'நங்கூரம்' என்ற தமிழ்த் திரைப்படத்திலும் நடித்திருக்கிறார்.

**அரசியலில்**

சினிமாவில் நடித்துக் கொண்டே அரசியலிலும் ஈடுபட்டார் விஜய குமாரதுங்க. ஆரம்பத்தில் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து செயலாற்றிய குமாரதுங்க, பின்னர் 1974இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார். 1982ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காக போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேகடுவவை ஆதரித்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார். தேர்தலின் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசு குமாரதுங்கவை தீவிரவாதி எனக் குற்றஞ்சாட்டி சிறையில் அடைத்தது.

**புதிய கட்சி ஆரம்பித்தல்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக 1984இல் இலங்கை மக்கள் கட்சியை (Sri Lanka Mahajana Party) அவர் ஆரம்பித்தார். இலங்கை மக்கள் கட்சி, சமூக ஜனநாயகவாத மார்க்கத்தில் பயணித்ததுடன், இலங்கையில் இனப்பிரச்சினை பல வழிகளிலும் ஏற்பட்ட காலத்தில் இன, குல, மத பேதங்களை புறந்தள்ளி நாட்டின் சகல இன மக்களையும் ஒரேயொரு அரசியல் சக்திக்குள் கொண்டுசெலுத்த அரும்பாடுபட்டார் விஜய குமாரதுங்க.

**இனப்பிரச்சினையில் குமாரதுங்கவின் நிலைப்பாடு**

விஜய குமாரதுங்க 1985/86 காலப்பகுதிகளிலேயே இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வே ஒரேயொரு இறுதித் தீர்வென அச்சமின்றி சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் விஜய குமாரதுங்க 1986ஆம் ஆண்டு யாழ். மற்றும் சென்னை சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் அரசியல் இணைப்பை ஏற்படுத்த முன்வந்து செயற்பட்டார். யாழ். சென்ற விஜய குமாரதுங்க உட்பட்ட குழுவினரை அங்குள்ள சாதாரண மக்கள் வரவேற்ற முறையிலிருந்தே அவர் மீது வடபகுதி மக்கள் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை வெளிப்பட்டது. இதேநேரம் சென்னைக்கும் சென்ற விஜய குமாரதுங்கவை சந்திக்கவென அப்போது தமிழ்நாட்டில் தங்கியிருந்த வடக்கின் சகல போராட்டத் தலைவர்களும் வந்திருந்தனர்.

யாழ். சென்ற விஜய குமாரதுங்கவிற்கு அப்போது விடுதலைப் புலிகளின் பொறுப்பிலிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றையும் விடுதலைசெய்ய முடிந்தது. விஜய குமாரதுங்க விஞ்ஞானமய சோஷலிசத்தில் லெனினால் சுட்டிக்காட்டப்பட்ட இனங்களின் சுயாட்சி உரிமையை ஏற்றுக்கொண்டு இனப்பிரச்சினை, சமூக ஜனநாயகவாத சமூக முறையொன்றுக்குள் அமைதியாக தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் இருந்தார். அதற்கமைய அன்றைய இடதுசாரித் தலைவர்களான கொல்வின் ஆர். டி சில்வா, பீட்டர் கெனமன், வாசுதேவ நாணயக்கார போன்றவர்களைத் தனது அரசியல் மார்க்கத்திற்குள் இணைத்துக்கொள்ள அவரால் முடிந்திருந்தது.

**மறைவு**

பெப்ரவர் 16, 1988இல் அவரது பொல்ஹேன்கொடவில் உள்ள வீட்டுக்கு மோட்டார்சைக்கிளில் வந்த இருவரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார். வழக்கு விசாரணையின்போது டார்சன் வீரசிங்க மற்றும் லயனல் ரணசிங்க ஆகிய இருவருமே கொலையை செய்ததாக தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்கள் வழக்கு முடிவுக்கு வரும் முன்னரே இறந்துவிட்டனர். மேலும், வீரரத்ன முதியன்சேலாகே தனபால என்ற சிங்களவரும், துரைசாமி கந்தன் என்ற தமிழரும் கொலையாளர்களுக்கு உதவினார்கள் என தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். கொலையின் நோக்கம் இன்னமும் மர்மமாகவே உள்ளது.

*முதலாம் பக்கத் தொடர்ச்சி...*

**03. பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான சிறியளவிலான பல்பொருள் நிலையங்களின் (Home Shop) வலையமைப்பை நிறுவுதல்**

கிராமிய மட்டத்திலான குடும்ப அலகுகளில் தொழில் முயற்சிகளுக்கு ஆர்வம் காட்டும் பெண்களை அடையாளம் கண்டு, தொழில் முனைவுகளுக்கான வழிகாட்டல் மற்றும் ஆரம்ப மூலதனத்தை வழங்குவதன் மூலம் ஒரு கிராமத்தில் ஒரு பெண் தொழில் முயற்சியாளரை உருவாக்கும் நோக்கில், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான சிறியளவிலான பல்பொருள் நிலையங்களின் (Home Shop) வலையமைப்பை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்காக 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் 15,000 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த தொழில் முயற்சியாளர்கள் வறுமையொழிப்பு தொடர்பான செயலணியின் ஆலோசனையின் பிரகாரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் வழிகாட்டலின்கீழ் பிரதேச செயலாளர்களால் அடையாளம் காணப்படுவார்கள். முன்மொழியப்பட்டுள்ள சிறியளவிலான பல்பொருள் நிலையங்களுக்காக 200 – 400 சதுர அடிகள் கொண்ட வீட்டின் ஒரு பகுதியையோ அல்லது அவ்வீட்டைத் திருத்தியமைத்தல் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் புதிதாக நிர்மாணித்துக் கொள்ளல் அல்லது தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் புதிதாக நிர்மாணித்துக்கொள்ளல் போன்ற மேற்படி ஏதெனுமொரு முறையின்கீழ் தெரிவுசெய்யப்படும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு இயலுமை கிட்டும். குறித்த சிறியளவிலான பல்பொருள் நிலையங்கள் கணினித் தொகுதி மூலம் இணைப்புச் செய்யப்படுவதுடன், அவ்வியாபார நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அரசாங்கத்தால் பெற்றுக் கொடுக்கப்படும்.

விற்பனைக்கான பொருட்களை பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. விசேட அளவுகோல்களின் பிரகாரம் தெரிவுசெய்யப்படும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு டிஜிட்டல் அட்டை மூலம் வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிவாரணப் பொதி வேலைத்திட்டத்தின்கீழ் 2,000 ரூபா பெறுமதியான உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்கள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருட்களைப் பயனாளிகள் இப்பல்பொருள் நிலையத்தின் ஊடாக நியாயமான விலையில் கொள்வனவு செய்வதற்கு இயலும். அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தோட்டத் தொழிலாளர்களுக்கான கோதுமை மா நிவாரணம் வழங்கல்**

நிதி அமைச்சரால் "பொதுமக்கள் முகங்கொடுப்பதற்கு நேரிட்டுள்ள பொருளாதார சிரமங்களைக் குறைப்பதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்" எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கான முன்மொழிவுகளுக்கு 2022 ஜனவரி மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த முன்மொழிவுகளில் தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு கோதுமை மா நிவாரணம் வழங்குதல் தொடர்பான யோசனையை வர்த்தக அமைச்சரின் தலைமையிலான குழு கவனத்திற்கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது. அப்பரிந்துரைகளின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டுள்ள 1,15,867 பயனாளிக் குடும்பங்களுக்கு மாதாந்தம் 15 கிலோகிராம் கோதுமை மாவை சலுகை விலையில் வழங்குவதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பசுமை இலங்கை – ஒருவருக்கு – ஒரு மரக்கன்று தேசிய வேலைத்திட்டம்**

இலங்கையில் தற்போது காணப்படும் காடுகளைப் பாதுகாத்து 2025ஆம் ஆண்டளவில் வன அடர்த்தியை 30% வரை அதிகரிப்பதற்கும், நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்து ஊடுருவல் தாவரங்களை அகற்றி சூழல் நேயமிக்க தாவரங்களின் பரம்பலை அதிகரிப்பதற்கும் பொருத்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பசுமை இலங்கை – ஒருவருக்கு – ஒரு மரக்கன்று தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. அதற்கமைய கீழ்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- ***200 வன கிராமங்களை உருவாக்குதல்.***
- ***பாடசாலைகள் மற்றும் தேசிய கல்வி நிறுவனங்களில் மரநடுகை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.***
- ***நாடளாவிய ரீதியில் மூலிகை பூங்காக்களை அமைத்தல்.***

**14ஆம் பக்கம் பார்க்க....**

## இன்றைய நாளில்...

- **1937 – அமெரிக்காவின் வலஸ் கரோத்தர்ஸ் நைலோனுக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.**
- **1945 – இலங்கையின் புதிய அரசியலமைப்புக்கான சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் தமிழர்களுக்கு சம உரிமைக்கான ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை தமிழ் காங்கிரஸ் கட்சியால் முன்வைக்கப்பட்டது.**
- **1978 – முதலாவது கணினி அறிக்கைப் பலகை சிக்காகோவில் அறிமுகப்படுத்தப்பட்டது.**
- **1985 – ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.**
- **2007 – 2000ஆம் ஆண்டில் தர்மபுரி பஸ் தீ வைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை உயிருடன் எரித்துக் கொலைசெய்த அ.தி.மு.கவினர் மூவருக்கு தூக்குத்தண்டனையும், மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.**

## நக்கல் நமசிவாயம்

***அந்த ஒரு மணிநேர மின்வெட்டை இரவு நேரத்தில வெட்டுங்கோடாப்பா..! உந்த ரி.வி. நாடகத் தொல்லைகளில் இருந்து நிம்மதியா இருக்கலாம்..!***



# கல்விச் செலவுக்காக கூலித்தொழில் செய்த மாணவன் மின்சாரம் தாக்கியதால் மரணம்

(அநுராதபுரம் செய்தியாளர்)

கல்கமுவ யூ.பீ.வன்னிநாயக்க தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் மின்சாரம் தாக்கி பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சார தாக்கத்துக்குள்ளான மேலும் மூவர் சிகிச்சைக்காக கல்கமுவ வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (14) மாலை 4.30 மணியளவில் கல்கமுவ பகுதியிலுள்ள கட்டிட வேலைத்தளம் ஒன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவ, கொட்டாரம் பொத்தானே பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் 17 வயதுடைய மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தனது கல்விச் செலவுக்காக பணத்தினை தேடிக்கொள்ளும் நோக்கில் தனது உறவினர் ஒருவருடன் கல்கமுவ பகுதியிலுள்ள கட்டிட வேலைத்தளம் ஒன்றுக்கு தற்காலிக தொழிலுக்கு சென்றிருந்த வேளை இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 15.02.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 80 | 034 8327 |
| கனேடியன் டொலர் | 043 5823 | 05 4334 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 2 8575 | 21 12 1 |
| யூரோ | 113 17 4 | 121 7177 |
| ஜப்பான் யென் | 0 60 0 | 0 6630 |
| சிங்கப்பூர் டொலர் | 035 8 06 | 040 5326 |
| ஸ்ரேலிங் பவுன் | 156 3 03 | 164 7467 |
| சுவிஸ் பிரான்ங் | 102 4645 | 110 0363 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8883 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 422 0 6 |
| குவைட் | குவைட் தினார் | 553 3517 |
| ஓமான் | ஓமான் றியால் | 411 600 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 1 35 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 4675 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 6118 |

# ரஜவெல இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியை பயன்படுத்த அனுமதி





(க.கிஷாந்தன்)

கண்டி ரஜவெல இந்து தேசிய கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு புதிய உத்வேகம் கிடைக்கும்வண்ணம் கண்டி திகன நகரில் அமைந்துள்ள மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியை அக்கல்லூரி மாணவர்கள் இலவசமாக பயிற்சி பெறவும், விளையாட்டுப் போட்டிகள், மெய்வல்லுனர் போட்டிகள், உடற்பயிற்சி போன்றவற்றை மேற்கொள்ளவும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி மத்திய மாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் திருமதி சுவர்ணா பெரேராவினால் பிரஜாசக்தி அபிவிருத்தி செயல்திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமி தலைமையில் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாரத் அருள்சாமி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

பல வருட காலங்களாக இக்கல்லூரி விளையாட்டுத் தொகுதியை பயன்படுத்திக் கொள்வதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் பயனளிக்கவில்லை. ஏற்கனவே இருந்த அரசியல் தலைமைகள் இதனை கண்டுகொள்ளவில்லை எனவும் அங்கே இருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் எமக்கு தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சரின் பரிந்துரையின் கீழ் நான் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவிடம் கலந்துரையாடி அவரின் அனுமதியுடன் இக்கல்லூரி மாணவர்கள் குறித்த விளையாட்டுத் தொகுதியை பயன்படுத்திக்கொள்ள மற்றும் இங்கு இருக்கும் வளங்களின் மூலமாக அவர்களின் விளையாட்டுத்துறை மற்றும் தலைமைத்துவ பண்புகளை அதிகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம் - என்றார்.

# முன்னைநாதர் ஆலய தேர்த்திருவிழா





(ரஸீன் ரஸ்மின்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவ தேர்த்திருவிழா நேற்று (15) மிகவும் விமரிசையாக இடம்பெற்றது.

ஆலய பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான கலாநிதி பிரம்மஸ்ரீ எஸ்.பத்மநாபக் குருக்கள் தலைமையில் வசந்த மண்டப பூஜை நடைபெற்றது.

ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜ மூர்த்திகள் மேளதாளத்துடன் உள்வீதி வலம் வந்து அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் எழுந்தருளி காலை 10.30 மணியளவில் இரதோற்சவம் குருநாகல் - சிலாபம் பிரதான வீதி மற்றும் ஆலய சுற்று வட்டமாக வெளி வீதி வலம் வந்து ஆலயத்தினுள் வைத்து அபிஷேகமும் இடம்பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே குறித்த தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர். உற்சவங்கள் தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெற்றுவந்த நிலையில் இன்று (16) புதன்கிழமை தீர்த்த திருவிழாவுடன் பிரம்மோற்சவம் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி தலவாக்கலை நகரில் திடீரென மாயம்

## பொலிஸ் விசாரணைகளையடுத்து கண்டுபிடிப்பு

(தலவாக்கலை செய்தியாளர்)

தலவாக்கலை நகரில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியொன்று மாயமான சம்பவமொன்று நேற்றுமுன்தினம் (14) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

லிந்துலை பகுதியிலிருந்து தலவாக்கலை நகருக்கு முச்சக்கரவண்டியில் வந்த மூவர் முச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு கடை ஒன்றில் பொருட்கள் கொள்வனவு செய்துவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது நிறுத்திவைக்கப்பட்டிருந்த இடத்தில் முச்சக்கரவண்டியை காணவில்லை.

இதனையடுத்து தலவாக்கலை நகரில் கடமையிலிருந்த போக்குவரத்து பொலிஸாருக்கு முச்சக்கரவண்டி உரிமையாளர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் சில மணிநேரத்தில் முச்சக்கரவண்டியை கண்டுபிடித்தனர்.

முச்சக்கரவண்டியை அவ்விடத்திலிருந்து வேறொரு நபர் லிந்துலை நோனாவத்தை பகுதிக்கு செலுத்திச்சென்றதை பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய பொலிஸார் கண்டுபிடித்து விசாரணைகளை மேற்கொண்ட போது தானும் முச்சக்கரவண்டியில் வந்ததாகவும் அதனை நிறுத்திவிட்டு பொருட்கள் வாங்க சென்று திரும்பி வந்து தனது முச்சக்கரவண்டி என தவறுதலாக அருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியை எடுத்துச் சென்றதாகவும் இரண்டு முச்சக்கரவண்டிகளும் சிவப்பு நிறத்திலேயே இருந்தமையினால் சரியாக கவனிக்கவில்லை எனவும் முச்சக்கரவண்டியை எடுத்துச்சென்ற நபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து காணாமல்போன முச்சக்கரவண்டியை அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்த தலவாக்கலை போக்குவரத்து பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை வில்லைகளுடன் போலி வைத்தியர் கைது

வைத்தியர் என்று கூறிக்கொண்டு போதை வில்லைகளை விற்பனை செய்துவந்த ஒருவர் தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஹட்டன், கொட்டகலை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்தியராகத் தோன்றி நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வந்ததாகவும் போதை வில்லைகளை விற்பனை செய்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து 338 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த வில்லைகளை வாங்குவதற்காக வந்த இரண்டு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பில் திம்புல-பத்தன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 2022ஆம் வருடத்தின் முதலாவது சட்டம் சபாநாயகரால் சான்றுரை

மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் (14) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இந்தச் சட்டமூலம் கடந்த 08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், திருத்தங்களுடன் இது நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதனூடாக 1981ஆம் ஆண்டு 66ஆம் இலக்க மகாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் லலித் அத்துலத்முதலி மகாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் எனப் பெயர் மாற்றம் பெறுவது உள்ளிட்ட திருத்தங்களுக்கு உள்ளாகிறது.

இதற்கமைய 2022ஆம் ஆண்டு 01ஆம் இலக்க மகாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டம் நேற்று முன்தினம் (14) முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.



# மதங்களுக்கிடையே விரிசல்களை ஏற்படுத்தாமல் சமநிலையைப் பேண முயற்சிக்கவேண்டும்

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ். செய்தியாளர்)

திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் பகுதியில் மிகப்பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ சொரூபம் இந்து - கிறிஸ்தவ மக்கள் மத்தியில் விரிசலை ஏற்படுத்த காரணமாக அமைந்துவிட்டது - என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தலமான திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் பகுதியில் கடந்த சனிக்கிழமை கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

சமூகத்தின் ஒற்றுமையை சீர்குலைக்க விரும்பும் ஒருசிலரின் செயற்பாடு காரணமாக ஒட்டுமொத்த சமூகத்தினதும் ஒற்றுமை கேள்விக்குட்படுத்தப்படுகிறது. சமூகத்தின் ஒற்றுமையை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு சகலருக்கும் உண்டு. எனவே, இவ்விடயத்தில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தலத்தின் தனித்துவத்தைப் பாதிக்கும்



வகையில் மற்றொரு மத ஸ்தானம் அமைப்பதற்கு அதிகாரிகள் அனுமதியளிக்கக்கூடாது. அனுமதியின்றி இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றால் உரிய சட்ட அணுகல் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அதைவிடுத்து மதங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தி வேடிக்கை பார்ப்பதனை அனுமதிக்க முடியாது.

அத்துடன், அண்மைக்காலமாக இந்து ஆலய சிலைகள் உடைக்கப்படுவதுடன், திருடப்படுவதும் அனைவரும் அறிந்த ஒன்றே. இவ்வாறான செயற்பாடுகள் ஒட்டுமொத்த சமூகத்தின் ஒற்றுமையையும் சிதைத்துவிடும். சமூக சிதைவிற்கு வழிவகுக்காது மத ரீதியான நல்லிணக்கத்தை வளர்க்க முயற்சிக்கவேண்டும் என அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.







மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான இரதோற்சவம் நாளை 17ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பான விசேட கலந்துரையாடல் மாத்தளை மாவட்ட அரச அதிபர் தேஜானி திலகரட்ண தலைமையில் அரச அதிபரின் காரியாலயத்தில் இடம்பெற்றபோது மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஹனகுமார திசாநாயக்க, நாலக கோட்டேகொட, மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ், ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் சேதுராமன் சர்வானந்தா உட்பட உறுப்பினர்கள் மாத்தளை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுருத்த பண்டார நாயக்க உட்பட பொலிஸ் அதிகாரிகள் மாத்தளையை கொவிட்-19 தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் வசந்த உட்பட சுகாதார அதிகாரிகள் மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

(மாத்தளை செய்தியாளர்)

# அநீதியை ஊடகங்களுக்குச் சொன்னதால் பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளி

## கோணக்கலை தோட்ட நிர்வாகம் அடாவடி : மன்னிப்பு கேட்குமாறும் எச்சரிக்கை

(எம்.செல்வராஜா)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதியை, ஊடகங்களுக்கு வெளியிட்டமையினால் பசறை - கோணக்கலை தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவரை தோட்ட நிர்வாகம் பணி நீக்கம் செய்துள்ளது.

பசறைப் பகுதியின் கோணக்கலை பெருந்தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த எம். கெப்பிரியல் என்ற தொழிலாளியையே தோட்ட நிர்வாகம் இவ்வாறு பணி நீக்கம் செய்துள்ளது.

கோணக்கலை பெருந்தோட்ட மேற்பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு ஒரு கிலோகிராம் கோதுமை மாவிற்கு 80 ரூபா என்ற அடிப்படையில் 15 கிலோகிராம் கோதுமை மாவிற்கு ஆயிரத்து 200 ரூபா தொழிலாளர்களின் சம்பளத்தில் கழிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் சம்பளப் பட்டியலிலும் இக் கழிவு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எனினும், சம்பளப் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் வகையில் கோதுமை மா தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. பதுளை மாவட்டத்தில் மேலும் சில தோட்டங்களிலும் இதே நிலைமை இருந்து வருவதாகவும் தொழிலாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் வினவியபோது, கோதுமை மா கிடைத்ததும் தந்துவிடுவோம் என பதில் கிடைத்துள்ளது. ஆனால், கோதுமை மாவோ அல்லது அதற்குரிய பணமோ இதுவரை கிடைக்கவில்லை.

இதனையடுத்து, இந்த அநீதியை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அத்தொழிலாளர்களில் கெப்பிரியல் என்பவரே தமக்கு ஏற்பட்ட அநீதியை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாத தோட்ட நிர்வாகம் குறிப்பிட்ட தொழிலாளியை நேற்று (15) முதல் பணி நீக்கம் செய்துள்ளது. அத்தோடு, ஊடகவியலாளர்களை மீளவும் தோட்டத்துக்கு வரவழைத்து, அவர்கள் முன்னிலையில் தோட்ட நிர்வாகத்திடம் மன்னிப்பு கோரினால் மாத்திரமே, மீளவும் தொழில் வழங்கப்படுமென தோட்ட நிர்வாகம் கூறியதாக அத்தொழிலாளி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உண்மை நிலைமையையே நான் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினேன். தோட்ட நிர்வாகம் கூறுவதுபோன்று எவரிடமும் மன்னிப்பு கேட்கப்போவதில்லை எனத் தெரிவித்தார்.

தோட்ட நிர்வாகத்தின் இச்செயல்பாடானது, ஜனநாயகம் மற்றும் தொழிற்சட்டம் ஆகியவற்றை மீறும் செயலாகும். தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை, அடாவடித்தனத்தை ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்வது குற்றமாகுமா? கருத்துச் சுதந்திரத்தை இல்லாதொழிக்கும் தோட்ட நிர்வாகத்தின் இச் செயல்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக அரசியல், தொழிற்சங்கம் ஆகியவற்றின் பிரமுகர்கள் மற்றும் தொழிலாளர்களும் தெரிவித்தனர். எனினும், அரசியல்வாதிகள் மௌனம் காத்துவருகின்றனர்.

இத்தகைய அடாவடித்தனங்களை மேற்கொள்ளும் தோட்ட முகாமையாளரை, அத் தோட்டத்திலிருந்து அகற்றுவதற்கும் பணிநீக்கம் செய்த தொழிலாளிக்கு மீண்டும் வேலை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு, தொழிலாளர்களிடம் பெறப்பட்ட ஆயிரத்து 200 ரூபாவை தொழிலாளர்களுக்கு வழங்கவும் மக்கள் பிரதிநிதிகள் துரித நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை இன்றும் கொத்தடிமைகளாகவே நடத்துகிறது அரசு

## மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் இராஜாராம் குற்றச்சாட்டு

(தலவாக்கலை நிருபர்)

இந்தியாவிலிருந்து இலங்கை வந்த எமது இந்திய வம்சாவளி மூதாதைகள் வந்து அடுத்த வருடத்துடன் 200 வருடங்களாகின்றன. ஆனாலும் இன்னும் எமது இந்திய வம்சாவளி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றார்கள். இந்திய வம்சாவளி மக்களை இந்நாட்டில் வாழும் ஒரு தேசிய இனமாக இன்னும் பிரகடனப்படுத்தவில்லை. அதேபோல் இந்த மக்களுக்கு இந்நாட்டில் ஒரு தேசிய அந்தஸ்தும் கிடைக்கவில்லை என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இங்கு குடியேறியவர்களாகவே வழி நடத்தப்படுகின்றனர். நாம் இந்த நாட்டில் உரிமையற்ற அடிமைகளாகவே வாழ்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

தனது வீட்டில் நேற்று (15) இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

இந்த நாட்டை ஆட்சி செய்த அனைவருமே இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களை ஒரு கூலியாகவும் கில்லுக் கீரையாகவுமே பயன்படுத்துகின்றார்கள். அவர்களை ஒரு மனிதராக மதிப்பதில்லை. அவர்களை கொத்தடிமைகளாகவே வைத்திருக்கின்றார்கள்.



இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் முன் தேர்தல் காலத்தில் தேர்தலில் வெற்றி பெற்ற பின் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம் எனக் கூறி தொழிலாளர்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த பின் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பெருந்தோட்ட மக்கள் ஏற்கனவே இருந்ததை விட தற்பொழுது மோசமான நிலையில் வாழுகின்றார்கள்.

அண்மையில் அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 05ஆயிரம் ரூபா சம்பளத்தை அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கி இழிவுபடுத்துகின்றது. தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மாவை மாத்திரமா உணவாக பயன்படுத்துகின்றார்கள். மாவை வழங்கி எமது சமூகத்தை எந்தளவுக்கு இழிவுபடுத்த முடியுமோ அந்த அளவுக்கு இழிவுபடுத்துகின்றார்கள்.

அத்தோடு, தொழிலாளர்களுக்கு வழங்கும் கோதுமை மா பொதியில் தேர்தல் பிரசாரம் செய்வது போல தோட்டத் தொழிலாளர்களுக்கான மானிய நலத் திட்டம், நிதி அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, வர்த்தக அமைச்சு, கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு என அமைச்சு பெயர்களை அச்சிட்டு மாவை விற்பனை செய்கின்றார்கள்.

இன்று பெருந்தோட்டப் பகுதியில் தோட்ட நிர்வாகங்கள் நினைத்தப்படி செயல்படுகின்றார்கள். தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வைத்திருக்கின்றார்கள். தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளை தட்டி கேட்கப்போனால் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்து தொழிலாளர்களை பயமுறுத்துகின்றார்கள்.

தோட்டங்களில் தொழிற்சங்கங்கள் நடத்த முடியாமல் தோட்ட நிர்வாகங்கள் தடுத்து வருகின்றது. உலகத்திலே எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு எங்களது சமூகத்தை இழிவுபடுத்தி உரிமையற்ற கொத்தடிமைகளாக அரசாங்கம் வழி நடத்துகின்றது. எமது அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து மீள்வதற்கு அனைத்து இந்திய வம்சாவளி தொழிற்சங்க அரசியல் தலைமைகளும் சமூக அமைப்புகளும் சமூக நலன் விருப்பிகளும் ஒன்றிணைந்து உரிமைக்காக குரல் கொடுக்க முன் வரவேண்டும் என்றார்.

# துப்பாக்கியை பரிசோதித்தபோது ரவை பாய்ந்து சிறுவன் படுகாயம்

## விபரீத விளையாட்டு : 21 வயது இளைஞனின் செயலால் 12 வயது சிறுவன் வைத்தியசாலையில்

(எம்.செல்வராஜா)

கட்டுத்துப்பாக்கி இயங்குகின்றதா என சிறுவனின் வாயில் வைத்து பரிசோதித்தபோது, துப்பாக்கி ரவை பாய்ந்ததில் படுகாயமடைந்த சிறுவன் ஆபத்தான நிலையில், பதுளை வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு, துப்பாக்கியை பரிசோதித்த 21 வயது இளைஞன் கொஸ்லந்தை பொலிஸாரினால் நேற்று (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்லந்தைப் பகுதியின் கெலிப்பனவெல என்ற கிராமத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே கிராமத்தைச் சேர்ந்த 12 வயது நிரம்பிய சிறுவனின் வாயிலேயே, துப்பாக்கி ரவை பாய்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

கெலிப்பனவெல கிராமத்தின் 21 வயதான இளைஞன், தம்மிடமிருந்த உள்ளூர்த் தயாரிப்பிலான கட்டுத்துப்பாக்கியை சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது, அருகிலிருந்த சிறுவனின் வாயில் துப்பாக்கியை வைத்து, துப்பாக்கியை இயங்க வைத்து பரிசோதனை செய்துள்ளான். அவ்வேளையிலேயே துப்பாக்கி ரவை பாய்ந்து வெடித்திருக்கின்றமை,



ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. துப்பாக்கி சூடுபட்ட 12 வயது சிறுவன், பிரதேச வைத்தியசாலையில் ஆரம்பசிகிச்சைகள் அளிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும், சிறுவனின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# மஞ்சளின் விலை வீழ்ச்சியால் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பச்சை மஞ்சள் ஒரு கிலோவின் விலை 100 ரூபா வரை குறைந்துள்ளதால் இரத்தினபுரி மாவட்ட மஞ்சள் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர் சங்க அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

வியாபார சந்தையில் தற்போது உலர்த்தப்பட்ட மஞ்சள் தூளின் விலை 400 - 500 ரூபா வரையில் விற்கப்படுகின்ற போதிலும் உற்பத்தியாளர்களான தமக்கு கிலோவுக்கு 100 ரூபா மட்டுமே கிடைப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

நெல் உற்பத்தியைப் போன்று மஞ்சள் உற்பத்தியையும் சில வியாபாரிகள் தம் வசப்படுத்தியுள்ளதாகவும் இதனால் வங்கி கடன்களையும் பெற்று மஞ்சள் உற்பத்தியை மேற்கொண்டுள்ள உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் தரகர்களிடம் சிக்கித் தவிப்பதாகவும் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



‘மலையக தேன் மொழி’ எனும் தன்னார்வ அமைப்பினர் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களை நேற்று முன்தினம் இங்கிரிய, றைகம், மேற்பிரிவு மாணவர்களுக்கு வழங்கி வைத்தனர்.

# பதுளையில் ஏ.ஜே.எம். முஸம்மில் அறக்கட்டளையின் கீழ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு



(நுவரெலியா நிருபர்)

ஏ.ஜே.எம். முஸம்மில் அறக்கட்டளையின், காந்தா சவிய மகளிர் சக்தி அமைப்பினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் பிரதான நிகழ்வு இம்முறை பதுளை மாவட்டத்தில் நடைபெற்றது.

மாகாண கல்வியமைச்சின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்விகற்கும் நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய ஹாலிஎல யெல்வர்டன் தமிழ் வித்தியாலயம், பதுளை ரத்னபால வித்தியாலயம், மீகஹகிவுல வித்தியாலயம் மற்றும் வெலிமடை கந்துருதேக முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை கொழும்பு, குருநாகல் உள்ளிட்ட மேலும் சில பிரதேசங்களிலும் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் இம்முறையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய காந்தா சவிய மகளிர் சக்தி அமைப்பினால் இம்முறை 03 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்வில் காந்தா சவிய அமைப்பின் தலைவி பெரோஸா முஸம்மில், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்தியா அபன்வெல, ஆளுநரின் செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் கலந்துகொண்டனர்.

# ஐ.ஓ.சியிடம் இருந்து 40,000 மெட்ரிக் தொன் எரிபொருள் நேற்று கொழும்பை வந்தடைவு




இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திடமிருந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 40,000 மெட்ரிக் தொன் எரிபொருள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

எரிசக்தி அமைச்சின் கோரிக்கையின் அடிப்படையில், ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோகத்துக்கான மேற்கோளை சமர்ப்பித்துள்ளது. இதேவேளை, ஐ.ஓ.சி. நிறுவனமானது, பணம் செலுத்துவதற்கு 60 நாட்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இலங்கை பாரிய அந்நிய செலாவணி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், எண்ணெய் இறக்குமதிக்கு நிதியளிப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி முடிவடையும் வரை இலங்கை காத்திருக்க முடியாது என்றும் மின்சாரத் துறையிலிருந்து புதிதாக ஏற்பட்ட தேவை காரணமாக நாட்டுக்கு அவசரமாக எரிபொருள் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தியா இலங்கையின் நல்ல நண்பன் என்பதை வார்த்தைகளால் அல்ல, செயல்களால் நிரூபித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது இரு நாடுகளுக்கும் இடையேயான வரலாற்றைப் பகிர்ந்துகொள்வதுடன், கொவிட் – 19 தொற்றுநோயானது சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளதால், இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவாக நிற்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரான கோபால் பாக்லே இதன்போது தெரிவித்தார்.

# வெள்ளவத்தையில்
## சிவயோக சுவாமிகள் திருவழிபாடு

சிவயோக சுவாமிகள் திருவழிபாடு இன்று புதன்கிழமை வெள்ளவத்தை விவேகானந்தா வீதியில் 53ஆம் இலக்கத்தில் உள்ள சிவயோக சுவாமிகள் திருவடி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பூரணை தினத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் விநாயகர் அகவல், நற்சிந்தனை, திருமுறை, சிவபுராணம் ஆகிய பாராயணங்களுடன் நடைபெறவுள்ளது. காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த வழிபாட்டில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சிவில் செயற்பாட்டாளர் செஹான் நேற்று பிணையில் விடுவிப்பு

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சிவில் செயற்பாட்டாளர் செஹான் மாலக கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை நீதவான் நீதிமன்றில் அவர் நேற்று முற்படுத்தப்பட்டபோது இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

சிவில் செயற்பாட்டாளர் செஹான் மாலக கமகே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் பாணந்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அவர் தெரிவித்திருந்த கருத்து காரணமாக சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் எரிகாயங்களுடன் பெண் சடலமாக மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – அநுராதபுரம் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து பெண்ணொருவர் எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நேற்று (15) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த என்.எம்.என். ஜஹான் (வயது 36) எனும் இளம் பெண்ணொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட குறித்த பெண், முதல் கணவனை பிரிந்த நிலையில், வர்த்தகர் ஒருவருடன் மிக நீண்ட காலமாக புத்தளம் - அநுராதபுரம் வீதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இருவருக்கும் இடையில் அடிக்கடி கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு வந்ததுடன், சம்பவம் நடந்த திங்கட்கிழமை (14) இரவும் இருவருக்குமிடையில் வாய்த் தர்க்கம், சண்டை என்பன ஏற்பட்டுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணை



யில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே குறித்த பெண் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சம்பவ இடத்துக்கு சென்ற புத்தளம் தலைமையக பொலிஸாரும் மற்றும் தடயவியல் பொலிஸ் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, சடலம் மீட்கப்பட்ட வீட்டுக்கு நேற்று மாலை புத்தளம் மாவட்ட நீதிவான் வருகை தந்ததுடன், சடலத்தை பார்வையிட்டு, நீதிவான் விசாரணைகளை நடத்தியதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டுள்ள குறித்த பெண், கர்ப்பிணியாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும், அது பிரேத பரிசோதனையின் போதே உறுதிப்படுத்தப்படும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், எரிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட குறித்த பெண்ணுடன் நீண்ட காலமாக குடும்பம் நடத்தியதாக கூறப்படும் வர்த்தகர் ஒருவர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இந்த சம்பவம் புத்தளம் நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியநிலையில், இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணங்களில் புத்தளம் தலைமையக பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னர் இலங்கையின் ஆடைத் தொழில் உலக சந்தையில் மீள் எழுச்சியை இலக்காகக்கொள்ளவேண்டும்

கொவிட் தொற்றுநோய்க்குப் பிந்தைய காலத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களால் உலகளாவிய சந்தையில் உருவாகிவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள இலங்கை தனது ஆடை உற்பத்தி திறனை விரிவுபடுத்துவதற்கு உதவுமாறு அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் மன்றத்தின் (SLCGE) அண்மையில் நடைபெற்ற 26ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

Hilton Colombo Residencyல் நடைபெற்ற இந்த நிகழ்வில் 2022/23ஆம் ஆண்டிற்கான தலைவராக Rainbow Clothingன் முகாமைத்துவப் பணிப்பாளர் பந்துல பெர்னாண்டோ மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்துகொண்டதுடன், மேலும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச, பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய அமைச்சர்களும் ஒன்றிணைந்த ஆடைத் தொழிற்சாலை சங்கங்களின் மன்றத்தின் (JAAF) தலைவரான ஏ. சுகுமாரன் மற்றும் கொமர்ஷல் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

“தற்போதைய தொற்றுநோயின் விளைவாக உலகளாவிய ஆடை சந்தை கணிசமாக மாறிவிட்டது. குறிப்பாக e-commerceக்கு பிரதிபலிக்கும் வகையில் நமது உத்திகளை வகுக்கவேண்டும். அரசாங்க அதிகாரிகள் மற்றும் நன்கொடையாளர்கள் உட்பட பிற பங்குதாரர்களுடன் சேர்ந்து, இந்த மாற்றங்களை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்களை நாங்கள் தொடங்கினோம்” என SLCGEஇன் தலைவர் பந்துல பெர்னாண்டோ இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சந்தையில் நிலவும் அமெரிக்க - சீன வர்த்தகப் போர் இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுக்கு அதிக வாய்ப்புகளை உருவாக்கி வருவதாகவும், இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள உற்பத்தியாளர்களுக்கு அரசாங்க ஆதரவு தேவை எனவும் இந்த நிகழ்வின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

“எங்கள் உறுப்பினர்களின் தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதில் நாங்கள் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கிறோம். அவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம். இருப்பினும், முதலாளிகளுடன் கலந்தாலோசிக்காமல் பல்வேறு தொழிலாளர் விதிமுறைகளை தற்காலிகமாக அறிமுகப்படுத்துவதும் திருத்துவதும் கவலையை ஏற்படுத்தி வணிக நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்” என SLCGE பொதுச் செயலாளர் ஹேமந்த பெரேரா தெரிவித்தார்.

உதாரணமாக, கட்டாய ஓய்வு பெறும் வயதை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழிலாளர்களை பணிநீக்கம் செய்யும் சட்டத்தின் திருத்தம் ஆகியவையும் இதில் அடங்கும்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்கள், உற்பத்தி வசதிகளில் கொவிட்-19 பரவுவதற்கு சில தரப்பினரைக் குற்றஞ்சாட்டியுள்ளனர், மேலும் கொவிட்-19ஐத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முதலாளிகள் செயல்படுத்தியுள்ளனர் என்று கூறினார். தொற்றுநோய் பரவிய காலங்களின்போது ஆடைத் தொழில்துறைக்கு வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவிற்காக முப்படைகள், அரசாங்கம் மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இலங்கை ஆடைத்



துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அமைப்பான JAAF ஆகியவற்றிற்கு மன்றம் தனது நன்றியைத் தெரிவித்தது.

2022/23 SLCGEஇன் புதிய பணிப்பாளர் சபையாக தலைவர் பந்துல பெர்னாண்டோ, பொருளாளர் ஹேமந்த பெரேரா, பிரதித் தலைவர் ரந்த திசேரா, உதவிப் பொதுச் செயலாளர் நிஷாந்த பக்மிகே, உதவிப் பொருளாளராக ருமேஸ் பெரேரா, மெனுகா குணவர்தன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# Canonஇன் EOS R5 Mirrorless கெமராவுக்கு Future Tech விருதுகள் வழங்கும் நிகழ்வில் “சிறந்த கெமரா” விருது வழங்கி கௌரவிப்பு

டிஜிட்டல் புகைப்படத் தீர்வுகள் துறையில் முன்னோடியாக அமைந்துள்ள Canon, தனது முழுமையான mirrorless கெமராவான Canon EOS R5இற்கு, அண்மையில் இடம்பெற்ற Future Tech விருதுகள் வழங்கும் நிகழ்வில் “2021ஆம் ஆண்டின் சிறந்த கெமரா” எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

ஜனவரி மாதம் லொஸ் வெகாஸ் நகரில் இடம்பெற்ற உலகின் மாபெரும் தொழில்நுட்ப கண்காட்சியான CES 2022இன்போது Future Tech விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. Future Choice விருதுகளின் வெற்றியாளர்கள் Digital Camera World, TechRadar, T3, Toms Guide, iMore மற்றும் Android Central போன்ற தொழில்நுட்பப் பிரிவுகளின் முன்னணி நிபுணர்களால் வெற்றியாளர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

Canon EOS R5இல் காணப்படும் நவீன உள்ளம்சங்கள் மற்றும் வினைத்திறன் போன்றன சிறந்த கெமரா என தெரிவுசெய்யப்படுவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. Canon கெமராவில் முதன் முறையாக EOS R5 உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், புரட்சிகரமான 8K resolution வீடியோ பதிவு உள்ளம்சத்தையும் கொண்டுள்ளது.

PhotoHub – கெமரா செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி பிரவீன் சமரகோன் கருத்துத் தெரிவிக்கையில், “Canon EOS R தெரிவுகளின் அறிமுகத்துடன், அடுத்த தலைமுறை Canon Mirrorless கெமராக்கள் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் சுமார் 5 தசாப்த காலமாக Canon தயாரிப்புகளின் அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகத்தராக Metropolitan திகழ்கின்றது. இந்த அண்மைய சாதனையுடன் நாம் அதிகளவு விறுவிறுப்பாக காணப்படுவதுடன், Canon Mirrorless கெமராக்களின் ஒப்பற்ற வெற்றிகரமான செயற்பாடுகளில் முன்னோடியாகவும் திகழ்கின்றோம்” என்றார்.

Canon EOS R5இல் அடுத்த தலைமுறை படத் தரம், வினைத்திறன் மற்றும் தங்கியிருக்கும் திறன் போன்றன காணப்படுகின்றன. Canonஇன் புகழ்பெற்ற




full-frame கெமராக்களின் மாற்றீடாக அமைந்துள்ளது. திருமணங்கள், புகைப்படங்கள், விளையாட்டு, ஊடகவியல், பயணங்கள், சினிமா மற்றும் பல புகைப்படத் தேவைகளுக்கு சிறந்த தெரிவாக அமைந்துள்ளது.

சந்தையில் கடும் போட்டிகர நிலை காணப்பட்ட போதிலும், Canonஇன் சிறந்த கட்டமைப்புக்கு அதிகளவு வரவேற்பு காணப்பட்டது. Future Choice விருதுகள் வழங்கலில் “simply Canons finest product ever” என விவரிக்கப்பட்டிருந்தது. Canon EOS R5 என்பது 45MP full frame CMOS உணரியைக் கொண்டுள்ளதுடன், 20 fpsஇல் தொடர்ச்சியான AF, full-frame internal cinematic 12-bit 8K RAW வீடியோ மற்றும் மேம்படுத்தப்பட்ட autofocus கட்டமைப்பினூடாக மக்கள், விலங்குகள் மற்றும் வாகனங்களை கண்காணிக்க முடியும்.

Canon EOS R5இற்கு Expert Imaging and Sound சம்மேளனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த EISA விருதுகள் வழங்கலில் 2020ஆம் ஆண்டின் பெருமைக்குரிய கெமரா புத்தாக்க விருதும் வழங்கப்பட்டிருந்தது. மேலும், Canon EOS R5இற்கு பெருமைக்குரிய iF Design விருதுகள் வழங்கலில், 2021ஆம் ஆண்டின் சிறந்த வடிவமைப்புக்கான சர்வதேச லேபிள் விருதும் வழங்கப்பட்டிருந்தது.

Metropolitanஇன் பொது முகாமையாளர் சுரேஷ் ஹேரத் கருத்துத் தெரிவிக்கையில், “Canon கெமராக்கள் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் கெமராக்கள் தெரிவின் முன்னோடியாக அமைந்துள்ளது. அடுத்த தலைமுறை கெமரா பாவனையாளர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த விருது அமைந்திருக்கும் என்பது சந்தேகமில்லை” என்றார்.

விற்பனைப் பிரிவுகளின் உதவி முகாமையாளர் லக்மால் புள்ளபெரும கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் Canonஇன் ஒரே அங்கீகாரம் பெற்ற விநியோகத்தராக Metropolitan திகழும் நிலையில், வாடிக்கையாளர்கள் Canon கெமராக்களை கொள்வனவு செய்யும்போது தரம் தொடர்பில் உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கலாம். 15 மாத கால Canon Metropolitan முகவர் உத்தரவாதம் நாடு முழுவதையும் சேர்ந்த விற்பனையாளர்களிடமிருந்து வழங்கப்படுகின்றது” என்றார்.

1ஆம் மாடி, இல. 85, பிரேப்ரூக் பிளேஸ், கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள Canon Image Square காட்சியறையிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு Canon கெமரா தெரிவுகளை நேரடியாக பார்வையிடும் வாய்ப்பைப் பெற முடியும். இங்கு விருதை வென்ற Canon EOS R5 கெமராவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நீண்டகால சேவை, நம்பிக்கை மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில், Canon அங்கீகாரம் பெற்ற சேவை நிலையங்களையும் Metropolitan கொண்டுள்ளது.

பல தலைமுறைகளாக புத்தாக்கத்தின் நம்பத்தகுந்த பங்காளராகத் திகழும் Metropolitan Group, 60 வருடங்களுக்கு மேலாக தேசத்துக்கு சேவையாற்றுகின்றது. தனது துணை நிறுவனங்களினூடாக, நாட்டின் சகல துறைகளிலும் தனது பிரசன்னத்தை உறுதிசெய்துள்ளது.

திகதி 14.02.2022
திங்கட்கிழமை
www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4678
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,712,690.00
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 0 4 5 2 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 43,997,245.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2973
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,887,120.00
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 04 20 46 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,550,814.40

Mega POWER +23
மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1026
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,254,780.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 236,016,110.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 13
வெற்றி இலக்கங்கள்: 12 13 43 62

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 708
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,860,340.00
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 24 35 42 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 97,360,176.00

NLB ஹந்தஹன
ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0019
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,093,578.24
இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 31 38 40 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,500,000.00

வாசனா சம்பத
Vasana Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் : 1695
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,293,800.00
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 09 20 50 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 27,553,270.70

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32,
கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# குடிநீர்ப் பிரச்சினைக்கு உடன் தீர்வைக்கோரி கல்லூண்டாய்வெளி குடியிருப்பு மக்கள் வீதிமறியல் போராட்டம் முன்னெடுப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லூண்டாய்வெளி குடியிருப்பு மக்கள் நேற்றுக் காலை வீதிமறியல் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

நீண்ட நாட்களாக தீர்வு வழங்கப்படாத தமது குடிநீர்ப் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டு யாழ்ப்பாணம், பொன்னாலை, பருத்தித்துறை வீதியின் கல்லூண்டாய் பகுதி வீதியினை மறித்து வீதியின் குறுக்கே பொதுமக்களும் மாணவர்களும் அமர்ந்திருந்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனால் குறித்த வீதியின் போக்குவரத்து ஒருசில மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், போராட்ட இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் வீதியை வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்த மக்களை அகற்றி போக்குவரத்தினை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து தருவதாக வாக்குறுதி வழங்கியதையடுத்து, அதிகாரிகள் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகைதந்திருந்தனர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார் உள்ளிட்டவர்கள் வருகைதந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் பிரச்சினைக்கு உரிய தீர்வினை உடனடியாக பெற்றுத் தருவதாக தெரிவித்ததோடு, குடியிருப்புப் பகுதிக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டதையடுத்து போராட்டம் நிறைவுபெற்றது.

அத்தோடு, கல்லூண்டாய்வெளி குடியிருப்பு மக்களின் குடிநீர்த் தேவைக்கு உடனடியாக தீர்வினை வழங்குவதற்காக யாழ். மாவட்ட இராணுவத்தின் 512ஆவது படைப்பிரிவால் குடிநீர் விநியோகம் ஒவ்வொரு வீடுகளுக்கும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மரக்காரம்பளை வீதியில் மூன்று மோட்டார்சைக்கிள்கள் மோதி விபத்து:

## ஒருவர் மரணம்; இருவர் காயம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, மரக்காரம்பளை வீதியில் மூன்று மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று (15) இடம்பெற்ற இந்த மோட்டார் சைக்கிள் விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, கணேசபுரம் பகுதியிலிருந்து மரக்காரம்பளை வீதியூடாக பெண்ணொருவர் செலுத்திவந்த மோட்டார்சைக்கிள் வீதியின் எதிர்ப்பக்கத்திலுள்ள ஒழுங்கை ஒன்றுக்குள் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது எதிர்த்திசையில் வந்த பல்சர் ரக மோட்டார்சைக்கிள், பெண் செலுத்திவந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் பல்சர் ரக மோட்டார்சைக்கிளின் சாரதியான பண்டாரிக்குளம், அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய சிறிரஞ்சன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மற்றைய இரு மோட்டார்சைக்கிளின் சாரதிகளும் காயமடைந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த நெளுக்குளம் போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வீடியோவைக் காண...

# சமுர்த்தி மானியத்தொகை வழங்கும் நிகழ்வு யாழில்



(யாழ். நிருபர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" எனும் எண்ணக்கருவிற்கமைய, சமுர்த்தி பயனாளிகளுக்காக அரசால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத்தொகை, குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

2022ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டதற்கிணங்க, நாடுபூராகவும் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி உதவித்தொகை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுவரும் நிலையில், யாழ். மாவட்டத்துக்குரிய நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டு அதிகரிக்கப்பட்ட மானிய தொகை மற்றும் கடன் தொகையினை சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கினர்.

# பத்து இலட்சம் ரூபா பெறுமதியில் சௌபாக்கியா வீட்டுத்திட்டம்



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கச்சாய் சமுர்த்திப் பிரிவைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பத்து இலட்சம் ரூபா பெறுமதியிலான சௌபாக்கியா வீட்டுத்திட்டம் சமுர்த்தித் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்டது.

கொடிகாமம் மத்தி பிரதேசத்தில் இடம்பெற்ற சமுர்த்தி கொடுப்பனவை அதிகரித்து வழங்கும் தேசிய நிகழ்வின்போதே வீட்டுத்திட்டத்துக்கான முதற்கட்ட காசோலை வழங்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.விஜயேந்தினி, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை ஆகியோர் இணைந்து பயனாளிக்கான காசோலையை வழங்கினர்.

குறித்த சௌபாக்கியா வீட்டுத்திட்டமானது அரசாங்கத்தின் ஆறு இலட்சம் ரூபா நிதி உதவி மற்றும் பயனாளியின் நான்கு இலட்சம் ரூபா பங்களிப்புடன் பத்து இலட்சம் ரூபா பெறுமதியில் அமையப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரை

# பயங்கரவாதத் தடுப்பு - விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு



(மன்னார் நகர் நிருபர்)

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனை எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸார் ஊடாக குறித்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரான வி.எஸ்.சிவகரனை கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகும்போது அன்றைய தினம் குறித்த அமைப்பு சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்துவருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு புதிய உதவிப் பணிப்பாளர் நியமனம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் பணிமனையின் புதிய உதவிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ரி.பூலோக ராஜா நேற்று முன்தினம் (14) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

1998ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சேவை அதிகாரியாகவும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகவும் பணிபுரிந்த நிலையில் பதவி உயர்வு பெற்று நேற்று முன்தினம் உதவிப் பணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

குறித்த பதவிப்பிரமாண நிகழ்வு மதத் தலைவர்களின் நல்லாசியுடன் இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச, மாவட்ட சம்மேளனப் பிரதிநிதிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சமுர்த்தி பயனாளிகளுக்கான 28 வீத அதிகரிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு



(யாழ். நிருபர்)

2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் சமுர்த்தி பயனாளிகளுக்கான 28 வீத அதிகரிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அளவெட்டி வடக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.இதன்போது அளவெட்டி வடக்கு கிராமத்தைச் சேர்ந்த 267 பயனாளிகளுக்கு சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அளவெட்டி பிரதேச சமுர்த்தி வங்கி முகாமையாளர் கே. சந்திரகலா, தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் தலைமையக சமுர்த்தி முகாமையாளர் என்.ஹியூமன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவன் டெங்கு நோயால் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவன் டெங்கு நோய்த் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் மத்தியை சேர்ந்த 11 வயதுடைய வ.அஜய் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் டெங்கு தாக்கத்துக்குள்ளாகியே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாணவன் 2021ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய நிலையில், பரீட்சை முடிவுக்காக காத்திருந்த மிகச் சிறந்த புள்ளிகளை பாடசாலை மட்டத்தில் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மிகத் திறமை வாய்ந்த மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆங்கில மொழி ஆய்வுகூடம் – திறன் விரிவுரை மண்டபம் யாழ். பல்கலையில் திறந்துவைப்பு




(யாழ். நிருபர்)

எஹெட் திட்டத்தின் கீழ், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் மனித வள முகாமைத்துவத்துறையில் அமைக்கப்பட்ட ஆங்கில மொழி ஆய்வுகூடம், திறன் விரிவுரை மண்டபம் ஆகியன நேற்று முன்தினம் நண்பகல் திறந்துவைக்கப்பட்டன.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆங்கில மொழி ஆய்வுகூடத்தையும், திறன் விரிவுரை மண்டத்தையும் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் எஹெட் திட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி ஈ.வை.ஏ.சார்ள்ஸ், சிரேஷ்ட நிர்வாக அலுவலர் கே.கனகரட்ணம், வணிக முகாமைத்துவப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாஸன், மனிதவள முகாமைத்துவத்துறைத் தலைவர் கலாநிதி திருமதி ரி.ரவீந்திரன், செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ஆ.சரவணபவன், செயற்பாட்டு இணைப்பாளர்களான பேராசிரியர் என்.கெங்காதரன், கலாநிதி ஜே.றொபின்ஸன், ஆங்கில மொழி கற்பித்தல் துறைத்தலைவர் கலாநிதி எஸ்.சண்முகநாதன் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையம் மற்றும் மலையக இளைஞர் யுவதிகளின் முயற்சியில் இடம்பெறும் மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் துன்பங்களை எடுத்தியம்பும் புகைப்படக் கண்காட்சி நேற்று முன்தினம் யாழிலுள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் ஆரம்பமானபோது பல்வேறு தரப்பினரும் பார்வையிட்டு வந்தனர்.

# வேன் - மோட்டார்சைக்கிள் மோதி ஆராச்சிகட்டுவவில் கோர விபத்து

## அரச ஊழியர்கள் இருவர் உயிரிழப்பு



(ரஸீன் ரஸ்மின், ஜுட் சமந்த)

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் (14) இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வீதி அபிவிருத்தித் திணைக்கள ஊழியர்களான நல்லதரன்கடுவ பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய எஸ்.ஏ.ஜூட் மற்றும் 51 வயதுடைய கே.ஏ. பிரேம ஜயந்த ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் நுரைச்சோலை பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வேன் ஒன்று ஆராச்சிக்கட்டுவ பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் வலதுபுறம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்றின் மீது மோதி இழுத்துச் சென்றதுடன், எதிர்த்திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார்சைக்கிளில் மோதியுள்ளதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது எதிர்த்திசையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவ்விருவரும் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துடன் தொடர்புடைய வேன் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையே விபத்துக்கான காரணம் என மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வேனின் சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.வி.அருண சாந்த தலைமையில் போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொகவந்தலாவையில் விசேட சுற்றிவளைப்பு: கழிவுத் தேயிலையுடன் இருவர் கைது

## தீவிர விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுப்பு





(நோட்டன் பிரிட்ஜ்)

பொகவந்தலாவ பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவ லொய்னோன் தோட்டப் பகுதி தொழிற்சாலையிலுள்ள பெருந்தொகையான கழிவுத் தேயிலையை அனுமதிப்பத்திரமின்றி கொண்டுசெல்லப்பட்ட இருவர் மஸ்கெலியா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கழிவுத் தேயிலையும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட சுற்றிவளைப்பின்போது நேற்றுமுன்தினம் (14) மாலை மூன்று மணியளவில் இந்த கழிவுத் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளது.

மஸ்கெலியா விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது பொகவந்தலாவை நகரப்பகுதியில் வைத்து இருவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, பெருந்தொகையான கழிவுத் தேயிலையை கைப்பற்றியுள்ளதாகவும் அதனை ஏற்றிச்சென்ற லொறியை பொகவந்தலாவ பொலிஸாருக்கு ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக்கும் அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொவிட் நிதியத்துக்கு Cloud - 9 இசை நிகழ்ச்சியிலிருந்து ரூ. ஒரு மில்லியன்




Cloud – 9 International Event நிறுவனத்தினால், “செய்கடமை” கொவிட் -19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு அறக்கட்டளைக்கு ஒரு மில்லியன் ரூபா நன்கொடை வழங்கப்பட்டது.

இதற்கான காசோலை Cloud – 9 International Event நிறுவனத்தின் பணிப்பாளர் சமிந்த ஜயசேனவினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்றுமுன்தினம் (14) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதியன்று, CHEC Port City Colombo (Pvt) Ltd மற்றும் Cloud – 9 International Event நிறுவனம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்திருந்த Cloud – 9 இசை நிகழ்ச்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியே, இவ்வாறு நிதியத்துக்கு கையளிக்கப்பட்டது.

CHEC Port City Colombo (Pvt) Ltd நிறுவனத்தின் சட்டம் மற்றும் வர்த்தகத் தலைவர் எரிக் ஓ, உதவி முகாமைத்துவப் பணிப்பாளர் யூ யெக்குயிங், Cloud – 9 International Event பணிப்பாளர் தசுன் அபேசூரிய ஆகியோரும் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தார்.

# 17 வயதான பாடசாலை மாணவன் தற்கொலை

(கெலும் குணதிலக்க)

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாரி ஆராவ, பல்லேவெலபெத்தவில் 17 வயதான பாடசாலை மாணவனொருவன் தூக்கிட்ட நிலையில் நேற்றுமுன்தினம் (14) சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.


காதல் தொடர்பினால் ஏற்பட்ட பிரச்சினையே மாணவனின் தற்கொலைக்குக் காரணம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மாரிஆராவ பகுதி பாடசாலையொன்றில் தரம் 12இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இச்சிறுவனின் சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் மொனராகலை மாவட்ட வைத்தியாசலையில் நேற்று இடம்பெற்றன.

இச்சம்பவம் தொடர்பில் தம்பகல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஜீ.எஸ்.ஜயவீர தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(தற்கொலை செய்துகொள்வது தவறான தீர்மானமாகும். அவ்வாறான எண்ணம் தோன்றினால் உளநலம் தொடர்பில் 1926 என்ற இலக்கத்துக்கு அழைத்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்)

# காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் குறைந்தது



(மனுர சுதத் செல்லஹேவா)

மத்திய மாகாணத்தில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக காசல்ரீ மற்றும் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்து காணப்படுகிறது. அங்கு கடந்த வாரங்களில் 50 வீதத்தில் நீர்மட்டத்தின் அளவு குறைவடைந்து காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், நேற்றைய தினம் நீர்மட்டத்தின் அளவு மேலும் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குற்றம் தவிர்

## போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் கைது

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 33ஆம் தோட்டத்தில் கொழும்பு வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது 62 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்றுமுன்தினம் (14) சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்பாஸை சேர்ந்த 48 வயதான நபர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### கடவத்தை

கடவத்தை, ராகம வீதி பாலத்துக்கருகில் வைத்து 05 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த நபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (14) கைதுசெய்துள்ளனர்.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 40 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீவலி ஒழுங்கையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம (14) நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போது 02 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பெல்மதுளையைச் சேர்ந்த 55 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### கட்டுகஸ்தோட்டை

கண்டி, பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கட்டுகஸ்தோட்டை கஹல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் (14) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது ஒரு கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த 20 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### அநுராதபுரம்

அநுராதபுர நகரில் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 02 கிராம் 50 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 60 போதைப்பொருள் வில்லைகளை தம்வசம் வைத்திருந்த இருவர் நேற்றுமுன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 17 மற்றும் 21 வயதுடைய கணேமுல்ல, அநுராதபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

## சட்டவிரோத மரக்கடத்தல்

### கேகாலை

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனிய பகுதியில் பொலிஸ் சோதனைச்சாவடியில் நேற்றுமுன்தினம் (14) பொலிஸார் சோதனையிட்டபோது சட்டவிரோதமான முறையில் மரங்களை கடத்திச்சென்ற லொறியொன்று அடையாளங்காணப்பட்டுள்ளது.

இவற்றுடன் லொறியை செலுத்திச்சென்ற கேகாலையைச் சேர்ந்த 55 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மணல் கடத்தல்

### அரலகங்வில

அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 08ஆம் மைல்கல் பகுதியில் வைத்து ட்ரெக்டர் ஒன்றில் சட்டவிரோதமான மணல் ஏற்றிச்சென்ற இருவர் நேற்றுமுன்தினம் (14) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பொலன்னறுவை மற்றும் தேவகல பகுதிகளைச் சேர்ந்த 35 வயதுடையவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

# பொதுஜன பெரமுனவின் ஏற்பாட்டில் புத்தளம் மகளிருக்கான செயலமர்வு









(ரஸீன் ரஸ்மின்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட மகளிருக்கான வழிகாட்டல் செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (13) புத்தளத்தில் இடம்பெற்றது.

“அதிகாரமற்ற மனிதநேயம்” எனும் தலைப்பில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் தொகுதி அமைப்பாளருமான சிந்தக்க மாயாதுன்னவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, சனத் நிசாந்த பெரேரா உட்பட நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், ஸ்ரீ.பொ.பெரமுன பிரதேச, மாவட்ட அமைப்பாளர்கள், சமயத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது புத்தளம் மாவட்டத்திலுள்ள மகளிர் அமைப்புகள் ஊடாக முதற்கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் காலங்களில் புத்தளம் மாவட்டத்திலுள்ள பெண்களுக்கு சுயதொழில் ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பல வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துகொண்ட பெண்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

அத்துடன், சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, படித்துவிட்டு தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கும் யுவதிகளுக்கும், கணவனை இழந்த பெண்களுக்கும் வீட்டிலிருந்து சுயதொழிலை மேற்கொள்வதற்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆலோசனையில் எமது அமைச்சு ஊடாக விசேட வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த நிகழ்வில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், கலந்துகொண்ட பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.









யாழ்ப்பாணம், கன்னாதிட்டி காளியம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று (15) பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ. சிவசாந்தன்)

# வாயிற்கதவுகளை களவாடும் கும்பல் ஹங்வெல்லயில்!


## பொலிஸார் அசமந்தப்போக்கு

(சாமர பல்லேகெதர)

ஹங்வெல்ல பகுதியில் இரவுவேளைகளில் வாயிற்கதவுகளை களவாடிச் செல்லும் நபர்களைக் கைதுசெய்யாமல் பொலிஸார் அசமந்தப்போக்குடன் செயற்படுவதாக பொதுமக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இவ்வாறு களவாடும் நபர்கள் குறித்து தகவல்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இரவுவேளைகளில் முச்சக்கரவண்டியொன்றில் வரும் நபர்கள்



வீடுகள், வர்த்தக நிலையங்களிலுள்ள வாயிற்கதவுகளை கழற்றிச் செல்கின்றனர். அண்மையில் முன்பள்ளியொன்றின் வாயிற்கதவு களவாடப்பட்டுள்ளது.

இவ்வாறு களவாடப்படும் வாயிற்கதவுகளை அப்பகுதியிலுள்ள இரும்பு விற்பனை நிலையமொன்றிலிருந்து அதிகாலை வேளையில் வேறொரு இடத்துக்கு லொறியில் அனுப்பிவைக்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்தும், திருடர்கள் மற்றும் முச்சக்கரவண்டி குறித்தும் தகவல் வழங்கியுள்ளபோதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# தவறான உறவால் நேர்ந்த சோகம்

## 60 வயது காதலியும் 32 வயது மனைவியும் ஒரே நாளில் தற்கொலைக்கு முயற்சி

**ஒருவர் உயிரிழப்பு; மற்றையவர் தீவிர சிகிச்சைப் பிரிவில்!**

(எஸ். ஜயசிங்க)

பிலியந்தலையில் 40 வயதுடைய நபரொருவருடன் காதல் தொடர்புகொண்ட பெண்ணொருவரும் சம்பந்தப்பட்ட நபரின் மனைவியும் ஒரே தினத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்ய முயற்சித்த சம்பவம் களுபோவில வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட நபருடன் காதல் தொடர்பைப் பேணிய - இவ்வாறு தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த 60 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபரின் வீட்டில் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த குறித்த நபரின் 32 வயதுடைய மனைவி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண்கள் இருவருமே பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்கொலை செய்துகொண்ட 60 வயது பெண்ணின் கணவர் 15 வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். அதன் பின்னரே அந்தப் பெண் குறித்த நபருடன் காதல் தொடர்பைப் பேணி வந்துள்ளார். காதலின் விளைவாக அந்தப் பெண்ணினால் அவரின் சகல சொத்துகளும் குறித்த நபரின் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் பிலியந்தலை பிரதேசத்திலுள்ள பெண்ணொருவருடன் இரகசிய திருமணம் செய்துகொண்டுள்ளமை சில தினங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட பெண்ணுக்கு தெரியவந்துள்ளது. அதற்கமைய, குறித்த பெண் அந்த வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்குசென்று தனது கணவரின் காதல் மனைவி தொடர்பில் சகல தகவல்களையும் உறுதிப்படுத்திக்கொண்டு மீண்டும் அவரது வீட்டுக்குத் திரும்பி வந்துள்ளார்.

அதன்பின்னர் பணிப்பெண்ணை வீட்டிலிருந்து வெளியே அனுப்பிவிட்டு வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவரின் சடலத்துக்கு அருகில், தான் நீண்டகாலம் காதலித்த 40 வயதுடைய நபருக்கு எழுதிய பல பக்கங்களைக்கொண்ட கடிதமொன்று கண்டெடுக்கப்பட்டதாக பிரேத பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் தனது வீட்டுக்கு வந்ததையடுத்து குறித்த நபரின் மனைவி, 60 வயதுடைய பெண்ணுடன் காதல் தொடர்பு பேணிவந்த நபரொருவரையே தான் திருமணம் செய்துள்ளமை தெரிய வந்ததால் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்துள்ளார். எவ்வாறாயினும் 32 வயது நிரம்பிய குறித்த பெண்ணை விரைவாக வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் அவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.




# சிம் விற்பனை என்ற போர்வையில் ஹெரோயின் வியாபாரம்!

## முதியோரின் அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்திய தம்பதியினரின் இரகசியம் அம்பலம்

சிம் அட்டைகள் விற்பனை செய்யும் போர்வையில் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்டுவந்த கணவன் - மனைவியை அநுராதபுரத்தில் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். அநுராதபுரம், புத்தகயா மாவத்தையில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடமிருந்து ஏழாயிரம் மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

சிம்களை பெற்றுக்கொள்ள வரும் முதியோரின் அடையாள அட்டை பிரதிகளைக்கொண்டு இவர்கள் இருவரும் வேறு சிம்களை வாங்கிக்கொள்வதாகவும் அதனூடாக கதைத்து ஹெரோயின் வர்த்தகத்தை மேற்கொள்வதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கண்டி, குருதெனிய மற்றும் தலவாக்கலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28 வயது ஆணும் 26 வயது பெண்ணொருவருமே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட பொதுமக்கள் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு வழங்கிய இரகசிய தகவலுக்கமையவே விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# உயர்ஸ்தானிகர் அமரசேகர ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தென்னாபிரிக்க நாடுகளின் ஆதரவை கோரல்







எதிர்வரும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அமர்வுகளில் கவனம் செலுத்துதல் மற்றும் நாடுகள் ஒன்றிணைந்த நாடுகளாக உருவாகியுள்ள ஆபிரிக்க பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, தென்னாபிரிக்காவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சிறிசேன அமரசேகர அந்நாட்டின் அரச அதிகாரிகள் மற்றும் தென்னாபிரிக்காவிற்கு அங்கீகாரம் பெற்ற நாடுகளின் தூதுவர்களுடன் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் இலங்கை அடைந்துள்ள சாதனைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக பல சந்திப்புகளை நடத்தினார்.

இது தொடர்பாக அவர் நமீபியாவின் உயர்ஸ்தானிகர் வெய்க்கோ கே நிகிவெட், சிம்பாப்வே தூதுவர் டி.டி.ஹமட்சிரிபி, மலாவியின் உயர்ஸ்தானிகர் ஸ்டெல்லா சி. ஹவுயா நடாவ் மற்றும் தென்னாபிரிக்காவிலுள்ள சுவிட்சர்லாந்தின் பொறுப்பாளர் வெரோனிக் ஹாலர் ஆகியோரை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில், உயர்ஸ்தானிகர் அமரசேகர, வெளித் தரப்பினரால் திணிக்கப்பட்ட பொறிமுறையை விட, உள்நாட்டு சமூக அரசியல் சூழலுக்குள் உள்ள உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான உள்நாட்டுப் பொறிமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைவிட வெளிக் கட்சிகளின் தலையீடு இனப்பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கு



வதாக அவர் குறிப்பிட்டார்.

அதனைத் தீர்ப்பதற்கான அதிகாரமும் விருப்பமும் ஆற்றலும் இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு. ஆனால், தேவையற்ற வெளித் தலையீடுகளால், பிரச்சினையைத் தீர்க்கும் அரசாங்கம் குற்றஞ்சாட்டப்பட்டு, தனது பணியைச் செய்யவிடாமல் தடுக்கப்படுகிறது.

மோதலின் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் கிட்டத்தட்ட அனைத்தையும் செய்துள்ளதாக உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

தேவையற்ற சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அரசாங்கம் தற்காப்புப் பாத்திரத்தை வகிக்க தனது சொற்ப வளங்களை தியாகம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சர்வதேச தரப்புகள் இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்தின் பிரச்சினைகளில் உண்மையாக அக்கறை காட்டினால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முயற்சியில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். தீர்வைக் காண அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு அழுத்தக் குழுக்களை ஊக்குவிப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகளின் கடமையாவதுடன், இலங்கையில் பல்வேறு இனங்களுக்கிடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க உதவுவதுமாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டங்களில், பொறுப்புள்ள தரப்பினரால் தவறுகளைச் சரிசெய்ய முடியாவிட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு சேவை செய்யாவிட்டால், "பொறுப்புக்கூறல்'' என்ற வார்த்தைக்கு எந்த அர்த்தமும் இல்லை என்று உயர்ஸ்தானிகர் விளக்கினார்.

உயர்ஸ்தானிகர் அமரசேகர, அடிப்படையற்ற மற்றும் இட்டுக்கட்டப்பட்ட கதைகளில் தங்கியிருக்காமல் பரந்த கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையைப் பார்க்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

நேஸ்பி பிரபுவின் புத்தகம் மற்றும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அவர் எழுதிய பல்வேறு கட்டுரைகளை மேலும் குறிப்பிட்ட அவர், உண்மையாக சரியான மற்றும் பக்கச்சார்பற்ற பகுப்பாய்வுகளை வெளிப்படுத்துகின்றது.

பக்கச்சார்பான தகவல்களால் தவறாக வழிநடத்தப்பட்ட தரப்பினரை, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை திறந்தமனதுடன் மறுபரிசீலனை செய்ய ஊக்குவிக்குமாறு உயர்ஸ்தானிகர் அமரசேகர பாரபட்சமற்ற ஆபிரிக்க நாடுகளிடம் கோரிக்கை விடுத்தார்.

# இராணுவ வீடமைப்புத் திட்டத்தின் ஊடாக 48 வீரர்களுக்கு நிதி உதவி

இலங்கை இராணுவத்தின் உயிரிழந்த போர்வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள், காயமடைந்த, ஓய்வுபெற்ற மற்றும் சேவையில் இருக்கும் இராணுவ வீரர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்கான வீடமைப்புத் திட்டத்தின் 07ஆவது கட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (14) காலை இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 48 வீடுகளின் நிர்மாணப் பணிகளுக்கான நிதி உதவிகள் வழங்கப்பட்டதுடன், 11 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கும் 37 வீடுகள் பகுதியளவு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகளை முழுமைப்படுத்துவதற்குமாக மேற்படி நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தினூடாக முழுமையாக புதிய வீடொன்றை நிர்மாணித்துக் கொள்ள ரூபா 1.5 மில்லியன் மற்றும் பகுதியளவில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது போரில் வீர மரணம் எய்திய 9 வீரர்களின் குடும்பத்தினரும், காயமடைந்த 12 வீரர்கள், 03 ஓய்வுபெற்ற வீரர்கள் மற்றும் சேவையிலிருக்கும் 24 இராணுவ வீரர்களும் குறித்த நிதியுதவியினை பெற்றுக்கொள்ளும் முகமாக கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஜெனரல் ஷவேந்திர சில்வா கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உதவித்தொகையை வழங்கினார். இத்திட்டம் கடந்த ஆறு கட்டங்களாக இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் இத்திட்டத்தின்கீழ் 244







முழுமையான வீடுகளை நிறுவுவதற்கும் 24 பகுதியளவான வீடுகளை நிர்மாணிப்பதற்குமான நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளதோடு, இராணுவ பதவிநிலை பிரதானி மேஜர் ஜெனரல் விகும் லியனகே உள்ளிட்ட பல சிரேஷ்ட அதிகாரிகள் உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்துகொண்டனர்.

# 11 வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்த நபருக்கு 19 வருட சிறை

மொனராகலையில் 11 வயது சிறுவனை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகப்படுத்திய குற்றச்சாட்டுக்காக குடும்பஸ்தர் ஒருவருக்கு 19 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து மொனராகலை மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு தந்தையின் வேண்டுகோளின் பேரில் கடைக்குச் சென்றுவந்த சிறுவனை அழைத்துச்சென்று துஷ்பிரயோகம் செய்ததாக குடும்பஸ்தர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில் சந்தேக நபர் குற்றவாளியென கண்டறியப்பட்டதால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஹம்பேகமுவவைச் சேர்ந்த 59 வயதான நபர் ஒருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் 15 இலட்ச ரூபா அபராதம் செலுத்துமாறும் சிறுவனின் குடும்பத்துக்கு ஒரு இலட்ச ரூபா செலுத்துமாறும் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தண்டப்பணத்தை செலுத்தாத பட்சத்தில் தண்டனைக்காலத்தை மேலும் மூன்றரை வருடங்கள் அதிகரிப்பதற்கும் நீதிமன்றம் பணிப்புரைவிடுத்துள்ளது.

# சபாநாயகர் தலைமையில் டி.பி.ஜயதிலக்கவின் 154 ஆவது நினைவேந்தல் நிகழ்வு கொழும்பில்

(அஷ்ரப் .ஏ.சமத்)

டி.பி.ஜயதிலக்கவின் 154ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (14) கொழும்பு 07 இல் உள்ள பொது நம்பிக்கை பொறுப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஜயதிலக்கவின் உருவச்சிலைக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, இந்திய உயர் ஸ்தானிகர், தொல்பெருள் கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் ஜயதிலக்கவின் உறவினர்களும் இணைந்து மலர்வளையங்களை வைத்து நினைவஞ்சலி செலுத்தினார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அங்கு உரையாற்றுகையில்,

ஜயதிலக்க இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகவும், கல்விக்காகவும் பௌத்த மதத்திற்காகவும் பௌத்த இளம் பரம்பரையினரை இணைத்து இளம் பௌத்த வாலிபர்கள் சங்கத்தினையும் நிறுவி நாடளாவிய ரீதியில் நிறுவி இந்த நாட்டுக்கு அரும் பெரும் சேவையை செய்தவர்.

அவர் இலங்கையின் சுதந்திரத்திற்கும் தன்னையே அர்ப்பணித்ததொரு வீரபுருஷர். அவர் கொழும்பில் வாழ்ந்த வீடுதான் இந்த அலுவலகமாகும். தனது சொத்துகளை அரசுக்கு அன்பளிப்புச் செய்து பொது நம்பிக்கை பொறுப்பாளர்







திணைக்களத்தினை உருவாக்கினார்.

ஜயதிலக்கவை தற்போதைய இளம் பராம்பரையினர் கட்டாயம் அறிந்திருத்தல் அவசியமாகும். இவ்வாறு அவரது வருடா வருடம் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது சிறந்த அம்சமாகும். அவர் இந்த நாட்டின் அரும் பெரும் சொத்தாகும். அவர் பிரிவீனை, வித்தியோதய வளாகத்தினை உருவாக்கினார். பௌத்த அறநெறி பாடசாலைகளை பண்சாலைகளில் உருவாக்கியவர். தான் வெளிநாடுகளில் கல்விகற்றாலும் தனது நாடு, மக்கள், கல்வி மேம்பாட்டுக்காக சாதாரண மனிதராக சிறந்த சிங்களவராக இருந்து செயல்பட்டார். 1943இல் பிரித்தானியர்கள் இவருக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தனர். 1944இல் இலங்கை சுதந்திரமடைய முன்னர் முதலாவது இந்தியத் தூதுவர் பதவியும் வகித்தார். 1944இல் அவர் உடுநுவரயிலேயே மரணமாகவேண்டும் என்றெண்ணி அங்கேயே அவர் மரணமானார். ஆங்கில வைத்திய முறையில்லாமல் உள்ளூர் ஆயுள்வேத மருத்துவ முறையையே அவர் விரும்பினார். களனி வித்தியலங்கார, கண்டி தர்மராஜ, ஆனந்தாக் கல்லூரிகளில் கல்விப் பணி செய்தார் என சபாநாயகர் அங்கு உரை நிகழ்த்தினார்

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருக்கு பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களப் பணிப்பாளர்களுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தமானது இளம் இளைஞர்கள் வாலிபர்கள் கொண்ட தொல்பொருட்களைப் பாதுகாக்கும் சங்கமொன்றும் நிறுவதற்கும், சேர் ஜயதிலக்க வாழ்க்கை வரலாறு பற்றி தொலைக்காட்சி ஒளி, ஒலி நூலகம் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. 154 பிறந்த தினத்திலிருந்து ஆரம்ப நிகழ்வாகக் கொண்டு அடுத்த ஆண்டு பெப்ரவரி 13 வரை ஒரு வருட காலத்திற்குள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல். எனவும் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார். இந்நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் - கனேஸ் விக்கிரமரத்தினவும் வரவேற்புரை நிகழ்த்தினார்.



# கிழக்கு மக்களை ஆகாயத்தில் மின்னும் தாரகைகளாக மாற்ற முயன்றார் அஷ்ரப்

## அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கும் விழாவில் பேராசிரியர் எம்.எம்.பாஸில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் கிழக்கு மாகாண மக்களை ஆகாயத்தில் மின்னுகிற தாரகைகளாக ஆக்க முனைந்தார் - என தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரப் பிரிவின் பீடாதிபதியும் அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியருமான எம்.எம்.பாஸில் தெரிவித்தார்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முஸ்லிம் மஜ்லிஸ் வருடாந்தம் நடத்தும் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஞாபகார்த்த புலமைப்பரிசில் மற்றும் 2020, 2021ஆம் ஆண்டுகளில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு



சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றவேளை, அதில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை துறைமுக அதிகாரசபை முஸ்லிம் மஜ்லிஸின் தலைவரும் துறைமுக அபிவிருத்தி பிரதம பொறியியலாளருமான ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்புக்குரிய சகோதரர்களே! முஸ்லிம்களின் கல்வியினை எடுத்து ஆராய்கின்றபோது, முஸ்லிம்களின் உயர் கல்வியானது 1970 காலகட்டத்தில் மிகவும் வறண்டு கிடந்தது. பதியுதீன் மஹ்மூதின் பங்களிப்பின் காரணமாக அது ஓரளவுக்கு துளிர்விட ஆரம்பித்தவேளையில்தான் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் அரசியல் வருகையானது முஸ்லிம் சமூகத்தின் உயர் கல்வியில் மிகப்பெரும் சாதனையை வெளிக்காட்டி நிற்கிறது. அந்த சாதனை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினூடாக பிறக்க வந்திருக்கிறது.

அஷ்ரப் மறைந்து போனாலும் உயிரோடு இருக்கிறார் என்பதற்குரிய அத்தாட்சியாக நீங்கள் என்னை பாருங்கள். ஒரு சாதாரணமானவரின் மகனாக நான் பிறந்தேன். என்னுடைய தந்தை வேளாண்மை செய்பவர்; மீன் பிடிப்பவர்; இயற்கை மருத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர்; சில வகுப்புகள் மாத்திரம்தான் படித்தவர்; எனக்குத் தெரிந்தவரையில் ஓரளவுக்கு எழுதுவார்; வாசிப்பார். அப்படிப்பட்ட ஒருவரை, இந்த கிழக்கின் மக்களை ஆகாயத்தில் மின்னுகின்ற தங்கத்தைபோன்று மாற்றியமைத்த பெருமை அல்லாஹ்வுடைய உதவியால் அது அஷ்ரப்பையே சாரும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் படித்த மாணவர்களுக்குள்ளே அரசறிவியலில் முதலாவதாக சித்தியடைந்த மாணவர்களில் நானும் ஒருவன். அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களில் நானும் ஒருவன். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினுடைய மாணவர்களின் வரிசையில் என்னுடைய நண்பர் றமீஸ் அபூபக்கருக்கு அடுத்ததாக ஒரு பீடத்தின் பீடாதிபதி பதவியைப் பெற்றவன் நான். அது மாத்திரமல்ல, சகோதரர்களே! இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல் விஞ்ஞான பேராசிரியர்கள் வரலாற்றில் அல்லாஹ் எனக்குத்தான் முதல் சந்தர்ப்பத்தை தந்திருக்கிறான் என்றால், அஷ்ரப் உருவாக்கியிருக்கும் இந்த பல்கலைக்கழகம் உங்களுடைய பிள்ளைகளுக்கும் வெளியில் இருப்பவர்களுடைய பிள்ளைகளுக்கும் எப்படி சந்தர்ப்பத்தை கொடுக்கவிருக்கிறது என்பதைப் பற்றி கேள்வி எழுப்ப விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும். என்னைவிட நான்கு வயது குறைந்த என்னுடைய அன்புக்குரிய சகோதரர் நண்பன் றமீஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர். அவருடைய தந்தையின் தொழில் உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர் மேசன் வேலை செய்பவர். தந்தையோடு சேர்ந்துகொண்டு மேசன் வேலைக்குச் றமீஸ் செல்வது வழக்கம். அவரைப் பற்றி மிக நீண்ட வரலாற்றை இன்ஷா அல்லாஹ் நான் எதிர்வரும் சந்தர்ப்பங்களில் பேசுவேன். நான் சொல்ல வருகிற விடயம் என்னவென்றால், அஷ்ரப் உருவாக்கிய இந்தக் கல்வி முறைமை இந்தச் சமூகத்தை எப்படி ஆகாயத்தில் மின்ன வைக்க முடிந்திருக்கிறது. அவரைப் பற்றிய விமர்சனங்கள் இருக்கக்கூடும். அது ஒருபுறமிருக்க, அவர் செய்த சரியான விடயங்களைப் பற்றி மிகக் கவனமாக நாங்கள் பேசுவதற்காகத்தான் இந்த இடத்தில் கூடியிருக்கிறோம். அதனை நாங்கள் ஞாபகப்படுத்த வேண்டும். உங்களுக்குத் தெரியும். அப்துல் மஜீத் என்ற மூத்த துணைத் தலைவருடைய வீட்டுக்கு அஷ்ரப் வந்திருந்தபோது இங்கு பரிசுபெறுகின்ற இந்த சிறார்களுடைய வயதில் றமீஸ், சென்றிருந்தபோது அஷ்ரப் அழைத்து, "என்ன மகன் படிக்கிறாயா?" என்று கேட்டு விட்டு, உங்களுக்குத் தெரியுமா ஐலண்ட் என்று சொல்லுகிற ஆங்கிலப் பத்திரிகையை கொடுத்து "இதன் தலைப்பை வாசியுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அதற்கு றமீஸ் ஸ்லண்ட் என்று வாசித்திருக்கிறார்.

"இன்னும் நன்றாக படிக்க வேண்டும் மகன்" என்று அஷ்ரப் சொல்லி இருக்கிறார். உனக்கு ஒன்றும் தெரியவில்லை என்று சொல்லவில்லை. நன்றாக படிக்க வேண்டும் மகன் என்று



அவரை சிறுபராயத்தில் தட்டி உயர்த்திவிட்டு, அஷ்ரப் கனவு கண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இந்தக் குழந்தைகளின் கல்வியை உயர்த்தும் என்று கனவு கண்டார். அதுதான் இன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த 04 உபவேந்தர்களுக்கப்பால் அஷ்ரப் உருவாக்கிய, அஷ்ரப்பின் பல்கலைக்கழகத்தில் படித்த ஒரு மாணவன் சிறுவயதிலேயே இலங்கையின் வரலாற்றில் சிறுவயது உபவேந்தர்களுள் ஒருவராகப் பதவிப்பிரமாணம் செய்திருக்கின்றார் என்றால், அஷ்ரப்புடைய தூரநோக்கும் இந்த கிழக்கு மக்கள் ஆகாயத்தில் மின்னப் போகிறார்கள் என்பதையும் எப்படி வடிவமைத்து இருக்கிறார் என்பதை சிந்தித்துப் பாருங்கள். றமீஸைப் பற்றி இன்னும் ஒன்று சொல்லவேண்டும். றமீஸுக்கு முன்னர் இருந்த உபவேந்தர் பேராசிரியர் நாஜீம் மிகத் திறமையானவர். விஞ்ஞானப் பிரிவிலே படித்தவர். அவர் சொல்லுகிறபோது சொன்னார். எனக்கு 50 வீதம் மாத்திரம் தெரியும் என்றால் றமீஸுக்கு 100 வீதம் ஆங்கிலம் தெரியும் என்றார். எப்படி அல்லாஹ் அந்த அஷ்ரப்புடைய கனவை அவருடைய ஆசீர்வாதத்தை உலகத்திலே வெளிக்காட்டியிருக்கிறான் என்பதை பற்றி நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் அஷ்ரப் கிழக்கின் ஏழைகளை ஆகாயத்தில் மின்னுகிற தாரகைகளாக ஆக்குவதற்காக அல்லாஹ் அவருக்கு உதவி செய்தான் என்பதனை நாங்கள் பேசாமல் இருக்கமுடியாது. நாங்கள் பேசித்தான் ஆகவேண்டும்.

மிகச் சாதாரணமான முறையில் உருவாக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அஷ்ரப் அதனை உருவாக்கியபோது அட்டாளைச்சேனையில் இரண்டு பீடங்கள். கலை மற்றும் வர்த்தக முகாமைத்துவப் பீடம் என்பன மாத்திரமே இருந்தன. அஷ்ரப் இப்படிச் சொன்னார். தென்கிழக்குப் பல்கலைக்கழகம் வரலாற்றில் ஒரு நாளைக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பதிலும் பார்க்க, ஒரு விஞ்ஞான தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக மாறும். அதுதான்



என்னுடைய சமூகத்தினுடைய மேம்பாடு. அதுதான் ஆகாயத்தில் மின்னுவதென சொல்லியிருந்தார். உங்களுக்குத் தெரியும். எங்களுக்குப் புதிய பீடங்களான பொறியியல் பீடம், தொழில்நுட்பப் பீடம் என்பன கிடைத்திருக்கின்றன. ஏற்கனவே எங்களிடத்தில் பிரயோக விஞ்ஞான பீடம் இருக்கிறது.

இந்த இலக்கினுடைய தொழிற்சந்தையில் பொறியியல் பீட மாணவர்கள் 97 சதவீதமாகக் காணப்படுகின்றனர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் கற்கின்ற ஒரு தேசிய பல்கலைக்கழகமாக மாறியிருக்கிறது. ஆனால், 5,500 வரையான மாணவர்களில் பெரும்பான்மையானோர் முஸ்லிம் மாணவர்கள். கிட்டத்தட்ட 200 - 250 வரைக்குமான கல்வி கற்பிக்கின்ற விரிவுரையாளர்களில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்கள். இங்கு கடமை புரிகின்ற 500இற்கும் மேற்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். கிழக்கு மாகாணத்திலே அரசினுடைய மிகப்பெரிய நிறுவனம் எங்களுடைய திருகோணமலைத் துறைமுகம். இரண்டாவது கிழக்குப் பல்கலைக்கழகம். மூன்றாவது தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

எனவே, அஷ்ரப் சாதித்து இருக்கிறாரா இல்லையா என்பதைப் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய, பேசவேண்டிய, இதனை வெளியில் சொல்லவேண்டிய காலத்தில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு மருத்துவப் பீடத்தைக் கொண்டுவருவதற்கு உபவேந்தர் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார். எங்களுடைய சமூகம்



பயன் பெறவேண்டுமென்றால், மருத்துவ பீடம் வரவேண்டுமென்று எங்கள் பிராந்தியத்தினுடைய வைத்தியர்கள் சொல்கிறார்கள். அதுவும் வந்துவிட்டால் இந்தப் பிராந்திய சமூகத்தினுடைய வாழ்வுக்காக அஷ்ரப் வித்திட்டவற்றில் பெரும்பாலானவற்றை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரச்சினைகள், விமர்சனங்கள் இருக்கக்கூடும். அதனையும் தாண்டி அஷ்ரப்பின் தூரநோக்கும் அவர் இந்தப் பிராந்தியம் தங்கம் போன்று மின்னுவதாக கருதிய விடயமும் நடந்துகொண்டிருப்பதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்



அஷ்ரப் அமைத்து தந்த ஒரு நூலகம் அமையப் பெற்றிருக்கிறது. அந்த நூலகத்தில் மொத்தமாக 1,30,000 நூல்கள், சஞ்சிகைகள், டிவிடி சிடிக்கள் போன்றன அடுக்கிக் கிடக்கின்றன. ஏனைய 16 பல்கலைக்கழகங்களோடு ஒப்பிடுகின்றபோது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்தான் அதிகம் புதிய நூல்கள் காணப்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

நாங்கள் பல்கலைக்கழகத்துக்கு படிக்க போனபோது தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்கள், கலாநிதிகளே இல்லை. எந்தவொரு கலாநிதியும் இல்லாமல்தான் பல்கலைக்கழகத்தை அஷ்ரப் உருவாக்கினார். உபவேந்தர் பேராசிரியர் காதர் எம்.ஏ. முடித்தவர் மாத்திரம்தான். இன்று நாங்கள் எத்தனையோ கலாநிதிகளைப் பெற்றுவிட்டோம். 22இற்கும் மேற்பட்ட பேராசிரியர்களைப் பெற்றுவிட்டோம். இவர்களுள் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். அறிவுக்கு பங்களிப்புச் செய்து கொண்டிருப்பவர்கள். இன்னும் 10இற்கும் மேற்பட்டவர்கள் ஆகப்போகிறார்கள். இதன் முழுப் பொறுப்பும் முழு விடயமும் அஷ்ரப்பைத்தான் நிச்சயமாக போய்ச் சேர இருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கும்



கொழும்புக்கும் பேராதனை பல்கலைக் கழகத்துக்கும் மாணவர்கள் செல்கின்றபோது ஒவ்வொரு மாதமும் மீன்பிடித்து, வேளாண்மை வெட்டி வீட்டிலேயே நெய்து நாங்கள் ஆயிரக்கணக்கான ரூபாக்களை அனுப்பிவைத்தோம்.

நான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு போகிறபோது என்னோடு சில மாணவர்கள் வந்தார்கள். ஆரம்பத்தில் எங்களுக்கு மருதமுனையிலிருந்து அட்டாளைச்சேனை அல்லது ஒலுவிலை சென்றடைவதற்கு 7 ரூபா மாத்திரம்தான். என்னுடைய ஊரைச் சேர்ந்த ஏழை மாணவர்கள், இன்று பெரும் பதவியில் இருப்பவர்கள் வெறும் 14 ரூபாவோடு வருவார்கள். போய்ச் சேர்வதற்கு 07 ரூபா. திரும்பி வருவதற்கு 07 ரூபா. சீசன் டிக்கெட்டை 300 ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டும் என்று பெற்றுக்கொள்ள



மாட்டார்கள். இந்த 14 ரூபாவோடு வந்து படித்துவிட்டு, வீட்டில் சாப்பிட்டு தங்களுடைய பசியைப் போக்கிக்கொள்கிற 14 ரூபாவுக்குள்ளே பல்கலைக்கழகத்தின் ஒரு நாளை முடிக்கிற ஓர் உன்னதமான பணியைச் செய்து தந்தவர் தான் எம்.எச்.எம்.அஷ்ரப்.

ஏனைய பிராந்திய மாணவர்கள் இலங்கையின் 17 பல்கலைக்கழகங்களில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தவிர்ந்த எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் முழு மொத்தமான அம்பாறை மாவட்டத்தின் தூர மற்றும் வெளி மாவட்ட மாணவர்களுக்கு படிக்கிற எல்லா வருடங்களுக்கும் விடுதி கொடுக்கிற வரலாறு கிடையாது. மரபு கிடையாது. இரண்டாம் மூன்றாம் வருடங்களிலேயே வெளியில் போடுவார்கள். பெரும்பாலும் முதலாம் வருடத்தில் மற்றும் இறுதி வருடத்தில் மாத்திரம்தான் விடுதி கொடுப்பார்கள். அஷ்ரப் பல்கலைக்கழகத்தில் எல்லா வருடங்களிலும் அவர்கள் விடுதியை அனுபவித்துக்கொண்டிருக்கிற இந்த சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.

நான் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பல கூட்டங்களில் இதைவிட மிகப்பிரம்மாண்டமாக விடயங்களை ஆய்வு ரீதியில், இந்தப் பல்கலைக்கழகம் வளர்ச்சியடைந்திருக்கும் விடயங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறேன். ஆனால், அவற்றையெல்லாம் சொல்வதற்கு இது பொருத்தம் இல்லை என்பதனால் முஸ்லிம் மஜ்லிஸினருக்கு இறுதியாக நான் ஒரு விடயத்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சகோதரர்களே! நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். நான் என்னுடைய குடும்பப் பின்னணியைப் பற்றி சொன்னேன். றமீஸுடைய குடும்பப் பின்னணியைப் பற்றிச் சொன்னேன். அஷ்ரப் உங்களுக்கு செய்திருக்கிற காரியம்தான், உங்களுக்கு செய்திருக்கிற முக்கியமான அம்சம்தான் இந்த உலக வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

நெய்கிற, வேளாண்மை வெட்டுகிற, வியாபாரம் செய்கிற இந்தச் சமூகம் நீங்கள் கண்டிருக்கிற சம்பளத்தை காணவில்லை. நீங்கள் வெளியில் சொல்லாவிட்டாலும் எங்களுக்குத் தெரியும். நீங்கள்தான் முஸ்லிம் சமூகத்தில் பச்சைத் தாள்களை அதிகமாக எண்ணியவர்கள். 05 ஆயிரம் ரூபா தாள்களை அதிகமாக எண்ணியவர்கள். எண்ணிக்கொண்டிருப்பவர்கள். உங்களில் மிகச் சாதாரணமான தொழில் புரிகின்ற ஒருவருடைய துறைமுக அதிகாரசபையின் ஊழியரும் எங்களின் இந்தப் பிராந்தியத்தில் அரசு தொழில் புரிபவர்களை விட பன்மடங்கு வருமானத்தை பெற்றுக்கொள்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். அதனை அஷ்ரப் எவ்வாறு கண்டுபிடித்தார். அதுதான் ஒரு தலைவன்.

அந்த ஒரு தூரநோக்கு தலைவன் சமூகத்தை வாழ வைத்திருக்கிறான். ஆகாயத்தில் மின்னுகிற தாரகைகள்போன்று உருவாக்கி இருக்கிறார் என்பதற்கு நீங்கள்தான் உதாரணம். உங்களுக்கு ஒரு கடமை இருக்கிறது. இந்தக் குழந்தைகளை இங்கு இருக்கிறவர்கள் மாத்திரமல்ல, இங்கு வராமல் இருக்கிற, இந்தத் துறைமுக அதிகாரசபையினுடைய பெற்றோர்களிடத்தில் அன்பான வேண்டுகோளை விடுக்கிறேன். அல்லாஹ்வின் உதவியால் அஷ்ரப் உங்களை உயர்த்தியிருக்கிறார். இந்தக் குழந்தைகள் எல்லோரையும் மிகச் சிறப்பாகப் படிக்கவைத்து, அவர் கண்ட கனவாக ஆகாயத்தில் மின்னுகிற கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேச புள்ளிகளாக நீங்கள் ஆக்கவேண்டும் என்கின்ற அன்பான கோரிக்கையை விடுக்கிறேன் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஏ.எல். ஜவ்பர் சித்தீக், சட்டத்தரணி எஸ்.எம். அப்துல்லாஹ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பொதுச் செயலாளர் சட்டத்தரணி எம்.ஆர்.எம்.றம்ஸீன், பொருளாளர் எம்.சி.எம்.டில்சாத் ஆகியோருடன் முஸ்லிம் மஜ்லிஸ் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளில் சித்திபெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், துறைமுக அதிகாரசபையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்களது அயராத சேவைகளுக்கு நினைவுச்சின்னம் மற்றும் பதக்கம் அணிவித்து அதிதிகளால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் துறைமுக அதிகாரசபையின் முஸ்லிம் மஜ்லிஸின் உயர்பீட உறுப்பினர்களும் அதிதிகளால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை வைத்தியசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விஜயம்

## மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு








(நூருல் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸிம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "ஜன சுவய" சமூக நலத்திட்டத்தின் ஊடாக, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ ஹசனலியின் அழைப்பின் பேரில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (15) விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அவ் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அஸாத் எம். ஹனிபா தலைமையிலான அபிவிருத்தி குழுவினரிடம் குறித்த மருத்துவ உபகரணங்களை கையளித்தார்.

கொரோனா தொற்றினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் பொருட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் இணைந்து மேற்குறித்த திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிகழ்வின்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலப்பதி, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ.ஹசன் அலி, கல்முனை தொகுதி பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ. ரஸாக், அமைப்பாளர் கயான் தர்ஷன மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள், வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மீன்பிடிக்கச் சென்றவர் சேற்றில் மூழ்கி மரணம்



(ஹறாவூர் நிருபர் - நாஸர்)

மட்டக்களப்பு- மாவடிவேம்பு இயற்கைக்குளத்தில் தூண்டில் இட்டு மீன்பிடித்துக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (15) இடம்பெற்றுள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர். மாவடிவேம்பு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 38 வயதுடைய இளையதம்பி பரமேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

கூலித்தொழிலாளியான இவர் தனது நண்பருடன் தூண்டில் இட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை, சேற்றில் புதையுண்டு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸிர் சம்பவ இடத்துக்குச்சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார். சந்திவெளி பொலிஸ் சார்ஜன்ட் ஈ. சபேசன் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் தேசியன் ஆகியோர் மரணமடைந்தவரது உறவினர்களிடம் வாக்குமூலம் பதிவுசெய்தனர்.

பி.சி.ஆர் மற்றும் பிரேத பரிசோதனைகள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றன.

# உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்கல் குறித்து மக்களின் பிரச்சினைகளை கண்டறியும் செயலமர்வு




(மூதூர் நிருபர்)

உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்கல் குறித்து பொதுமக்களின் பிரச்சினைகளை கண்டறிதல் தொடர்பிலான செயலமர்வு மூதூர் பிரதேச சபை பிரிவில் உள்ள தோப்பூர் பொதுநூலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது.

தோப்பூர் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், சனசமூக உறுப்பினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட சமூக பிரதிநிதிகளுக்கு "இளைஞர் அபிவிருத்தி அகம்" நிறுவனம் இச்செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இச்செயலமர்வில் பிரதேச சபைகளினால் மேற்கொள்ளப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவமும் அதனால் ஏற்படும் தடைகள், உள்ளூராட்சி சபைகளினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டுமானப் பணிகள், சூழல் மாசடைதலை தடுக்க பிரதேச சபைகளால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம், பொதுமக்களின் பங்கேற்புடனான பாதீடு தயாரித்தல், பிரதேச சபைகளுக்கான வருமான ஈட்டும் வழிமுறைகள், பொதுமக்களுக்குள்ள கேள்வி கேட்கும் அதிகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து தெளிவூட்டப்பட்டன.

இச்செயலமர்வில் வளவாளர்களாக பா.சிவப்பிரகாசம், காண்டீபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் மூதூர் பிரதேச சபையின் செயலாளர் வீ.சத்தியசோதி, மூதூர் பிரதேச உறுப்பினர்களான ஏ.எஸ்.எம்.தாணீஸ், ஏ.எஸ்.றிபாஸ், திருமதீ ஜெஸீலா ஹுஸைன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கலைஞர் சுவதம் விருது பெற்றார் பல்துறைக் கலைஞர் ஸாகிர்



(சாய்ந்தமருது)

சாய்ந்தமருதைச் சேர்ந்த பல்துறைக்கலைஞர் எம்.எஸ்.எம். ஸாகிர் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கலைத்துறையில் மிக நீண்ட காலமாக சிறப்பாகப் பங்களிப்புச் செய்து, பல்துறையில் ஈடுபாடு காட்டி வருவதற்காக இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பிரதேச செயலகங்கள் ரீதியாக கலைஞர் சுவதம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட கலை, இலக்கிய மற்றும் எழுத்துத்துறைகளில் பங்காற்றிவரும் தமிழ்பேசும் கலைஞர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்ஸானின் ஒருங்கிணைப்பில், அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வேதநாயகம் ஜெகதீசனின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகா ஆகியோர் இணைந்து இவ்விருதினை வழங்கி வைத்தனர்.

நவமணி பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஊடகவியலாளராகப் பணியாற்றிய இவர், பாடசாலையில் படிக்கும் காலத்தில் இருந்தே கலை இலக்கியச் செயற்பாடுகளான கவிதை, நாடக நடிப்பு, பாடல், அறிவிப்பு, மேடைத்தொகுப்பு, சிறுகதை ஆக்கம், படிப்பினையூட்டும் கதைகள், பொல்லடி (கோலாட்டம்), றபான் என பல்துறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, பிரகாசித்து வருகிறார்.

# அபிவிருத்தி செய்யப்படாத வீதிகளை புனரமைக்க வேலைகள் முன்னெடுப்பு



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குட்பட்ட பல வீதிகள் புனரமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமேவின் தலைமையில் இவ் வீதிகள் புனரமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிறு (13) மட்க்கோ பிரதான வீதியில் இடம்பெற்றது.

இவ்வாறு மட்க்கோ பிரதான வீதி, முஹம்மதியா நகர் வீதி தொடக்கம் புதுக் குடியிருப்பு வீதி வரையிலான 04 கிலோ மீற்றர் தூரம் வரை குறித்த வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன் கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பட்டணமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் ஜெய்னுதீன் துவான் பஹார்டீனின் வேண்டுகோளுக்கிணங்க, பிரதேச சபையின் தவிசாளர் ஆர்.ஏ.டீ.எஸ்.ரத்நாயக்கவின் வழிகாட்டலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமேவால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த வீதிகள் புனரமைப்புக்காக சுமார் 126,460,605.07 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பிரதேச மக்கள் மற்றும் உள்ளூர் அரசியல் தலைமைகள் இவ் வீதி புனரமைப்பு சம்பந்தமாக பல அரசியல் வாதிகளினால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே, இவ் அபிவிருத்தி வேலையினை ஆரம்பித்து வைப்பது தொடர்பில் தாம் மிக்க நன்றியினை தெரிவித்துக்கொள்வதாகவும் குறித்த வீதியின் நிர்மானப்பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினூடாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் ஜெய்னுதீன் துவான் பஹார்டீன் தெரிவித்தார். மேலும் இந்நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அங்கவீனமுற்ற நபர்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு



(நூருல் ஹுதா உமர்)

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறைந்த வருமானமுடைய சிறுநீரக நோய்க்கான சிகிச்சையினை பெற்றுக் கொள்பவர்களுக்கான கொடுப்பனவு காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனால் நேற்று மாவடிப்பள்ளி கிழக்கு, மாளிகைக்காடு மத்தியைச் சேர்ந்த 02 பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது காரைதீவு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் கு.குணரட்ணம், அபிவிருத்தி உத்தியோகத்தர் சித்தி நளிபா, மாவடிப்பள்ளி கிழக்கு கிராமசேவை உத்தியோகத்தர் ஏ.எம். அலியார், மாளிகைக்காடு மத்தி கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோறளைப்பற்று மத்தியில் சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல்





(கல்குடா நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கம் திட்டத்தின் கீழ் நிதி அமைச்சின் மூலம் சமுர்த்தி பயனாளிகளுக்காக அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானிய தொகை வழங்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானிய தொகை வழங்கும் நிகழ்வு செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை(14) இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ.எம்.பசீர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட்டின் கோறளைப்பற்று மத்தி இணைப்பாளர் எம்.ஜவாத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 05ஆயிரம் சமுர்த்தி பயனாளிகளுக்கு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானிய தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி கொடுப்பனவாக நான்கு நபர்களுக்கு மேல் 04ஆயிரத்து 500 ரூபாவும், மூன்று நபர்களுக்கு 03ஆயிரத்து 200 ரூபாவும், ஒன்று, இரண்டு நபர்களுக்கு ஆயிரத்து 900 ரூபாவுமாக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதில் சில சேமிப்பு திட்டங்களுக்கு நிதிகள் பெறப்பட்டு மீதிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

# கிழக்கு மாகாண இலக்கிய விழாவுக்கு விண்ணப்பம் கோரல்

## மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தகவல்

(மருதமுனை நிருபர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022ஆம் ஆண்டுக்கான மாகாண இலக்கிய விழாவில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய போட்டிகளை நடத்தி விருது வழங்கி கௌரவிப்பதற்கு தீர்மானித்துள்ளது என கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

மேலும், குறிப்பிடுகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், மற்றும் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை பாராட்டி கௌரவிப்பதன் மூலம் அவர்களது கலை, இலக்கியப் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன் எதிர்கால சந்ததியினருக்கு படைப்புலக முன்னோடிகளாக அவர்களை இனம் காட்டுவதன் நோக்கமாகக் கொண்டதாக இந்த விழா அமைவதுடன் கீழ்வரும் விடயங்களுக்கு விருதுகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. இலக்கியப் படைப்புக்கான விருது வழங்கலின் பொருட்டு 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறந்த நூல்கள், குறுந்திரைப்பட ஆக்கங்களைத் தேர்வு செய்யும் வண்ணம் கிழக்கு மாகாண எழுத்தாளர்களுக்கும் பதிப்பாளர்களுக்கும் மற்றும் தயாரிப்பாளர்களுக்கும் தமது படைப்புகளை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க





தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. 2022ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவின் போது கிழக்கு மாகாணத்தின் கலை, இலக்கிய வளர்ச்சிக்காக காத்திரமான பங்களிப்புகளை ஆற்றிய, ஆற்றி வருகின்ற இலக்கிய வித்தகர், நாட்டார் இலக்கிய வித்தகர், ஊடக வித்தகர், கவின்கலா வித்தகர், அரங்க வித்தகர் மற்றும் பல்துறை வித்தகர் போன்ற துறைகளில் கலைஞர்களை பாராட்டி கௌரவித்து விருது வழங்குவதற்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தது 05 வருடங்களை நிரந்தர வதிவிடமாக கொண்ட இலக்கிய கர்த்தாக்களும் கலைஞர்களும் இவ்விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

03. இலக்கியம், நாட்டார் இலக்கியம், ஊடகம், நுண்கலை, ஆற்றுகை, குறும்படம் மற்றும் பல்துறை போன்ற கலை, இலக்கியத்துறையில் சாதனை படைத்த, படைத்து வரும் இளம் கலைஞர்களை பாராட்டி விருது வழங்குவதற்கும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

04. 2021ஆம் ஆண்டு கிழக்கு மாகாண படைப்பாளிகளினால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களை கொள்வனவு செய்யும் திட்டம் இவ்வருடமும் இடம்பெறவுள்ளது.

05. கையெழுத்துப் பிரதிகள் நூல் வடிவில் வெளியீடு செய்வதற்கு இவ்வருடமும் திணைக்களம் தீர்மானித்து அதனடிப்படையில் புலமைத்துவம் சார் படைப்புகள், பிரதேச மற்றும் கலை தொடர்பான ஆய்வுசார் படைப்புகள், அறிவியலும் தொழில்நுட்பமும், பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களின் ஆவணத் தொகுப்பு, நாட்டுக்கூத்து பிரதி, வரலாற்று நாடகம், சிறுகதை மற்றும் நாவல் போன்ற கையெழுத்து பிரதிகளாக வைத்திருக்கும் படைப்பாளிகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

கிழக்கு மாகாண இலக்கிய விழாவுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவங்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கிழக்கு மாகாணத்திலும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மாகாண கலாசார உத்தியோகத்தரிடமும் அல்லது http://www.ep.gov.lk எனும் வலைத்தளத்தில் தரவிறக்கம் செய்து விண்ணப்ப படிவத்தை மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாண திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மாகாணப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதம கணக்காளராக இந்திராவதி மோகன்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதம கணக்காளராக இந்திராவதி மோகன் கடந்த 11ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது அரச சேவையை 1989ஆம் ஆண்டு அமைய நிதி உதவியாளராக வவுனியா பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் கடமைகளை ஆரம்பித்துள்ளார். அதனைத் தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் அமைய நிதி உதவியாளராக கடமையாற்றியுள்ளார். 1992ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து, ஏறாவூர் நகர் பிரதேச செயலகம், மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றில் கணக்காளராக கடமையாற்றியுள்ளார்.

2016ஆம் ஆண்டு பதவியுயர்வு பெற்று கிழக்கு மாகாண திறைசேரியில் பிரதம கணக்காளராக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் 2018ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரதம உள்ளக கணக்காய்வாளராக கடமையாற்றி வந்த நிலையில் கடந்த 11ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூர் - 05 ஆம் குறிச்சி பகுதியை பிறப்பிடமாக கொண்ட இவர், தனது ஆரம்ப கல்வியை ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம், ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயம், வந்தாறுமூலை மகா வித்தியாலயம் என்பவற்றில் பயின்று தனது உயர் கல்வியினை மட்டக்களப்பு இந்து கல்லூரியில் பயின்றுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் பட்டப்படிப்பினை நிறைவு செய்ததுடன், காமராஜர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் முதுகலைப்பட்டத்தினையும், அபிவிருத்திப் பொருளாதார முதுகலைப்பட்டத்தினை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளதுடன், அரச கணக்கியல் உயர் டிப்ளோமா பட்டப்படிப்பினை பூர்த்தி செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது: இந்த நிலைமையிலிருந்து மீளவே ஒவ்வொருவரும் செயலாற்றவேண்டும்!

## மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு





(வெல்லாவெளி நிருபர் - க. விஜயரெத்தினம்)

தற்போதுள்ள சூழ்நிலையில் எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்கலாம் என்ற சூழ்நிலையினை ஊடகங்கள் உருவாக்க முயற்சிக்கின்றன. யார் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் சடுதியான மாற்றத்தினை கொண்டுவரமுடியாது.

சிலர் ஏதோ இலங்கைக்கு மாத்திரம்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதுபோன்று பேசிவருகின்றனர். இன்று சர்வதேசம் எங்கும் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. மிக நீண்டகால முடக்கம் நாட்டில் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக இந்த நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒவ்வொருவரும் செயலாற்றவேண்டும் - என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கமைவாக சமுர்த்தி பயனாளர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவினை மேலும் அதிகரித்து நேற்றுமுன்தினம் வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைவாக இந்நிகழ்வினை வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வுகள் நாடுபூராகவும் இடம்பெற்றுள்ளன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (14) இந்த நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் வறிய கிராமமென அடையாளப்படுத்தப்பட்ட மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிலும் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் அ.சுதாகரன், உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபா சதாகரன் உட்பட சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 97ஆயிரம் சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் நிலையில், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் சுமார் 7000 பேருக்கு இந்தக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வின்போது சமுர்த்தி பயனாளிக்கான வீடொன்றும் வழங்கப்பட்டதுடன், வாழ்வாதார உதவிகளும் சமுர்த்தி அதிகரித்த கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

இதன்போது அரசாங்கம் முன்னெடுத்துவரும் மக்கள் நல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்தும் பயனாளிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதாவது ,

நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளபோதிலும் அரசாங்கம் கிராம மட்ட பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. அதனடிப்படையிலேயே சமுர்த்தி பயனாளிகளுக்கு அமைச்சரவையின் அனுமதியுடன் அதிகரித்த நிதி வழங்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கம் அரசாங்க செலவீனங்களை மிக கடுமையாக கட்டுப்படுத்தி வருகின்றது. எங்களுக்குக்கூட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் செலவுகளை கட்டுப்படுத்துவதுபோன்று குடும்பங்களும் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் பணத்தினை செலவு செய்யவேண்டும். இன்று கிராம மட்டத்தில் இவ்வாறான நிலையேற்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

சிலர் ஏதோ இலங்கைக்கு மாத்திரம்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதுபோன்று பேசிவருகின்றனர். இன்று சர்வதேசம் எங்கும் பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. மிக நீண்டகால முடக்கம் நாட்டில் முன்னெடுக்கப்பட்டதன் காரணமாக இந்த நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒவ்வொருவரும் செயலாற்றவேண்டும்.

இன்று கொரோனா தொற்று அதிகரிக்கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையினை மக்கள் சிறந்தமுறையில் கையாண்டு மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துகின்றபோதுதான் நாடு உயரமுடியும். இதில் வெறுமனே அரசாங்கம் பிழைவிடுகின்றது. எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் மந்திரத்தால் மாங்காய் பறிக்கமுடியும் என்று ஊடகங்கள் உருவாக்க முனைவது தெரிகின்றது.

நிச்சயமாக அப்படி செய்யமுடியாது. எவர்தான ஆட்சிக் குவந்தாலும் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை சடுதியாக மாற்றமுடியாது. இருந்தபோதிலும் உறுதியான அரசாங்கம், மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள அரசாங்கம் என்ற அடிப்படையில் இதனை மிகவும் கவனமாக முகாமை செய்து மீண்டெழுந்து வருகின்றது - என்றார்.

# கந்தளாய் உதவி பிரதேச செயலராக உதயகுமாரன் குமணன் நியமனம்



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் உதவி பிரதேச செயலாளராக உதயகுமாரன் குமணன் நியமிக்கப்படுள்ளார். 2021ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நிர்வாக சேவை உள்ளகப் பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் இந்நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தர உத்தியோகத்தரான இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் கணக்கிடலும் முகாமைத்துவத்தில் ஆரம்ப பட்டத்தை பூர்த்திசெய்துள்ளார்.

இவர் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கத்து. நேற்று முன்தினம் (14) கந்தளாய் பிரதேச செயலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதன்போது கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரியும் உடனிருந்தார்.

# கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவில் மூன்றாம் கட்ட பைசர் தடுப்பூசி ஏற்றல்




(நற்பிட்டிமுனை நிருபர்)

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மூன்றாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி மேற்பார்வையில் இடம்பெறும் இப்பணியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மருதமுனை மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசல் காரியாலய அறையில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சம்மாந்துறை - நெய்னாகாடு கிராமத்தில் கிராமோதய சுகாதார நிலைய வெளிநோயாளர் பிரிவு திறந்துவைப்பு





( ஐ.எல்.எம்.நாஸிம், நூருல் ஹூதா உமர்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட மல்கப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவின் நெய்னாகாடு கிராமத்தில் கிராமோதய சுகாதார நிலைய வெளிநோயாளர் பிரிவை திறந்துவைக்கும் நிகழ்வு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் அங்கு உரையாற்றும்போது நெய்னாகாடு கிராமத்திலிருந்து வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக சுமார் 10 கிலோ மீற்றர் பயணம் செய்து சம்மாந்துறைக்கு வருவதாகவும் முச்சக்கரவண்டியில் வருவதற்கு கிட்டத்தட்ட 800 ரூபா பணம் செலவு செய்யப்படுகின்றது என்றும் அக்கிராம மக்கள் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம் கபீரிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுத்திருந்தனர். அதற்கமைய வெளிநோயாளர் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளதோடு கிழமைக்கு மூன்று நாட்கள் இடம்பெறும் என தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில், இவ்வாறான இடங்களை தேடி இவற்றுக்குத் தேவையான சுகாதார தேவைகளை பூர்த்திசெய்வது எங்களுடைய முக்கியமான கடமைகளில் ஒன்று. நெய்னாகாடு கிராமத்திலிருந்து வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக சுமார் 10 கிலோமீற்றர் முச்சக்கரவண்டியில் பயணம் செய்து சம்மாந்துறை சென்று மருந்துகளை பெற்று திரும்பி வரும்போது 2000 ரூபா செலவாகலாம். அந்த அளவு செலவழிக்கக்கூடிய சக்தி இங்குள்ளவர்களுக்கு இருக்கும் என நான் நினைக்கவில்லை. ஆகவேதான் இந்தப் பிரிவை இக்கிராம மக்களின் நலன் கருதி சேவைகளை அதிகரித்துள்ளோம். ஒருசில மருந்துகளை இலவசமாக இந்நிலையத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் ஒட்சிசன் பிடிக்கும் இயந்திரத்தையும் முதற்கட்டமாக ஏற்பாடு செய்து தருவோம் - என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வாஜித், திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் மாஹிர், மல்கப்பிட்டி கிராம பதில் சேவையாளர் ஏ.எல் எம்.பரீட் உட்பட பிரதேச மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு அதிகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன



(மருதமுனை மேலதி நிருபர் )

சமுர்த்தி உதவி பெறும் குடும்ங்களுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

அதிகரித்த கொடுப்பனவுகளை வழங்கிய நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (14) நாடு முழுவதிலும் உள்ள சமுர்த்தி வங்கிகள் ஊடாக சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கல்முனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மருதமுனை சமுர்த்தி வங்கியிலும் இடம்பெற்றது.

மருதமுனை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கொடுப்பனவுகளை வழங்கினார்.

சிறப்பு அதிதியாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலி கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் எஸ்.எஸ்.பரீரா, அதிதிகளாக சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# போடியார் புலம்பல்!



**ஆட்சி மாற்றமே கட்டாயம் வேணுமாம் எண்டு அம்மணி சந்திரிக்கா இப்ப கொக்கரிக்காவு எலுவா..**

**அந்த அம்மணிதானே போனதடவ நல்லாட்சி எண்டு மைத்திரிய ஜனாதிபதியாக்கி சம்பந்தர எதிர்க்கட்சி தலைவராக மாற்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்ப நாசமாக்கினதில இவக்கும் பங்கு இருக்கு.. இப்போ இவட கதய இஞ்ச கேட்க ஆளில்ல..**

# களுவாஞ்சிக்குடியில் பொலிஸ் பரிசோதனை




(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பரிசோதனை நிகழ்வு நேற்றுமுன்தினம்(14) இடம்பெற்றது. இதன்போது பொலிஸாருக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டு, பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்கள், புத்தகங்கள் உள்ளிட்ட பல ஆவணங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க கலந்து கொண்டு பரிசோதனைகளை முன்னெடுத்திருந்தார்.

மேலும் களுவாஞ்சிக்குடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜனக ஜெயரத்ன, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் அபேவிக்ரம ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# அட்டாளைச்சேனையில் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் நெறிப்படுத்தலின் மூலம் அட்டாளைச்சேனை தைக்கா நகர் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் சமூக சேவைப் பிரிவின் பணிப்பாளர் ஊடகவியலாளர் ஏ.எல்.றமீஸ் தலைமையில் நேற்று முன்தினம் (14) மாலை தைக்கா நகர் மறுமலர்ச்சி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.எம்.ஜுனைத்தீன், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் கல்வி நாதம் எஸ்.எல்.ஆதம்பாவா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை இதன்போது வழங்கினர்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. செயலாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.எல்.கியாஸ்டின், சீட்ஸ் பௌண்டேசன் தலைவர் ஆசிரியர் எம்.ஜே.அன்வர் நௌசாட் உட்பட அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏயின் பதவி வழி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு அட்டாளைச்சேனை தைக்கா நகர் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 74 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை பள்ளிவாசலுக்கு உபகரணங்கள் கையளிப்பு



(ஏ. அகீல் சிஹாப்)

சம்மாந்துறை மஸ்ஜிதுல் பலாஹ் பள்ளிவாசலின் முக்கிய தேவைகளான மலசலகூட கதவுகள், பள்ளிவாசலுக்கு தேவையான ஒட்டுமொத்த குடிநீர்க் குழாய்கள் என்பன பள்ளிவாசல் நிர்வாகத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய சமூக சேவையாளர் வை.பி.அஸ்மியால் கடந்த வெள்ளிக்கிழமை பள்ளிவாசல் நிர்வாகத்திடம் கையளிப்பட்டது.

பள்ளிவாசலின் தலைவர் யூ.எல்.எம். ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் இஷாக் முஹம்மட், மஜ்லிஸ் அஷ்ஷூரா தவிசாளர் எம்.எல். அப்துல் மஜீட், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.தாஸீம், கணக்காய்வாளர் எஸ்.ஏ. ஜிப்ரி, பிரதேச சபை உறுப்பினர் நளீம், வீடமைப்புத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முசாக்கிர், பள்ளிவாசல் நிர்வாகத்தின் செயலாளர் எம்.எஸ். ஆப்தீன், பொருளாளர் ஐ.எல்.எம்.றிபாஸ் உட்பட மஹல்லாவாசிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# போரதீவுப்பற்று பகுதியில் நிலக்கடலை அறுவடை




(மட்டக்களப்பு நிருபர்)

விவசாயத் திணைக்களத்தின் மட்டக்களப்பு காரியாலயத்தினூடாக வழங்கப்பட்ட நிலக்கடலை அறுவடை நிகழ்வு நேற்று முன்தினம் (14) போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் விளாந்தோட்டம் எனும் கிராமத்தில் இடம்பெற்றது.

அப்பகுதி தொழில்நுட்பவியலாளர் கே.டிசாராவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விவசாயத் திணைக்களத்தின் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா, பாலையடிவட்டை விவசாயப் போதனாசிரியர் கே.கோபி உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

அப்பகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு கடந்த வருடம் விவசாயத் திணைக்களத்தின் பி.எஸ்.டி,ஜி. எனும் திட்டத்தின்கீழ் நிலக்கடலை விதைகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் விளைச்சல் தற்போது அறுவடை செய்யப்பட்டன. இதன்போது கலந்துகொண்டிருந்த விவசாயத் திணைக்கள அதிகாரிகளினால் விவசாயிகளுக்கு பல விளக்கங்களும் வழங்கப்பட்டதோடு, சேதனப் பசளை தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டன.

# இலங்கை அரசை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற போராட்டம்!

## 21முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் அறிவிப்பு



இலங்கை அரசை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற பத்துக்கும் மேற்பட்ட படகுகளையும், 50இற்கும் மேற்பட்ட மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்தனர்.

கைது நடவடிக்கைகளை கண்டித்தும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியும் நேற்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.


மேலும் எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# கனடாவில் அவசரநிலை பிரகடனம்

கனடாவில் லொறி ஓட்டுநர்களின் போராட்டம் வலுப்பெற்றுள்ள நிலையில், நாடு முழுவதும் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறு நாடுதழுவிய ரீதியிலான அவசரநிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லொறி ஓட்டுநர்கள் கட்டாயம் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என்ற கனடா அரசின் உத்தரவை எதிர்த்து நடைபெற்றுவரும் போராட்டத்தின் ஒரு பகுதியாக கனடா - அமெரிக்காவை இணைக்கும் முக்கிய பாலமான 'தி அம்பாசிடர்' பாலம் முடக்கப்பட்டது.

இந்நிலையில், போராட்டத்தை ஒடுக்கும் விதமாக நாடு முழுவதும் அவசரநிலையை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். இதன்மூலம் போராட்டக்காரர்களை உடனடியாக கைதுசெய்யவும், லொறிகளை





பறிமுதல் செய்யவும் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கனடாவில் 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவசரநிலை அமுலுக்கு வந்துள்ளது.

மேலும் போராட்டம் ஒன்றுக்காக கனடாவில் அவசரநிலை பிரகடனம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டபோதும் நிலைமையை கட்டுப்படுத்த இதுவரை இராணுவம் களமிறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் சுப்பர்ஸ்டாருடன் இணையும் ஐஸ்வர்யா ராய்

'அண்ணாத்த' படத்தையடுத்து ரஜினியின் 169ஆவது படத்தை இயக்குகிறார் நெல்சன். 'கோலமாவு கோகிலா', 'டாக்டர்', 'பீஸ்ட்' படங்களை இயக்கியுள்ள நெல்சன் இப்போது ரஜினி பட வாய்ப்பைப் பெற்றுள்ளார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார் என்ற அறிவிப்பு சமீபத்தில் வெளியானது.

இந்நிலையில், தற்போது இப்படத்தில் ரஜினிக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராய் நடிக்கப்போவதாக ஒரு தகவல் வெளியாயுள்ளது.

ஏற்கனவே ஷங்கர் இயக்கத்தில் ரஜினி நடித்த 'எந்திரன்' படத்தில் இணைந்து நடித்த ஐஸ்வர்யா ராய் மீண்டும் இந்தப் படத்தில் இணையப்போகிறாராம். தற்போது மணிரத்னம் இயக்கியுள்ள



'பொன்னியின் செல்வன்' படத்தின் இரண்டு பாகங்களிலும் நந்தினி, மந்தாகினி தேவி என்ற கதாபாத்திரங்களில் நடிக்கிறார் ஐஸ்வர்யா ராய் என்பது குறிப்பிடத்தக்கது.




***பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கொழும்பிலும் முன்னெடுக்கப்பட்டபோது அரசியல் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.***

**04ஆம் பக்கத் தொடர்ச்சி...**

- ***வணக்கத்தலங்களில் மரநடுகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்***
- ***குளக்கரை, நீர்ப்பாசன பாதுகாப்பு வனங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களில் மரநடுகை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்***
- ***அரச நிறுவனங்கள், பகுதி அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் மரநடுகை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்***
- ***தோட்டக் கம்பனிகளால் முகாமைத்துவப்படுத்தப்படும் காணிகளிலும் தனியாருக்குச் சொந்தமான காணிகளிலும் மரநடுகை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்***
- ***நாடளாவிய ரீதியில் நாற்றுப் பண்ணைகளை அமைத்தல்***
- ***வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்தவர்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் பரப்புரை நிகழ்ச்சித்திட்ட தொடரை நடத்துதல்***
- ***வனமாக்கலுக்குப் பொருத்தமான தாவரங்களை அடையாளங்காண்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆய்வு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்***

குறித்த கருத்திட்டங்கள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகளுக்கமைய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்கியுள்ளது.

**06. சுற்றாடல் அமைச்சின்கீழ் இயங்குகின்ற இலங்கை காலநிலை மாற்றங்களுக்கான நிதியம் (தனியார்) கம்பனியின் நடவடிக்கைகளைப் பலப்படுத்தல்**

2050ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையை காபனற்ற நாடாக மாற்றுவதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானம் மேற்கொண்டுள்ளமையை தேசிய ரீதியில் திட்டமிட்டுள்ள ஒத்துழைப்புகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக சாசனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. காபன் வெளியேற்றத்தைக் குறைக்கும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதற்காக சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இலங்கை காலநிலை மாற்றங்களுக்கான நிதியம் (தனியார்) கம்பனி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையை காபனற்ற நாடாக உருவாக்குவதற்குத் தேவையான உயர்ந்தபட்ச ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் அக்கம்பனியின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை சமகாலத்திற்கு தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் கட்டமைப்பு ரீதியாகப் பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2050ஆம் ஆண்டளவில் இலங்கை காபன் நிகர பூச்சிய நிலை (Carbon Net Zero) நாடாக உருவாக்குவதற்குத் தேவையான திட்ட வரைபு (Road Map) மற்றும் மூலோபாயங்கள் தொடர்பான திட்டத்தை தயாரித்தல்**

இலங்கை காபன் நிகர பூச்சிய நிலையை (Carbon Net Zero) அடைவதற்காக முக்கியமாக வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்படும் பச்சைவீட்டு விளைவு வாயுக்களின் அளவுகளைக் குறைக்கவேண்டியதுடன், வளிமண்டலத்திலிருந்து காபனீரொட்சைட் வாயுவை உறிஞ்சுகின்ற சுற்றாடல் தொகுதியை அதிகரித்தல் வேண்டும்.

2050ஆம் ஆண்டளவில் இலங்கை காபன் நிகரப் பூச்சிய நிலைகொண்ட நாடாக உருவாக்கும் இலக்கை அடைவதற்கான திட்டவரைபை (Road Map) மற்றும் மூலோபாயங்களைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 05 வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு மேற்கொண்டு திருத்தியமைக்கப்படும் திட்டவரைபு மற்றும் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அதற்காக விசேட நிபுணத்துவத்துவதுடன் கூடிய நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கும் சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. இலங்கையின் போக்குவரத்து கட்டமைப்புடன் மோட்டார் அல்லாத போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்தல்**

இலங்கையில் தற்போது இயங்குநிலையிலுள்ள வாகனங்கள் 05 மில்லியன்களுக்கு அதிகமாகக் காணப்படுவதுடன், அது 2000ஆம் ஆண்டில் மூன்று மடங்கு அதிகரிப்பைக் காட்டுகின்றது. குறிப்பாக, முச்சக்கரவண்டிகள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற தனியார் வாகனங்களின் இறக்குமதி அதிகரித்தமையே அதற்கான காரணமாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதேபோல், வருமானம் அதிகரிப்பு மற்றும் நிலவுகின்ற பொது போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவதிலுள்ள சிரமங்களாலும் தனியார் மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரித்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளதுடன், தனியார் மோட்டார் வாகனப் பாவனை துரிதமாக அதிகரித்துள்ளமை, மோட்டார் அல்லாத போக்குவரத்து முறைகளின் பங்களிப்பு குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்துள்ளது. மோட்டார் அல்லாத போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வளிமண்டலம் மாசடைவது குறைக்கப்படுவதுடன், உடல் ஆரோக்கியம், வளியின் தரம், சுற்றாடல், காலநிலை மாற்றங்கள் மற்றும் தனிநபர் நிதி நிலைமை போன்ற விடயங்களில் நேர்மய விளைவுகளை ஏற்படுத்தும். அதனால், பொருளாதார மற்றும் சுற்றாடல் ரீதியான நன்மைகளை அடைவதற்காக மோட்டார் அல்லாத போக்குவரத்து முறைகளை நிலவுகின்ற போக்குவரத்துக் கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பது பொருத்தமாக அமையுமென கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த விடயங்களை கருத்திற்கொண்டு ஏற்புடைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த அணுகுமுறைமையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்கியுள்ளது.

தற்போதுள்ள வீதிகளுக்குப் பொருத்தமான வகையில் சைக்கிள் பாதையை புள்ளடியிட்டு வேறாக்குதல் மற்றும் பாதசாரிகளுக்காக தற்போதுள்ள நடைபாதைகளை மேம்படுத்தல்

எதிர்வரும் காலங்களில் நிர்மாணிக்கப்படும் வீதிகளுக்கு சைக்கிள் மற்றும் நடைபாதைகளை உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்

அரச அலுவலகர்களுக்கு சைக்கிள் பாவனையை ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும்

அலுவலகங்களில் சைக்கிள் பாவனையாளர்களுக்கு அவற்றைத் தரித்து வைப்பதற்கான இடங்கள் மற்றும் அவற்றின் அணுகலக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்

**09. பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நுகர்வோர் விற்பனை நிலையங்களுக்கான விற்பனை முனைய தொகுதி (POS) பெறுகைக்கான விலைமனுக் கோரல்**

பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நுகர்வோர் விற்பனை நிலையங்களுக்கான விற்பனை முனைய தொகுதிக்கான (POS) பெறுகைக்கு தேசிய போட்டி விலைமுறிக் கோரல் பொறிமுறையைப் பின்பற்றி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்காக 05 விலைமனுக்கள் கிடைத்துள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்தரைக்கமைய குறித்த பெறுகைக்கான விலைமனுவை, ஈ-விஸ் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டிற்கு வழங்குவதற்கு வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. முடிச்சு வகை சிகிச்சை முகக்கவசம் விநியோகிப்பதற்கான பெறுகைக் கோரல்**

89 மில்லியன் முடிச்சு வகை சிகிச்சை முகக்கவசங்களை விநியோகிப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்தரைக்கமைய அடிப்படையாக விபரங்களுடன் கூடிய வகையில் பதிலளிக்கும் குறைந்த விலைமனுதாரரான சிசிலி புரெஜெக்ட்ஸ் கொன்சோட்டியம் கம்பனிக்கு குறித்த பெறுகையை வழங்குவதற்கும், பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய ஆரம்பத்தில் 30 மில்லியன் முகக்கவசங்களை விநியோகிப்பதற்கும் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை சந்தைக்கு விநியோகிப்பதை முறைமைப்படுத்தல்**

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை தட்டுப்பாடின்றி சந்தைக்கு விநியோகிப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கை ரீதியான பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளை முன்வைப்பதற்காக கீழ்வரும் உறுப்பினர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் - தலைவர்
வர்த்தக அமைச்சர்
விவசாய அமைச்சர்
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர்
கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
அலங்கார வளர்ப்பு மீன்கள், நன்னீர் மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்பு, மீன்பிடித் துறைமுகங்கள், பலநாள் கடற்கலன்கள் நடவடிக்கைகள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்
கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை சார்ந்த தொழிற்றுறை இராஜாங்க அமைச்சர்

**12. அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதி முன்னுரிமை தொழிற்றுறைக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் இறக்குமதி செய்தல்**

நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2022 பொருளாதாரம் மற்றும் முன்னோக்கிய பயணம் எனும் பெயரிலான அமைச்சரவைப் பத்திரத்தை 2022 ஜனவரி மாதம் 03ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்ட வேளையில், அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் ஏற்றுமதி முன்னுரிமை தொழிற்றுறைக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தொழில் உபகரணங்கள் இறக்குமதி செய்வதற்காக மாற்று வழிமுறையைக் கண்டறிவதற்கான தேவை அமைச்சரவையால் கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, அவ்வாறான உபகரணங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்யும் நாடுகளுடன் கலந்துரையாடுவதற்காக கீழ்வரும் அமைச்சரவை உபகுழுக்களை நியமிப்பதற்காக ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

(i) சீனக் குடியரசுடன் கலந்துரையாடுவதற்காக :
வெளிவிவகார அமைச்சர் - தலைவர்
வர்த்தக அமைச்சர்
கைத்தொழில் அமைச்சர்
பெருந்தோட்டத்துறை அமைச்சர்

(ii) ஜப்பான் நாட்டுடன் கலந்துரையாடுவதற்காக :
வெளிவிவகார அமைச்சர் - தலைவர்
சுகாதார அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சர்
நெடுஞ்சாலைகள் அமைச்சர்

(iii) மத்தியகிழக்கு அரசுகளுடன் கலந்துரையாடுவதற்காக :
வெளிவிவகார அமைச்சர் - தலைவர்
இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சர்
நீதி அமைச்சர்

**13. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மிகைவரிக்குட்படுத்துவது தொடர்பான உண்மைக்குப் புறம்பான பிரசாரங்கள்**

2021ஆம் ஆண்டுக்குரிய 2000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நிகர இலாபம் ஈட்டும் தனியாட்கள் மற்றும் கம்பனிகளிடமிருந்து 25 வீதமான மிகைவரி தொடர்பாக தாங்கள் 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் உட்படுத்தப்படாதென நிதி அமைச்சரால் அமைச்சரவைக்குத் தெளிவூட்டப்பட்டது. அதற்கமைய, ஒருசில தரப்பினரால் அதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் எதிர்ப்புகள் அடிப்படையற்றதெனவும் நிதி அமைச்சர் மேலும் அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளார்.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)***




# 3ஆம் உலகப்போர் எந்நேரத்திலும் மூளலாம்?

## இன்று உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கும் ஆபத்து

### - உக்ரைன் ஜனாதிபதியின் அறிவிப்பால் அதிகரிக்கும் பதற்றம்

### • ரஷ்யாவுக்கு ஜி-7 நாடுகள் எச்சரிக்கை

### • தமது குடிமக்களை திருப்பி அழைத்த இந்தியா - இலங்கை

உக்ரைன் மீது இன்று (16ஆம் திகதி) ரஷ்யா போர் தொடுத்து தாக்குதல் நடத்தவிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஷெலன்ஸ்கி (Volodymyr Zelensky) தெரிவித்துள்ளார். இதனால் உக்ரைன் - ரஷ்யா எல்லையில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

**ரஷ்யாவுக்கு ஜி-7 நாடுகள் எச்சரிக்கை!**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பு நடத்தினால் ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடை விதிக்கப்படும் என ஜி-7 நாடுகள் எச்சரித்துள்ளன.

கூட்டாக தடை விதிப்பதன் மூலம் ரஷ்யாவின் பொருளாதாரம் நிலைகுலைந்து போகும் என அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானை உள்ளடக்கிய ஜி-7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

மேலும், உக்ரைனின் இறையாண்மை, எல்லை பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்டவற்றை காக்க சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட உறுதிபூண்டுள்ளதாக ஜி-7 நாடுகள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே, பேச்சுவார்த்தை மூலம் சுமுக தீர்வு காணாமல், உக்ரைன் மீது போர் தொடுத்தால், ரஷ்யா கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் எச்சரித்துள்ளது.

ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைக்கு ரஷ்யா தயாராக இருந்தால் சுமுக தீர்வுக்கான பாதை திறந்திருப்பதாகவும், அதை விடுத்து உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கையில் ரஷ்யா ஈடுபட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் வெள்ளை மாளிகையின் இணை பத்திரிகை செயலர் கரைன் ஜீன் பெர்ரி தெரிவித்தார்.

**எல்லையில் படைகளை அதிகரித்த ரஷ்யா**

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைய கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ரஷ்யா, அந்நாட்டின் எல்லையில் தமது துருப்புகளையும், ஆயுதங்களையும் குவித்துள்ளது.

உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்கா, நேட்டோ அமைப்பின் உறுப்புநாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை போர் விமானங்கள், கப்பல்கள், படைகளை அனுப்பி வருகின்றன. உக்ரைன் எல்லையையொட்டிய தனது எல்லைப் பகுதியான பெலாரஸ் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த வாரம் ஏறக்குறைய ஒரு இலட்சம் வீரர்களை நிறுத்தியிருந்த ரஷ்யா தற்போது அந்த எண்ணிக்கையை 1.30 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இதுகுறித்த செய்மதியூடான (செட்லைட்) புகைப்படங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

உக்ரையின் எல்லையில் சுமார் 60 சதவீதமான பகுதியை ரஷ்யப் படைகள் சூழ்ந்துள்ளன.

இதையடுத்து அமெரிக்கா, கீவ் உள்ளிட்ட உக்ரைன் நகரங்களிலுள்ள தூதரக அதிகாரிகள், அமெரிக்கர்களை வெளியேறும்படி கேட்டுக் கொண்டது. மேலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் உத்தரவின்பேரில் 3,000 அமெரிக்க இராணுவத்தினர் உக்ரைன் எல்லையிலிருந்து 100 கி.மீ. தொலைவில் போலாந்து எல்லையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யப் படைகளும் உக்ரைனின் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு எல்லைப் பகுதிகளில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அப்படி போர் தொடுக்கும் பட்சத்தில், ரஷ்யாவுக்கு பதிலடி கொடுக்க அமெரிக்கா, நேட்டோ படைகளும் தயாராகவுள்ளன. இதனால், 3ஆம் உலகப் போர் மூளும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.




**இடம் மாறும் அமெரிக்கத் தூதரகம்**

உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டுள்ளதால் உக்ரைனிலுள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகம், தலைநகர் கிவ்விலிருந்து லிவிவ் நகருக்கு மாற்றப்பட்டுள்ளது. உக்ரைனில் இன்னும் எஞ்சியுள்ள அமெரிக்கர்கள் நாடு திரும்ப வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் உக்ரைனுக்குச் செல்லவிருந்த விமானங்களை உலகின் பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களும் இரத்துச்செய்துள்ளன. வான்வழித் தாக்குதல் மூலம் உக்ரைன் மீதான படையெடுப்பை ரஷ்யா தொடங்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ள நிலையில், விமானங்கள் இரத்துச்செய்யப்பட்டு வருகின்றன.

**ரஷ்யாவுக்கு சீனா ஆதரவு**

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு சீனா ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ''உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவை சீனா ஆதரிப்பதை ஐரோப்பிய நாடுகள் எச்சரிக்கையாகக் கருதவேண்டும்'' என அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஐரோப்பிய பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு இது மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் தலைவர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார்.

நேட்டோ நாடுகள் கூட்டமைப்பில் உக்ரைன் இணையுமானால் அது தங்கள் உள்நாட்டின் பாதுகாப்புக்கும், கிரிமியாவின் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது..

**சீன ஆதரவு ஓர் எச்சரிக்கை செய்தி..**

ரஷ்யாவை சீனா ஆதரிப்பது ஐரோப்பா பாதுகாப்புக்கு ஓர் எச்சரிக்கை என்று பென்டகனின் தலைவர் ஜோன் கிர்பி தெரிவித்துள்ளார். சத்தமில்லாமல் ரஷ்யாவை சீனா ஆதரிக்கிறது. இதை கவனமாகக் கையாள வேண்டும். ரஷ்யாவின் படைக் குவிப்பு குறித்து போலந்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சருடன் முக்கிய பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

**புட்டினை சந்தித்த ஒலாப்**

இந்நிலையில், ''ரஷ்யா தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தக்கூடும்'' என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில், ஜேர்மனி அதிபர் ஓலாப் ஸ்கொல்ஸ் நேற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை சந்தித்துள்ளார். அப்போது ''உக்ரைன் மீது போர் தொடுக்க வேண்டாம்'' என கேட்டுக்கொண்டார் எனத் தெரிகிறது.

முன்னதாக ஜேர்மனி அதிபர் ஓலாப், உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஷெலன்ஸ்கியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பெலாரஸில் ரஷ்யா போர்ப் பயிற்சி**

உக்ரைன் எல்லைக்கு அருகிலுள்ள பெலாரஸில் ரஷ்யா போர்ப் பயிற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது. பயிற்சி முடித்து வீரர்கள் ரஷ்யா திரும்பி விடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டபோதும் போர் அச்சம் நீடிக்கிறது.

உக்ரைன் ஜனாதிபதியின் முகநூல் கருத்து குறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் விடுத்துள்ள அறிக்கையில்,

உக்ரைன் மீது இன்று படையெடுப்பு செய்ய புட்டின் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுவதில் நம்பிக்கையில்லை. அதேநேரத்தில் எந்த முன்னறிவிப்புமின்றி தாக்குதல் தொடுக்கக்கூடிய நிலையில் புட்டின் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

**உக்ரைன் மக்களுக்கு ஜனாதிபதியின் வேண்டுகோள்**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்க வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்படும் நிலையில், ''அன்று உக்ரைன் மக்கள் ஒற்றுமையுடன் தேசிய கொடியை ஏற்றி, தேசிய கீதத்தைப் பாட வேண்டும்'' என்றும் அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் உக்ரைன் - ரஷ்ய எல்லைக்குச் சென்று அங்குள்ள தங்கள் நாட்டு இராணுவ வீரர்களை ஜனாதிபதி வொலோடிமிர் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜனாதிபதியின் வீடியோவால் சர்ச்சை**

உக்ரைன் எல்லையில் ரஷ்யா 1,30,000 வீரர்களை நிறுதியுள்ளது. இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் பேசிய வீடியோவொன்று வெளியானது. அதில் அவர், ''பெப்ரவரி 16ஆம் திகதியன்று ரஷ்யா நம் மீது படையெடுக்கும்'' என்று தெரிவித்திருந்தார். இது உலகளவில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிலைமையை உணர்ந்த அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் அவசரமாக ஒரு விளக்க அறிக்கையை வெளியிட்டது. அதில், ஜனாதிபதி பரவலாக செய்தியாளர்கள் கூறுவதைப் பற்றியே குறிப்பிட்டார் என்று தெரிவித்தது.

இதனைவைத்து எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி விமர்சிக்கத் தொடங்கின. ''ஜனாதிபதி வொலோடிமிர், முன்னாள் நகைச்சுவை நடிகர் என்பதால் அதனுடன் தொடர்புபடுத்தி வழக்கம்போல் போரையும் கூட நகைச்சுவையாக்கிவிட்டார்'' என்றும் எதிர்க்கட்சிகள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளன.



**பயண அறிவுரை வெளியிட்ட சர்வதேச நாடுகள்**

ரஷ்யா - உக்ரைன் சர்ச்சை வலுத்துவரும் நிலையில் அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவீடன், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, குவைத், சவூதி அரேபியா, ஜோர்தான், ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் தங்கள் மக்களை உக்ரைனிலிருந்து வெளியேறுமாறு தெரிவித்துள்ளன.

**இந்தியர்கள் வெளியேற உத்தரவு**

இந்நிலையில், உக்ரைன் - ரஷ்யா இடையே போர் பதற்றம் உச்சமடைந்துள்ள நிலையில், உக்ரைனில் இருக்கும் இந்தியர்களை உடனடியாக வெளியேறுமாறு இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கில், அந்நாட்டு எல்லைகளில் ரஷ்யா படைகளை குவித்து வருகிறது. ஏற்கனவே உக்ரைனில் தங்கியுள்ள தங்கள் நாட்டினரை உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் அறிவுறுத்தியிருந்த நிலையில், தற்போது இந்தியாவும் அறிவுறுத்தியுள்ளது.

உக்ரைன் தலைநகரிலுள்ள இந்திய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில், குறிப்பாக, இந்திய மாணவர்கள் உடனடியாக உக்ரைனிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. உக்ரைனில் ஸ்திரத்தன்மையற்ற சூழல் நிலவுவதால், இந்தியர்கள் தற்காலிகமாக வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையும் உக்ரையினிலுள்ள தமது பிரஜைகளை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பின்வாங்கும் ரஷ்ய படைகள்**

இதனிடையே உக்ரைன் எல்லையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த தங்கள் நாட்டு படைகள் தங்களது நிலைக்கே மீண்டும் திரும்பி வருவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது.

இது உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல் நிலையை குறைக்கும் என்ற நம்பிக்கையை தந்தாலும் ரஷ்யா எந்த எண்ணிக்கையில் படைகளைத் திரும்ப அழைத்துள்ளது என்று இன்னும் தெளிவாகவில்லை.

ரஷ்யா தனது படைகள் அனைத்தையும் உக்ரைன் எல்லையிலிருந்து விலக்கவேண்டும் என்று உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரி குலேபா தெரிவித்துள்ளார்.

''எங்களுக்கு ஒரு விதி உள்ளது; எதைக் கேட்கிறீர்களோ அதை நம்பக்கூடாது; எதைப் பார்க்கிறார்களோ அதைத்தான் நம்பவேண்டும். படைகள் பின்வாங்கியது என்றால் மோதல் நிலை குறைகிறது என்று நாங்கள் நம்புகிறோம்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




## பெருவில் 1000 ஆண்டுகள் பழமையான 14 மம்மிகள் கண்டுபிடிப்பு

பெருவில் 1000 ஆண்டுகளுக்கு முன்னரான 14 மம்மிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் லிமா அருகில் காஜாமார்க்கில்லா என்ற பகுதியில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்போது ஓர் இடத்தில் மம்மி எனப்படும் பதப்படுத்தப்பட்ட 14 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 6 குழந்தைகள் என்றும், 2 பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரு நாட்டு பாரம்பரியப்படி இறந்தவர்கள் வாழ்க்கை அதோடு முடிவதில்லை என்றும் அவர்கள் வேறோர் உலகத்தில் பிறந்து வாழ்க்கையை தொடர்வார்கள் எனவும் நம்பப்படுகிறது.





# வலீவாவினால் பதக்க விழா இரத்து

(அக்ஷரா)

பீஜிங் ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுப் போட்டியின் மகளிர் ஒற்றையர் ஸ்கேட்டிங்கில் ரஷ்ய ஃபிகர் ஸ்கேட்டிங் வீராங்கனை கமிலா வலீவா முதல் மூன்று இடங்களுக்குள் வந்ததால் பதக்க விழா நடைபெறமாட்டாது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் எடுக்கப்பட்ட மாதிரி டிரிமெட்டாசிடின் தடைசெய்யப்பட்ட பொருளுக்கு சாதகமான முடிவைக் கொடுத்தபோது, பெப்ரவரி 8ஆம் திகதி வலீவா தற்காலிகமாக தடைசெய்யப்பட்டார். இருப்பினும், விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றம் திங்களன்று வலீவா மீது தற்காலிக இடைநீக்கத்தை விதிக்க மறுத்துவிட்டது.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி நிர்வாக சபை, விளையாட்டுக்கான நடுவர் மன்றக் குழுவின் முடிவைத் தொடர்ந்து வலீவா மீதான தற்காலிக இடைநீக்கத்தை மீண்டும் விதிக்க வேண்டாம் என்ற முடிவை எடுத்தது. பெண்களுக்கான தனிப்பட்ட போட்டியில் வலீவாவை போட்டியிட அனுமதிக்கிறது. ஆனால், ஊக்கமருந்து எதிர்ப்பு விதிமீறல் செய்யப்பட்டதா என்பது குறித்த முழு முடிவு ரஷ்ய ஊக்கமருந்து எதிர்ப்பு ஏஜென்சியின் கைகளில் உள்ளது.

அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குழுக்களின் நியாயமான நலன் கருதி, பீஜிங் 2022 ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுகளின் போது ஃபிகர் ஸ்கேட்டிங் குழு நிகழ்விற்கான பதக்க விழாவை நடத்துவது பொருத்தமாக இருக்காது, ஏனெனில், அதில் ஒருபுறம் நேர்மறையாக இருக்கும் ஒரு விளையாட்டு வீரர் அடங்கும். பெண்களுக்கான ஒற்றையர் ஸ்கேட்டிங் போட்டியில் முதல் மூன்று போட்டியாளர்களுக்குள் வலீவா இடம்பிடித்தால், பீஜிங்கில் 2022 ஒலிம்பிக் குளிர்கால விளையாட்டுகளின்போது மலர்க்கொத்து வழங்குதல் மற்றும் பதக்க விழா எதுவும் நடைபெறாது.



# "சுரேஷ் ரெய்னாவிற்கான தேவை இருப்பதாக தெரியவில்லை" — காசி விஸ்வநாதன்

2022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் மெகா ஏலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், இதில் எல்லோருக்கு அதிர்ச்சியளிக்கும் முகமாக மிஸ்டர் ஐ.பி.எல். என அழைக்கப்படும் சுரேஷ் ரெய்னா எந்தவொரு அணியாலும், குறிப்பாக சி.எஸ்.கே. அணியாலும் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இந்நிலையில், ரெய்னாவை ஏலத்தில் எடுக்காதது தொடர்பில் சி.எஸ்.கே. அணியின் தலைமை நிறைவேற்று அதிகாரி காசி விஸ்வநாதன் கருத்து தெரிவித்துள்ளார்.

"கடந்த 12 வருடங்களாக சுரேஷ் ரெய்னா சென்னை அணியின் நிலையான ஆட்டக்காரராக திகழ்ந்தார். சென்னை அணியின் மிக முக்கிய வீரர்களில் ஒருவரான சுரேஷ் ரெய்னாவை ஏலத்தில் எடுக்காதது எங்களுக்கும் மிகவும் வருத்தமாகவே இருந்தது. ஆனால், அணியின் தேவையை கருத்திற்கொண்டே வீரர்களை தெரிவுசெய்ய வேண்டும். மற்ற அனைத்தையும் விட அணியின் தேவையே முக்கியம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்."

"நாங்கள் தெரிவுசெய்து வைத்திருந்த அணியில் சுரேஷ் ரெய்னாவிற்கான தேவை இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. இதன் காரணமாகவே அவரை நாங்கள் எடுக்கவில்லை. இதேபோல் கடந்த பத்தாண்டுகளாக அணியில் இருந்துவந்த பாஃப் டு பிளசிஸையும், சுரேஷ் ரெய்னாவையும் நிச்சயமாக அனைவரும் மிஸ் செய்கிறோம். சென்னை அணியில் அவர்களது இடத்தை நிரப்புவது எளிதான காரியம் அல்ல" என தெரிவித்தார்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கை வீரரை ஏலமெடுத்து தமிழ் ரசிகர்களின் எதிர்ப்பலையை சந்திக்கும் சி.எஸ்.கே.







நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். மெகா ஏலத்தின்போது இலங்கை அணியின் இளம் சுழற்பந்துவீச்சாளரான மஹேஷ் தீக்‌ஷனவை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரூ.70 இலட்சத்திற்கு கொள்வனவு செய்தது. இது தற்போது சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்களிடத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்கள் Boycott_ChennaiSuperKings என்ற ட்ரெண்டிற்கு ட்விட்டரில் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

இதற்குக் காரணம் என்னவென்றால், ஏலம் எடுக்கப்பட்ட மஹேஷ் தீக்‌ஷன சிங்கள பின்னணி கொண்ட இலங்கையர் என்றும், தமிழர்களுக்கு சொந்தமான ஐ.பி.எல். அணியில் அவருக்கு இடம் இருக்கக்கூடாது என்றும் வாதிட்டு வருகின்றனர்.

தமிழ் பேசும் அணியாகவும், தமிழர்களின் அணியாகவும் ஆதரவைப் பெற்றுக்கொண்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, மஹேஷ் தீக்‌ஷனவை இணைத்துக்கொண்டதன் மூலமாக விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. சமூக வலைத்தளங்கள் மூலமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# அரையிறுதிக்கு தகுதிபெற்ற வட மாகாணம்



இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திரக் கிண்ண உதைபந்தாட்ட லீக் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சப்ரகமுவ மற்றும் வடமாகாண அணிகள் முதல் இரு அணிகளாக தகுதிபெற்றன.

நேற்று முன்தினம் ஆறாம் கட்ட போட்டிகள் ஆரம்பமான நிலையில் மாலை 3.30 மணிக்கு காலியில் நடைபெற்ற மத்திய – சப்ரகமுவ மாகாண அணிகளுக்கிடையிலான போட்டியில் 17ஆவது நிமிடத்தில் எம். றஸான், 45ஆவது நிமிடத்தில் எம். சிபான் ஆகியோரின் இரு கோல்களுடன் சப்ரகமுவ மாகாண அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முதல் அணியாக தகுதிபெற்றது.

அதேவேளை, மாத்தறையில் அன்றைய தினம் மாலை நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் வடக்கு - ரஜரட்ட அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 60ஆவது நிமிடத்தில் பெனால்டியில் வடமாகாண வீரர் நிதர்ஷன் முதல் கோலை அடித்தார். பதிலுக்கு 80 மற்றும் 82ஆவது நிமிடங்களில் ரஜரட்ட மாகாண அணி அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து முன்னிலை பெற்றது.

எனினும், இறுதியாக வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் வடமாகாண வீரர் நிதர்ஷன் கோலடிக்க போட்டி 2-2 என்ற கோல்கள் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. இதன் மூலம் வடமாகாண அணி இரண்டாவது அணியாக அரையிறுதிக்குத் தெரிவானது.

# சுதந்திர தின வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றிய பாலமுனை ரைஸ்டார் ரைடர்



(பாலமுனை)

பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தின வெற்றிக்கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியும், சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாலமுனை ரைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் எம்.எம். முஸம்மில் பிரதம அதிதியாகவும், ஓய்வுநிலை அதிபர் எம்.சி.ஏ. சமது, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், அக்கரைப்பற்று மாநகர சபையின் கணக்காளர் எம்.எவ்.பர்ஹான், தொழில



திபர் எஸ்.எம். அஸ்லம், கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். இப்றாஹிம், கழகத்தின் முன்னாள் தலைவர் எம்.எவ்.பர்சாத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

கரப்பந்தாட்டப் போட்டியில் 2022ஆம் ஆண்டுக்கான சுதந்திர தின கிண்ணத்தை ரைஸ்டார் ரைடர் அணியினர் தனதாக்கிக்கொண்டு சம்பியனாகத் தெரிவாகினர். இதன்போது றைஸ்டார் றைடர் அணியினருக்கான வெற்றிக்கிண்ணம் பிரதம அதிதியினால் வழங்கப்பட்டதுடன், ஓய்வுபெற்ற அதிபர் எம்.சி.ஏ.சமது, இளம் தொழிலதிபர் எஸ்.எம்.அஸ்லம் ஆகியோரும் ஏனைய அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# ஹசரங்கவுக்கு கொரோனா!



இலங்கை அணியின் விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸ், வேகப்பந்துவீச்சாளர் பினுர பெர்ணாண்டோ ஆகியோருக்கு அவுஸ்திரேலியாவில் வைத்து சில நாட்களுக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டி ஆரம்பிக்க முன்னர் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இருபதுக்கு 20 சர்வதேச தொடர் ஆரம்பிக்க முன் குசல் மெண்டிஸுக்கு கொரோனா தொற்று உறுதியான நிலையில் அவர் குணமடைந்து நேற்று அணியில் இணைந்துகொண்டார். எனினும், முதல் போட்டியின் பின்னர் கொரோனா தொற்றுக்குள்ளான பினுர பெர்னாண்டோ இன்னும் இலங்கை அணியுடன் இணையவில்லை. இந்நிலையிலேயே வனிந்து ஹசரங்கவுக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது. அடுத்து நடைபெறவுள்ள நான்காவது, ஐந்தாவது போட்டிகளில் வனிந்து ஹசரங்க விளையாடுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனத் தெரிகிறது.

# வரிசையாக மூன்று தோல்விகள்

## ஆஸி. உடனான 20 தொடரை இழந்த இலங்கை



சுற்றுலா இலங்கை அணியுடனான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி இன்னும் இரு போட்டிகள் எஞ்சியிருக்கும் நிலையில் தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் மூன்றாவது போட்டி நேற்று கன்பெராவில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 121 ஓட்டங்களை குவித்தது. தசுன் சானக்க 39 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் 25 ஓட்டங்களையும் எடுத்து அதிகபட்ச ஓட்டங்கள் குவித்தனர்.

122 என்ற இலகு வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 16.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இலங்கை அணியின் பந்துவீச்சில் மஹேஸ் தீக்‌ஷன 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஜெப்ரி வென்டர்ஸே ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது போட்டி நாளை மறுதினம் மெல்போர்னில் நடைபெறவுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7